Approved by the Text-Book Committee.

# STORIES OF : : TAMIL POETS

## PART I

BY

M. S. Thirunavukkarasu Mudaliar,

LECTURER IN TAMIL, PACHAIAPPA'S COLLEGE, MADRAS.

T.18390

T18390

R004A01

NDI PILLAI & CO.,

PUBLISHERS,

TRIPLICANE, MADRAS.

# புலவர் கதை

## முதற் பாகம்


சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்,

மணி. திருநாவுக்கரசு முதலியார்

எழுதியது.



கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

திருவல்லிக்கேணி, சென்னை.



பதிப்புரிமை]


[விலை அணு 12.

**Approved by the Text-Book Committee,**
**Vide Fort St. George Gazette, Page 478,**
*Dated 3rd June, 1924.*

# பாயிரம்

இது செந்தமிழ் நாட்டிலே தோன்றிய அரும்பெரும் புலவர்களாகிய புகழேந்தி, காளமேகம், அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலிய புலவர் அறுவர் கதைகளைக் கன்னபரம்பரைச் செய்தியையும், தனிப்பாடற்றிரட்டு, விநோதரசமஞ்சரி, தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம் முதலிய நூல்களில் உள்ள தனிப்பாடல்களையும் ஆதாரமாகக் கொண்டு கூறுவது.

இஃது ஆராய்சி நூலன்மையானும், கதையையே கூறுவதனானும் இதற்குப் 'புலவர் கதை' எனப் பெயர் சூட்டப் பட்டது. இதிற் கொள்ளப்பட்ட புலவர் வரிசை, கால முறை பற்றிய தன்று. இதில் தனிப்பாடல்களின் கருத்துக்களும், சொல் நயம், பொருள் நயங்களும் ஆங்காங்கு இனிது விளக்கப்பட்டிருக்கின்றன; ஆசிரிய வசனங்களும் பொருட் குறுதி பயக்குமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனைப் படிப்பவர், தமிழின்கண் ஆர்வமுடையவராதலோடு தமிழ் மொழியைப் பற்றிய விஷயங்கள் பலவற்றையும் அறிவர். இதில் இயற்கை வருணனைகளும், மனோபாவனையும் வேண்டிய அளவிற்குப் பொருந்தியிருக்கின்றன. இஃது இருபாலரும் படித்து இன்புறுமாறு அமைக்கப்பட்டுளது. மாணவர்க்கு இது பெரு மகிழ்ச்சியைத் தந்து, கட்டுரை எழுதுவதற்கு ஒரு சிறந்த கருவியாகும்.

இங்ஙனம்,

மணி. திருநாவுக்கரசன்.

# பொருள் அடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அந்தகக்கவி வீரராகவ முதலியார் | .... | 1 |
| 2. | பொய்யாமொழிப் புலவர் .... | .... | 30 |
| 3. | இரட்டைப் புலவர் .... | .... | 48 |
| 4. | காளமேகப் புலவர் .... | .... | 65 |
| 5. | படிக்காசுத் தம்பிரான் .... | .... | 99 |
| 6. | புகழேந்திப் புலவர் .... | .... | 123 |

# புலவர் கதை

## 1. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.' —வள்ளுவனார்.

'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ ?' —பட்டினத்தார்.

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து,' என அவ்வையாராகிய அருந்தமிழ் மூதாட்டியாரால் எடுத்திசைக்கப்பட்ட பேரிசை வாய்ந்தது தொண்டை நாடு. பால்போலத் தெள்ளிய நீரையுடைய பாலாறு பாய்ந்து அந்நாட்டை வளம்படுத்தும். அதன்கண் பாலியாற்றின் கரை மருங்கிலே பூதூர் என்னுஞ் சிற்றூர் ஒன்றுளது. அப்பதி, அதன் நான்கு புடைகளிலும் அழகிய பல பூஞ்சோலைகளாலும், நீர் வாய்க்கால்களாலும் சூழப்பட்டு ஒரு நந்தவனம்போல் விளங்கும். நதி மூன்று பாலும் வளைந்து ஓடுதலின், அஃது ஒரு துருத்திபோலவும் இலங்கும். அங்கு மா, பலா, வாழை, தென்னை முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து செழும்பயனை நல்கும். பூவை, கிளி, புறா முதலிய பறவைகள் ஆங்காங்கு மரக்கிளைகளிலும், பொந்து

களிலும் கூடுகட்டி இனிது வாழும். அவ்வூர் வேளாண் குடியினரால் விளங்கித் திகழும். ஆங்கு வதிந்த மேழிச் செல்வர் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய நல்லறங்களை வழி வழிக் கொண்ட வள்ளியோராதலின், புலாலுண்போரும் அவருக்கு அஞ்சி அதனை ஒழித்தனர். அதனால் வாய்க்கால்களில் கயல்மீனும், கெண்டையும் அச்சமின்றிப் பாவையர் கண்கள் போலப் பிறழ்ந்துலாவின. குருகு, காடை முதலிய புள்ளினங்களும் மக்கட் பகையின்றி இரை தேர்ந்து இன்புற்று வாழ்ந்தன. கொலைப்பாதகராகிய வேடுவரும் அவ்வூர்த் தலைவருக்கு அஞ்சி ஆங்குச் சென்று வேட்டையாடத் துணிந்திலர். நன்செய் நிலங்களில் வானம்பாடி கூடுகட்டி முட்டையிட்டுப் பைங்கூழ் அறுவடையாவதற்குள் குஞ்சு பொரித்துச் செல்லும். அவ்வூர் வாழ்வார் அனைவரும் ஒற்றுமை, ஒப்புரவு, அன்பு முதலிய அருங்குணம் வாய்ந்து தமக்கு நேரும் வழக்குகளைத் தாமே தீர்த்துக்கொண்டு நன்றுறைவர். பிறர்க்கென்றே உடம்பெடுத்து மக்கட்கு எல்லா வகையாலும் உழைக்கும் எருதுகளும், தம் அன்பைச் சொறிவதுபோலச் செழுமையான தீம்பாலைச் சொரிந்து மன்பதையை ஊட்டும் ஆனிரைகளும் மேய்தற்கேற்ற மேய்கால்களும் அப்பதியின்கண் வேண்டிய வளவிற்கு இருந்தமையான், அவ்விலங்குகளும் அவலக்கவலையின்றி இனிது வாழ்ந்தன.

பறவைகள் தத்தஞ் சேக்கை பயமின்றி வாழும்; மீன்கள்
உறவுடன் அச்ச மின்றி யுவகையிற கரையு லாவும்;
கறவைகள் செம்புல் மேய்ந்து கனிவுடன் தீம்பால் காலும்;
நறவினைச் சொரியுஞ் சோலை நலங்கனி பூதூ ரென்றும்.

இத்தகைய பழம்பதியிலே வேளாண் தலைவராகிய **வடுகநாத முதலியார்** என்பவர் ஒருவர் இருந்தார். அவர், தம் கற்பிற் சிறந்த மனைவியாரோடு இல்லறம் நடாத்தி வருங்கால், அவ் வம்மையார் ஓர் ஆண் மகவைக் கருவுயிர்த்தனர். அப்பச்சிளங் குழவி எல்லாவுறுப்புக்களுஞ் செவ்வனந் திரண்டு அழகுடன் விளங்கியதேனும், அந்தோ! இரண்டு கண்ணுமின்றிக் குருடாயிருந்தது. அதுகண்ட பெற்றோர் இருவரும் கண்ணில்லார் கண் பெற்றிழந்தாற்போலப் பெருந்துன்பம் உழந்தனர். அவர் ஒருகால் தெய்வத்தை நோவர்; மற்றொருகால் தம் வினைப்பயனை நோக்கி வெறுப்பர்; வேறொருகால் தெய்வம் உண்டோ இன்றோ என ஐயங்கொள்வர்; பிறிதொருகால் தமது செயலின்மையை எண்ணி யெண்ணி மக்கட் பிறப்பின் இழிதகவை எள்ளுவர். இவ்வாறு அவர் நாட்பல செல்லச் செல்லக் காலம் என்னும் உயிர் மருத்துவன் சிறிது சிறிதாகத் தேற்றத் தெளிந்து ஒருவாறு துயராறி யிருந்தனர்.

சின்னாட் கழிந்ததும், முதலியார் தம் சேய்க்கு நாமகரணஞ்செய்ய நெருங்கிய சுற்றத்தினர் இரண்டொருவரை மட்டும் வருவித்து அவருடன் உசாவினர். அப்போது முதியாள் ஒருத்தி, 'இவனுக்கு **வீரராகவன்** என்று நாமம் சூட்டுங்கள்; சிலநாளில் இவனுக்குக் கண் தெரியும்; அஞ்சவேண்டா; என் சொல்லைக் கேளுங்கள்; யாதொரு குறைவும் வாராது. அம்மா, இவ்வாறு சொல்லும்போதே என் உரோமம் சிலிர்க்கிறது,' என்று ஆவேசங் கொண்டவள் போலப் பேசினாள். இதனைக் கேட்ட வடுகநாத முதலியார் தாம் மரபிற் சைவரேனும், மதவைராக்கியம் இல்லாதவரானதால் எங்ஙனமேனும் தம் இனிய மகன் விழி பெற்றால் சாலுமென உட்கொண்டு அதற் கிசைந்தனர். பின் உற்றார்

அனைவரும் அம்மைந்தனுக்கு வீரராகவன் என்னும் நாமத்தைச் சூட்டி, உண்டு களித்துத் தாம்பூலம் பெற்றுச் செல்வுழிச் சென்றனர்.

அவ்வருமந்த மகவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. அதன் விளையாட்டும், மழலை மொழியும், தளர்நடைச் செவ்வியும் பெற்றோருக்கும் மற்றோருக்கும் இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கே தந்தன. மழலையமுதம் நுகரும் இருமுது குரவரும் உடனே காட்சியின்பம் இழந்த தமது விழிகளைப் பழிப்பர். குறுகுறு தளர் நடையையும், சிறுகை நீட்டலையும், இடலையுந் தொடலையும், கௌவலையும் துழத்தலையும் தமது மைந்தன் செய்தலைக் காணும் பெற்றோர் இன்ப மகிழ்ச்சி யெய்தாது, குருட்டுத் தன்மையால் இச்செயல்களைத் தம் காதலன் புரிவதாக வெண்ணி மயங்கிப் புலம்புவர். ஆயினும், அப்புதல்வனை நோக்கும் அவர்தம் உறவின்முறையார் அவன் நுண்ணறிவு உடையா னென்றும், குறைவின்றிச் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்வா னென்றும், அவ்வப் போது அவர்கட்குத் தேற்றரவு கூறி வருவர்.

இவ்வாறு வீரராகவன் எழுத்தறிவிக்கும் ஐந்தாம் பருவம் எய்தினன். 'இவனுக்குக் கல்வி புகட்டுமாறு யாங்ஙனம்?" என நீடுநினைந்து வருந்தினர் வடுகநாதர். ஒரு நாள், அவருடைய வாழ்க்கைத் துணைவி, தம் கணவனாரைக் குறுகி, 'இன்னுயிர்த் தலைவ, நம் அருந்தவச் செல்வற்குக் கல்வி புகட்ட இயலுமோ? அவனுடன் பிறந்த ஆறுமுகனுக்கும் அருணகிரிக்கும் நாளைத் தைப் பூசத்தில் சுவடி தூக்கப்போகின்றனராம். அது கேட்டது முதல் என் நெஞ்சம் நீராயுருகுகின்றது,' என்றனள்.

அதுகேட்ட முதலியார் வெந்த புண்ணில் வேலுருவியதுபோல அல்லலுற்றிரங்கித் தம் காதலஞ் செல்வியைப் பார்த்து, 'கண்மணி போல்வாய், நாம் என் செய்வோம்; இறைவன் திருவருள் அவ்வாறு முடிந்தது,' என்றுரைத்துத் தமது விழிநிறைகொண்ட கண்ணீரை மனைவி காணவண்ணங் கரந்து வருந்தி நின்றனர். இச்செவ்வியில் வீரராகவன் பெற்றோரைத் தேடிக்கொண்டு ஆண்டு வந்தனன். அப்போது தாயார் அவனை எடுத்தணைத்து முத்தமிட்டு, 'என் கண்மணியே, உன்னுடன் பிறந்தார் அனைவரும் நாளை பள்ளிக்குச் சென்று எழுத்துப் பயிலப் போகின்றனர். நீ கற்பது எவ்வாறு? என்பது தோன்றாமல் நாங்கள் திகைக்கின்றோம்,' என மொழிந்து வருந்தினள். இது செவியில் நுழைந்ததும் வீரராகவன், தன் அன்னையை நோக்கி, 'அம்மா, வாத்தியார் எழுத்துக்களை என் முதுகில் எழுதினால் நான் தெரிந்துகொள்வேன்; நீங்கள் என்னையும் பள்ளிக்கூடம் அனுப்புங்கள்,' என்று விரைந்து விடையிறுத்தனன்.'

அம்மொழியை ஆவலுடன் கேட்ட இருமுது குரவர் பெருங்களி துளும்பினவராய் மீண்டும் மகனை நோக்கி, 'அப்பா, அறிவின் செல்வமே, எழுத்தை மட்டும் தெரிந்துகொண்டால் போதுமோ? நூல்களை முதுகிலே எங்ஙனம் எழுதிக் கற்க வியலும்?' என்றனர். அதற்கு வீரராகவன் தம் பெற்றோரை நோக்கி, 'பள்ளிக்கூடத்திலே மற்றப் பிள்ளைகள் படிப்பதைக் கேட்டுக் கொண்டே நான் எல்லாம் தெரிந்துகொள்வேன்,' என்றான். அச்சொல்லைக் கேட்ட பெற்றோர் தமது ஆருயிர்ப் புதல்வன் மதிநுட்பத்தைப் பெரிதும் வியந்து பேருவகை பூத்தனர்.

பின் தைப்பூசத் திருநாளில் முதலியார் தம் மைந்தனை யும் மற்றப் பிள்ளைகளோடு பள்ளிக்கு வைத்தனர். தம் மகன் நுண்ணறிவை நன்குணர்ந்திருத்தலின், வடுகநாதர் ஊரார் கூறும் பலப்பல வீணுரையைப் பொருட்படுத்த வில்லை. பூதூரின்கண் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் உண்டு. அவண் ஓர் உபாத்தியாயர் பெரும் பிரப்பங்கழி ஒன்றை ஏந்திக்கொண்டு ஓரிடத்தே அமர்ந்திருப்பர்; சட்டம்பிள்ளை ஒருவன் பிள்ளைகட்குச் சட்டம் வைத்துத் தருவான்; அவனே கீழ் வகுப்பிலே உள்ள பிள்ளைகட்குப் பாடங் கற் பிப்பான். யாரேனும் ஒரு மாணவன் பேசினால் உபாத்தி யாயர் வரிசையாகவுள்ள அனைவரையும் சேர்த்து அடித்தல் அத்திண்ணைப் பள்ளிக்கூடத்தின் தருமம். ஆண்டுத் திவா கரம், நிகண்டு, அந்தாதி, நாலடியார் முதலியன ஒருவாறு கற்பிக்கப்படும். நூல்களுக்குப் பொருள் தெரிந்தாலும் தெரியாவிடினும் ஒவ்வொரு நூலையும் முதலிலிருந்து முடிவு வரையில் பிள்ளைகள் உரையோடு 'இதன் பொருள்' என்று தொடங்கி 'என்றவாறு' என்ற வரையில் நெட்டுருச் செய்து ஒப்பிக்கும்படி செய்விப்பதில் அக்கணக்காயர் நிபு ணர். அங்ஙனம் செய்வதற்கு எத்தகைய தண்டனையே னும் பிள்ளைகளுக்குச் செய்வதற்கு அவர் பின்னிடார். பிள் ளைகளின் தந்தைமாரும் உபாத்தியாயரைக் காணுந்தோறும் தம்மைந்தர் இரண்டு கண்களை மட்டும் விட்டுவிட்டுத் தோலை உரித்து விடும்படி வேண்டிக்கொண்டு செல்வர். அன்னோர் அங்ஙனம் கேட்டுக் கொள்ளாவிடின் அவ்வுபாத்தியாயர் பிள்ளைகளின் இரண்டு கண்களையுங்கூட உரித்து விடுவார் போலும்! வீரராகவன் இத்தகைய பள்ளியின்கண் தமிழ் நெடுங்கணக்கு முழுவதும் முதுகிலேயே எழுதிப் பயின்று, பின் உபாத்தியாயருக்குத் தெரிந்த நூல்கள் பலவற்றையும்

பிறனொருவன் ஏடு வாசிக்கக் கற்றுத் தேர்ந்தான். அவன் கற்குந் திறனையும், நுட்ப மதியையும், நினைவின் ஆற்றலையும் வியவாதார் நயவாதார் இலர்.

பின்னர்ச் சிறிது காலஞ் சென்றதும் வடுகநாத முதலியார்,

'பட்டாளம் நட்டாறு பழமத்தூர் எதிர்நோக்கு
ஈசூரும் பூதூரும் என்றைக்கும் அழும்பு.'

என்னும் பழமொழிப்படி பூதூர் பாலியாற்றில் வெள்ளம் வருந்தோறும் வெள்ளக்காட்டால் துன்புறுதலை நோக்கி, அதனை விடுத்துப் 'பொற்களந்தைப்பதி யென்று புகழ் பெற்ற பொன்விளைந்த களத்தூரைத் தமது இருப்பிடமாக அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர்.

சில்லாண்டுகள் சென்றதும், வீரராகவன் தான் காஞ்சிமா நகரஞ் சென்று ஆங்குச் சிறந்து திகழ்ந்த புலவர் பெருமக்களை அடுத்து, அரும்பெரு நூல்களைக் கற்கவேண்டுமெனத் தனது கருத்தைத் தந்தையாருக்கு அறிவித்து, நன்னாள் ஒன்றிலே ஏடு வாசிப்பவன் ஒருவனுடன் திருவேகம்பத்தை யடைந்தனன். ஆங்கண் சிறந்த புலவர் ஒருவரை அணுகி அவர்பால் முதன் முதல் கற்கத்தக்க நூல்கள்பலவற்றையும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பெருங்காப்பியங்களையும், நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கணங்களையும், திருக்குறள், சங்கச்செய்யுட்கள் முதலியவற்றையும் தன்னுள்ளமே ஏடாகவெழுதிக் கற்றுப் புலமை நிரம்பினன். கல்வியும், அறிவும், குணமும் உடன் முதிர வீரராகவன் காளைப் பருவம் முதிர்ந்தனன். அவன் ஒழுக்கத்தையும், அழகிய குணத்தையுங் கண்ட முதுமக்களும் 'அவன்' என ஒருமையாற் கூற அஞ்சி, 'முதலியார்'

'முதலியார்' என்று மதிப்புடன் கூறுவாராயினர். வீராராகவ முதலியார் செய்யுட் பழக்கஞ் செய்யத் தலைப்பட்டுப் பல பாட்டுக்களைப் பாடினர். அப்பாட்டுக்கள் முதலிலேயே நற்பெரும் பாவலர் பாக்களை யொத்துச் சொற்சுவையோடு பொருட்சுவை பொருந்தி யிருந்தன. அவ்வியல்பைக் கண்டு மகிழ்ந்த கச்சி நகரத்துப் புலவர்கள், அவரைக் 'கவிவீரராகவ முதலியார்' என அழைக்கத் தொடங்கினர். அந்தகரும் கவியும் ஆனதால் ஒரு சிலர் 'அந்தகக்கவி வீரராகவ முதலியா' ரெனவும் அறைவர். கவிராயர் பின்னர்த் தமக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள இசை யுணர்ச்சியை மிகுதிப்படுத்த விழைந்து வீணைப்பயிற்சி செய்யத் தொடங்கி இசைத்தமிழ்ப் புலமையும் பெற்றார். இங்ஙனம் கவிவீரராகவர் எவரும் மீக்கூறச் சிறப்பும் சீரும் பொருந்தச் சிறிது காலம் அங்குறைவா ராயினர். அப்போது அவர் புலமையை மெச்சிக் கந்தப்புராணம் பாடிய கச்சியப்பர்,

பொங்குதமிழ் அயோத்தியில்வாழ் தசரதனென்
பேரிடத்தும் பூதூர் வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவர்இருவர்
தோன்றி னரால்
அங்கொருவன் ஒருகலைமான் எய்திடப்போய்
வசைப்பெற்றான் அவனி பாலன்
இங்கொருவன் பல்கலைமான் எய்திடப்போய்க்
கவியினால் இசைபெற் றனே.

என ஒரு செய்யுள் கூறினர்.

காஞ்சீபுரத்திற் கல்வி கற்றுப் புலமை செறிந்து மீண்டு, தம்மூராகிய பொற்களந்தைப் பதியினை அடைந்த

கவிஞருக்கு மரபானும் செல்வத்தானும் ஒத்த ஓர் அழகிய மடந்தையினைப் பெற்றோர் மணம் புரிவித்தனர். அவர்தம் நாவீறுடைமையைக் கண்டும், பிறராற் கேட்டுங் கழிமகிழ் வெய்திய இருமுது குரவரும், உறவினரும் தம் கவலை யொழிந்து செருக்கித் திரிந்தனர்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.'

என்பது பொய்யாமொழி யன்றோ? இவரது மெய்ப்புகழ் தொண்டைநாடு முழுவதும் பரவிப் பரிமளித்தது. சிறிது காலஞ் சென்றபின் நம் பாவலருக்குத் தாய் தந்தையர் இருவரும் இம்மண்ணுலக வாழ்வை நீத்துப் பொன்னுலக வாழ்வை யடைந்தனர். அக்காலத்துக் கவிஞர் பெருமான் இன்னற் கடலுள் அழுந்திக் கரைகாணாது திகைத்தனர். பின் இறைவன் திருவருளை யுன்னி ஒருவாறு தேறி யிருந்தனர். கவிஞர் தம் அருமை மனைவியோடு,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.'

என்ற பெருநாவலர் பொருண்மொழிக் கிலக்காக அறம் புரிந்து வாழு நாட்களில், ஒரு நாள் கவிராயர் புறத்தே சென்று மீண்டும் இல்லம் புகுந்தனர். அப்போது அவர் மனைவி, மாதர் சிலருடன் அமர்ந்து வீணுரைகளைக் கரும்பு போலச் சுவைக்குமாறு பேசிக்கொண் டிருந்தனள். அவள், வார்த்தையின் சுவையிலே தோய்ந்திருந்தமையால் தன் கணவனார் வருதலையும் காணாளாயினள். அப்பொழுது முதலியார் வருகையை அறிந்த பாவை ஒருத்தி, அவர்

தம் இல்லாட் குணர்த்த, அம்மடவாள் அவர் பெருமை குறி யாது, 'வந்தாலென்ன? புலமை பெற்றதனால் வளநாடும் இளங்கன்றும் பெற்று வந்தனரோ?' என்று சரசந் தோன் றப் புன்சிரிப்பு செய்து சிறிது இகழ்ந்துரைத்தனள். கற்றோர் பெருமையை மற்றோர் அறியாமையும், அவரை இகழ்தலும் இவ்வுலகத் தியற்கையே யன்றோ! அது புலவர் செவியில் சுருக்கெனப் பாய்ந்தது. அத்தீச் சொல் பொறு ராய்த் தாம் வேற்றிடஞ் சென்று சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்து,

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.'

என்னுந் தமிழ்மறையின் பொருளைக் கூர்ந்து மனங்கொண்டு, பொருளீட்டும் கருத்துடையாராய்த் தம் மாணவகன் ஒருவனோடு அக்கணமே வீட்டைவிட் டகன்றனர். அகன்ற வர் தம் நண்பர் ஒருவரது மனையை அடைந்து, சிறிது கட் டமுது தரும்படி கேட்டுப் பெற்றுக்கொண்டு தேசயாத் திரை செய்யத் தொடங்கினர். இஃதறிந்த அவர்தம் மனைவி அஞ்சி, நடுநடுங்கிக் கையை முறித்துக்கொண்டு, 'அந்தோ! அறியாது செய்த பிழைக்கு என்ன செய்வேன்? விளையாட்டு வினையாக முடிந்ததே,' எனக் கவலை கூர்ந்து, தன் கொழுநர் பால் உற்றாரைச்சேர்ப்பித்துத்தனது குற்றத்தைப் பொறுத் தருளுமாறு வேண்டினள். அவ்வாறு பலரும் அவரிடஞ் சென்று வேண்டியும் கவிராயர், 'தேசயாத்திரை செய் யாது மனைக்கு மீளேன். இது திருவருள் இசைவால் நேர்ந் ததே யன்றி வேறன்று. என் மனைவிமீது எனக்கு எத் தகைய வெகுட்சியு மின்று,' என்று கூறி, அவர் எல்லாரை யும் போக்கினர், அவர்களும் ஒருவாறு அவ்வுரையை

ஒப்புக்கொண்டு, கவிஞர் கிழத்தியிடம் சென்று, அவர் கருத்தை உணர்த்தி அவளுக்கு ஆறுதல் கூறினர்.

இங்ஙனம் தேசயாத்திரை செய்யத் தொடங்கி வழிக்கொண்டு பிரயாணம் செய்து வருகையில், வழியிலுள்ள ஒரு தாமரைத் தடாகத் தருகே உண்ணுதற்கு எண்ணித் தங்கினர். மாணவகன் குளத்துள் இறங்கித் தாமரையிலை பறித்து வரச் சென்றான். அப்போது ஒரு நாய் மெல்லனப் புகுந்து, கட்டமுதைக் கவ்விக்கொண்டு ஓடிற்று. புலவர் செஞ்சொல்லை நினைந்துருகி மனப்பழக்கஞ் செய்துகொண்டிருந்தனர். நினைவும் மறந்து, கண்ணுங் குருடாக விருந்தமையான் தோட்கோப்பு நாயின் வாய்க்கோப் பாயினமையைப் புலவர் அறிந்திலர். மாணவன் இலையுடன் வந்து ஆற்றுணவைப் பார்க்க, அதனை நாய் கொண்டு சென்று, மூட்டையை வாயால் சிதைத் துண்ணுதலைக் கண்டு பாவலருக்குப் பகர்ந்தனன். அப்போது அவர்,

சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று ; நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

என ஒரு செய்யுளை நகைச்சுவையாகப் பா[illegible] செயலை வியந்து வாளா திருந்தனர்.

'குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்வளை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.'

என்ற சீத்தலைச் சாத்தனார் திருவாக்கின்படி பசி கடுகப்

புலவர் மெய் சோர்ந்து, வாய் சோர்ந்து, அறிவும் சோர்ந்து, வழிவந்த வருத்தத்தாலும் இளைப்பாலும் ஆண்டிருந்த பழு மரத்தின் கீழே தமது துணியைப் பாயலாக விரித்து, அதன்மேல் படுத்துக் கண்வளர்ந்தனர். அக்காலை வழிப் பிரயாணஞ் செய்திருந்த வேளாண் செல்வர் ஒருவர் அக் குளக்கரையில் களைப்பாறுவான் இறங்கினர். அவர் கவிராய ரைக் கண்டு அவரிடம் துண்ணெனச் சென்று, அவருக்கு முகமனுரைத்து, உணவு கொள்ளுமாறு வேண்டித் தாம் கொணர்ந்த பல வகைப்பட்ட ததியோதனம், புளியோரை, சருக்கரைப்பொங்கல், மிளகுபொங்கல், எலுமிச்சம்பழச் சாதம் முதலிய சித்திரான்னங்களையும், தேங்குழல், மிளகு வடை, பொரி விளங்காய் உருண்டை, பாகுசேர்ந்த அவல் முதலிய தின்பண்டங்களையும், வாழை, பலா, மா முதலிய கனி வகைகளையும் மிக்க உபசாரத்துடன் ஊட்டி, துவர்க் காய்த் தூளும், இளங்கால் வெற்றிலையும் தந்து, அவருடன் அளவளாவினர். அம்முதலியார் தாம் இராமேசுவர யாத் திரை செய்யப் புறப்பட்டமையைக் கவிஞருக்குச் செப்பி அவரையும் உடன் வருமாறு வற்புறுத்தி அழைத்துக் கொண்டு, புலவர் விருப்பப்படி சோணாட்டிலே அவரை விடுத்துத் தஞ்செலவுமேற் சென்றனர்.

சோழ நாட்டிலே சிலநாள் வைகி, ஆண்டு மொழிக்கு மொழி தித்திப்பாகப் பாடிய சைவசமய குரவரால் திருப் பாடல் பெற்ற பெருமை மிக்க திப்பிய தலங்களாகிய தில்லை, சீகாழி, திருவாரூர், திருவையாறு முதலியவற்றைக் கண்டு வணங்கிப் புலவர் ஈழநாட்டை அடைந்தனர்.

அக்காலத்து அதன் வடபாகத்தைப் பரராச சிங்கம் என்னுந் தமிழவரசன் அரசாண்டு வந்தான். அவர் அவண்

சென்று வேந்தர் பெருமான் திருமுன்னர்ச் செல்லுதற்குப் பல நாள் காத்திருந்தனர். வீரராகவ முதலியார் இயற்றமிழ்ப் புலமையே யன்றி இசைத் தமிழ்ப் புலமையும் வாய்ந்தவர். யாழ் வாசிப்பதில் அவர் பெருந்திறல் படைத்தவர் என்ற செய்தி எங்கும் எட்டிற்று. அதனால் பலரும் புலவரைச் சூழ்ந்து அவர் கலைத்திறனை அறிய விரும்பினர். கவிஞர் அதற்கிணங்கித் தம் புலமையைப் புலப்படுத்தினர். அவர் செந்நாப் புலமையையும், யாழிசையையும் அப்பதியிலுள்ள பெருமக்கள் அனைவரும் அறிந்து வியந்து கொண்டாடினர். ஆயினும், மன்னவன் பேட்டி மட்டும் அவருக்கு நெடுநாட் காறும் கிடைத்திலது. கவிஞரது அரிய பெரிய செயல்களை வேத்தவைப் புலவர் பலரும் தெரிந்திருந்தும் அழுக்காற்றால் அரசற்கு அவற்றை அறிவித்திலர்.

இஃதிவ்வாறாக, அரையன் பெருந்தேவி நாவலர் செய்தி முற்றுங் குறைவறக் கேட்டுக் கழிபேருவகை எய்தி, அவரைத் தன் காதலனாகிய வேந்தன் காணாதிருத்தலைக் குறித்து முனிந்து, அக்கால வழக்கப்படி அவனுடன் ஊடுவாளாயினள். இறைவன் அவள் பிணங்கியமைக்குக் காரணம் இற்றென அறிந்திலன். புரவலன் எத்துணையோ நன்மொழிகள் கூறி யுணர்த்தியும் அது பயன் பட்டிலது. பின் காவலன் அவ்விடம் விட்டகன்று தன் ஆருயிர்த் தலைவியினது புலவியின் முதலை நாடி நின்றனன். மறுநாள் மன்னன் தனது இளமரக்காவை யடைந்து, அங்குள்ள அழகுகளை யெல்லாம் உற்று நோக்கி உவகை துளும்பினன். அக்கால் ஒரு மரப் பொந்தில் கிள்ளை யொன்று கூடு கட்டியிருந்தது. அம்மரத் தருகே வாழை மரங்கள் செறிந்து, குருத்தீன்று பச்சைப்

பசேரெனப் பார்ப்பவர் கண்களைப் பறிப்பனபோலத் திகழ்ந்து தோன்றின. கிளி குஞ்சு பொறித்திருந்தது. அக்குஞ்சுகளுக்கு இரை தேடும் பொருட்டுத் தாய்ப்பறவை வெளிச் சென்றிருந்தது. தாயின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்த பார்ப்புக்கள் பஞ்சரத்தினின்றும் தம் குறுந் தலைகளைப் பைய நீட்டி எட்டிப் பார்த்தன. அப்போது கதலிக் குருத்தொன்று அம்மரப்பொந்துக்கு நேரே காற்றால் அசைய வளைந்து, அம்மரப் பொந்தைத் தொடுவது போலச் சாய்ந்தது. அது கண்ட குஞ்சுகள் குருத்துப் பசிய தாய்ச் சுருண்டு மேலே பாய்வதுபோல வருதலின், அதனைப் பாம் பெனப்பிறழவுணர்ந்து உள்ளே தந்தலைகளை இழுத்துக்கொண் டன; குருத்து மீண்டு சென்றதைக் கண்டு மறுவலும் தம் தலைகளை நீட்டின; பின்னரும் குருத்துச் சாயக் கிளிப்பிள்ளைகள் உள்ளே பதுங்கின. இவ்வினிய காட்சியைக் காணுந்தோறும் அத்தோன்றல் இயற்கையமைப்பின் வனப்பை வியந்து நணியுவகை பூத்தான். எனினும், கிள்ளைப் பிள்ளைகளின் அச்சத்திற்குக் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. அதனால், அவனுக்குக் கவற்சி பெரிதாயிற்று. அரசன் அன்று அத்தாணி மண்டபங் குறுகியதும் ஆங்கு வீற்றிருந்த கழகப் புலவர்களை நோக்கி, 'அருந்தமிழ்ப் புலவீர், என் மனக்கவலை இன்னதென நும் நுண்மாண் நுழைபுலனாற் கண்டுரைமின்,' என்றான். பாவலர் யாவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர்.

பின் அந்நாவலருள் ஒருவர் செம்மலைச் செவ்வன் நோக்கி, 'வேந்தர் பெருமானே, தமது பேட்டியைக் காணப் பல நாளாகக் காத்திருக்கும் வீரராகவ முதலியார் என்னுந் தமிழ்நாட்டுப் புலவர் கண்டசுத்தி பாடுவதில் அதிசமர்த்தர்.

அவரைத் தருவித்தால், அவர் நம் உள்ளக் கிடையை உள்ளவாறு உரைக்கக் கூடும்', என்றனர். அதனைச் செவியேற்ற மன்னன் அவ்வாறே உடன்பட்டுக் கவி வீரராகவ முதலியாரை வருவித்தான். அவ்வேளை ஆண்டிருந்த மூதுமக்களில் சிலர் அரசன் அந்தகரைக் காணலாகாதென்னும் நியாயத்தைக் காட்டிக் கவிவாணருக்கும் அரையனுக்கும் குறுக்கே ஒருதிரை யிடுவித்தனர். கவிராயரும் புவிராயன் அவைக் கண்ணே புகுந்தனர்.

அதுகாலை முதலியார் மாணவகன், அங்கே திரையிடப் பட்டிருந்த செய்தியைப் பாவாணருக்குக் குறிப்பிக்கக் கருதி, 'சிவசிதம்பரம்' என்று இருமுறைகூறி, அவருக்கென இடப்பட்டிருந்த இருக்கையில் அவரை இருத்தினன். அதனைத் தெள்ளிதின் உணர்ந்த கவிஞர், 'அண்ணுமலை' என இருமுறை கூறித் திருவருளைச் சிந்தித்தனர். அத்திரையில் உடனே தீப்பற்றிக் கொள்ள, ஏவலர் அதனை அறுத்து வீழ்த்தினர். அதனைக் கண்டோர் புலவர்பால் அச்சமும் வியப்பும் கொண்டு ஒருபால் ஒதுங்கினர். அரையன் அவரை அணுகினன். பின்னும் அவரைத் தேர்ச்சி செய்யக் கருதி அமைச்சர், காவலன் கையில் வில்லும் அம்பும் அளித்து முதலியாரைப் பார்த்து, 'பாவலரேறே, இப்போது அரையன் கோலம் எவ்வாறுளது ? கூறுமின்', என்றனர். கேட்டலும் அவர், 'அபிராமா, இன்று நீர் வில்லை எடுத்த காரணம் யாது ? இங்கு இலங்கைக்கோமான் இல்லையே! நான் இயற்றமிழ்க் கோமான்; மாய மானும் இல்லை; நான் கல்விமானே; ஏழு மராமரங்களும் இல்லை; இங்குள்ளார் அனைவரும் நீட்டோலை வாசிக்கும் நன்மக்கள்,' என்று பலபொருள் தொனிக்கச் சுவை துறும,

வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ இங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

என்று சாதுரியமாக அரசன் கோலத்தைப் போர்க்கோல மாகத் தற்குறிப்பேற்றவணி தோன்றப் புகழ்ந்து கூறினர். யாவரும் விம்மிதமடைந்து புலவர் ஒப்பனை அழகை வியந்தனர்; பின் வேத்தவையில் அவரைத் தருவித்த காரணத்தை வெளிப்படுத்தினர். அது செவிமடுத்த கவிஞர் பெருந்தகை,

வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு
மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி
மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து

புடவிக் கயவர் தமைப்பாடிப்
பரிசு பெறுமல் திரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப்
புழுகென் றிறைத்தாற் பொறுப்பாளோ

அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட்(டு)
அகலா துறையும் அகளங்கா!

திடமுக் கடவா ரணமுகைத்த
தேவே! தேவ சிங்கமே!
திக்கு விஜயஞ் செலுத்திவரும்
செங்கோல் நடாத்தும் எங்கோவே!

என்னும் அருமையான செய்யுளை அணியுறக் காவலன் கருத் துணர்ந்து இனிது விளம்பினர். தேவியின் ஊடலுக்குக் காரணம் புலவருக்குப் பேட்டி அளியாமையே என்பது

முன்னிரண் டடிகளிலும், கிளிப் பார்ப்புக்கள் அஞ்சியது வாழைக் குருத்தைப் பாம்பென வெண்ணியதே என்பது பின்னிரண் டடிகளிலும் பொதிந் திருத்தலைக் கண்ட மன்னவன் அளவிறந்த உவகை வெள்ளத் தழுந்திப் புலவர்ருக்குப் பற்பல வரிசைகளைப் பொற்பந்தம், யானைக்கன்று முதலியவற்றுடன் பாராட்டி வழங்கினன். புலவர் பொற்பந்தம் பெற்றபோது,

பொங்குமிடி யின்பந்தம் போயதே என்கவிதைக்
கெங்கும் விருதுபந்தம் எற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது.

என்று பாடி உவந்தனர். பின்னர் யானைக் கன்றும் பரிசிலாதலைக் கண்டு, 'அந்தோ! என் ஒருவாய்க்கே படும்பாட்டிற்கு அளவில்லை. இந் * நால்வாய்க்கு இரை யெங்கே தரப்புவேன்,' எனச் சொன்னயம்பட,

இல்லெனுஞ்சொல் லறியாத சீமையில்வாழ்
தானனைப்போய் யாழ்ப்பா ணன்யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும்
பழந்தூசும் பாலி யாமற்
கொல்லவினைந் ததனது நால்வாயைப்
பரிசென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்வாய்க்கும்
இரையெங்கே தரப்பு வேனே.

என்று பாடியதைக் கேட்ட இறைவன் அக்கன்று வளரும் பொருட்டு வளநாடு ஒன்றும் வழங்கினன். பிறகு புலவர் சிறிது காலம் ஆண்டே உறைவாராயினர். ஈழநாட்டுப்

*நான்கு வாய் ; யானை.

புலவர் சிலர் அவருக்குச் சில வினுக்களை விடுப்ப, அவர் அவை கட்குத் தக்க விடை யிறுத்தனர். அவ்வினுவிடைகள் வருமாறு :

விஞ :—உதிர முண்ணும் பறவையாது ?

விடை :—துக்கம்.

விஞ :—பசும்பால் என்னும் பண்புத் தொகைக்குப் பொருள் என்ன ?

விடை :—கார்காலத்து வெள்ளாட்டுப் பால்.

விஞ :—பங்கமின் மாது பசுமஞ்சள் நன்றிழந்தும்
மங்கலமும் நன்கலமும் மற்றிழக்காள்

விடை :— —சங்கையென்ன
மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

இவ்விடைகளைக் கேட்ட புலவர்கள் மனமகிழ்ந்து கவிவாண ருக்குக் கெழுதகை நண்பராயினர்.

ஒருநாள் பரராசசிங்கன் வீரராகவ முதலியாரைத் தாம் கம்பராமாயணப் பிரசங்கம் செய்தல் வேண்டுமென விழை வுடன் கேட்டனன். அதற்கு முதலியார் இசைந்து கம்ப ராமாயணத்தைத் தருவித்து, அதினின்றுஞ் சில பாக்களை மாணவன் ஒருவன் படித்துவரத் தமது சொல்வன்மையும் மதிநுட்பமும் பரந்த புலமையும் இனிது தோன்றப் பிரசங் கித்தனர்; பின்னர் அந்நூலைப் பிரித்து ஆங்கிருந்தார் பல ரிடத்தும் பற்பல ஏடுகளைத் தந்து, அவரைப் படிக்கச்சொல் லிக் கேட்டனர்; அதன்பின் ஏடுகள் அனைத்தையும் கட்டி வைத்து விட்டுச் செல்லுமாறு அவரைப் பணித்தனர். மறு நாட் காலையில் புலவர் நிருபன் பட்டிமண்டபத்தை வழக்கம் போல அடைந்து, கவலைக் குறிப்புடன் அமர்ந்திருந்தனர்.

அப்போது அரையன் முதலியாரைப் பார்த்து, 'முத்தமிழ்ப் புலவீர், தமக்கு யாதோ கவலை இருப்பதாகத் தெரிகின்றது. அதன் காரணம் யாது? விளங்கச் சொல்லல் வேண்டும்,' என்று வினவினான். அதற்குக் கவிராயர், வேந்தனை நோக்கி, 'மன்னரேறே, நெருநல் இரவு இராமாயணப்போர் ஒப்படி செய்தேன். அதனால், இச்சோர்வு நேர்ந்தது,' என்று விடுத்தனர். அதுகேட்ட காவலன், 'அங்ஙனமாயின் கண்டு முதல் யாது?' என்றான். அதற்கு அவர், 'அரசே, அடித்தது பத்தாயிரம்; அதில் நெல் நாலாயிரம்; கல் இரண்டாயிரம்; புல் நாலாயிரம், எனக் கம்பராமாயணத்தைப்பற்றிய தமது கருத்தை நன்கு புலப்படுத்தினர். பரராச சேகரன் இராமாயணத்தின்கண் இரண்டாயிரம் செய்யுட்கள் கல்லைப்போலக் கடினமானவை என்பதும், நாலாயிரம் பாடல்கள் நெல்லைப்போலப் பதமுறுமாறு செம்பாகம் உடையன என்பதும், நாலாயிரம் பாட்டுக்கள் புல்லைப் போலப் பயன்படுவனவல்ல என்பதும் கவிஞர் கூற்றானறிந்து மகிழ்ந்து, அவரது அதிதீவிர புத்தி நுட்பத்தையும்; அவதான சக்தியையும் வியந்து,

'இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பா ளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் வடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே.'

என ஒரு சிறப்புச் செய்யுள் கூறினன்.

அன்றியும், மன்னவன் கவி வீரராகவ முதலியார்பால் வைத்திருந்த அன்பும், நன்கு மதிப்பும் சாலச் சிறந்தவை. அதனால் அவர் பாடிய வண்ணத்தைப் பாராட்டி,

'வீரகன் முத்தமிழ்க் கவிவீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒப்பத் தோன்றினல்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.'

என்றும், அவர் இயற்றிய ஆரூருலாவைக் கேட்டு அதன் சொன்னேக்கும், பொருளமைதியும், தொடை அழகும் நோக்கிப் பேருவகை வயத்தனாய்,

'புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவன் அல்லாத பேர்கவி கற்கவியே.'

என்னுமோர் செய்யுளையும் பாடினான்.

பின்னர்க் கவிவாணர் ஈழநாட்டிலே தமிழக் குடிகள் பலரைக் குடியேற்றிச் சில்லாண்டுகள் அங்கு வாழ்ந்திருந்து, அரசன்பால் விடைபெற்று அவன் அளித்த பரிசில்களுடன் தமிழ் நாட்டுக்கு மீண்டனர். அப்போது புலவர் வரும் வழியில் திருநெல்வேலியிலுள்ள கயத்தாறு என்னும் ஊர்ப் புரவலன்மீது ஒருலாப் பிரபந்தம் பலவணிகளும் பொதுளப் பாடி அரங்கேற்றினர். அதன் விஞ்சிய சுவையை வியந்து அங்கமர்ந்திருந்த அருங்கவி ஒருவர்,

'ஒட்டக்கூத் தன்கவியும் ஓங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—அட்டதிக்கும்
வீசும் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின்.'

என்னும் வெண்பாவைப் பாடினர். அப்பால் முதலியார் தமதூராகிய பொற்களந்தைப்பதி புகுந்து தம் மனைவிக்குத் தமது வருகையையும், தாம் வளநாடும் இளங்கன்றும் பெற்று

வந்ததையும் தெரிவிக்குமாறு ஆள் விடுத்தார். அதுகேட்ட மனைவி ஒருபால் மகிழ்ச்சியும், தாம் வாய் சோர்ந்து சொன்ன வார்த்தையைக் கவிராயர் ஞாபகம் வைத்திருத்தலை யறிய, மற்றொருபால் அச்சமுங் கொண்டு அவரை எதிர்கொண்டு வரவேற்றுக் கூசி நாணி ஒசிந்து பூங்கொடி போல நின்றனள். அதுகாலை வீரராகவ முதலியார் தம்மைக் காண வந்த சுற்றத்தாருக்கும், நண்பருக்கும் முகமனுரை கூறி அனுப்பிவிட்டுத் தம் இல்லாளை அருகே யழைத்து, 'பெண்மணி, நீ செய்த பிழையை மனங்கொண்டு வருந்தாதே. நானும் அதனைக் குற்றமெனக் கொண்டிலேன். அது திருவருட் சம்மதத்தான் நிகழ்ந்தது. உன்னாலன்றோ நான் இத்துணை உயர்பதவி யடைந்தேன்,' எனக் காதலியைத் தேற்றி அவள் வருத்தத்தைப் போக்கித் தாம் கண்டு கேட்ட பொருள்களை விரித்துரைத்து அன்புற்று இன்புற்றிருந்தார். அச்செல்வியும் தன் கணவனார் பக்கலிலே அமர்ந்து, தேனை வடித்துச் சொரிந்தாற்போன்ற சொற்களால் தம்மை விட்டுக் கொழுநர் சென்றதிலிருந்து நடந்தவற்றைக் கூறி மகிழ்ந்திருந்தாள். அப்பால் மனைவி தன் கேள்வரை நோக்கி, 'எனக்கு யாது கொணர்ந்தீர்?' எனக் கேட்டனர். அதற்குக் கவிவாணர் அவள்பால் ஒரு விளையாட்டைக் கருதி, தாம் யானைக்கன்று கொண்டு வந்ததை அதன் பரியாயப் பெயரால் 'களபம்' என்றார். மனைவி கலவைச் சாந்தெனக் கொண்டு 'பூசும்' என்றாள். கவி, 'மாதங்கம்' என்றார். மனைவி பெருமை பொருந்திய பொருள் எனப் பொருள் கொண்டு, 'வாழ்ந்தோம்' என்றாள். பின் கவி, 'வேழம்' என்றார். மனைவி, கரும்பென்றெண்ணித் 'தின்னும்' என்றாள். கவி, 'பகடு' என்றார். மனைவி எருதெனக் கருதி, 'நிலத்தை உழும்' என்றாள். கவி, 'கம்பமா'

என்றார். மனைவி, கம்புமாவென நினைத்து, 'களியாகும்' என்றாள், கவி கடைசியில் 'கைம்மா' என்றார். மனைவி யானையென வுணர்ந்து, இதுகாறும் கவி குறித்த பொருளைத் தான் தெரிந்து கொள்ளாமைக்காகக் கலங்கி நின்றாள். இந் நிகழ்ச்சியை அமைத்துக் கவிராயர்,

இம்பர்வா னெல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணநீ யென்றாள் பாணி
வம்பதாங் களப மென்றேன்; பூசும் என்றாள்;
மாதங்கம் என்றேன்; வாழ்ந்தோம் என்றாள்;
பம்புசீர் வேழம் என்றேன்; தின்னும் என்றாள்;
பகடு என்றேன்; உழும் என்றாள்; பழனந் தன்னைக்
கம்பமா என்றேன்; நற்களியாம் என்றாள்;
கைம்மா என்றேன்; சும்மா கலங்கினாளே.

என்னும் இனிய கவியை இயம்பினர்.

இவ்வாறு இவர் தம் மனைவியோடு மனையறம் நடாத்தி வருங்கால் இவருக்கு நோய் உண்டாயிற்று. அந்நோய்க்கு எருமைப் பால் மிகுதியும் வேண்டப்படுவதாயிற்று. அக்கால் புலவாணர் காளத்தி கிருஷ்ணப்ப வாணன் என்னும் திருமகனுக்கு,

இனிதினி தெனச்சேர சோழபாண்டியர் மெச்சும்
இச்சித மதுரவாக்கி
ஈழமண் டலமளவுந் திறைகொண்ட கவிவீர
ராகவன் விடுக்கு மோலை,
வனிதையர் விகாரமன் மதராஜ ரூபன்
மயிலை யாதிபதி சக்ர
வாளத்தி யாகிநங் காளத்தி கிருஷ்ணப்ப
வாணன் எதிர்கொண்டு காண்க.

கனதமிழ்த் துறையறி மரக்கலங்
கன்னிகா மாட நன்னூற்
கட்டுபேர் கொட்டாரம் வாணிசிங் காதனம்
கவிநாட கஞ்செய் சாலை
வினவுசிவ காதையிற் சர்க்கரை யெனத்தக்க
வினையேன் உடம்பு நோயால்
மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்ததொரு
மேதிவர விடவேணுமே.

என்றொரு சீட்டுக் கவியெழுத அச் செல்வன் உடனே பால் மேதி ஒன்றை அளிக்கப் புலவர் குறை தீர்ந்தனர்.

பின்னொருகால் செந்தமிழ்ச் செல்வர் குதிரை வேண்டிச் சேலத்தைப் பரிபாலித்து வந்த **சேழிய தரையனுக்கு,**

ஏடாயிரங் கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்,
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை :
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்,
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டு காண்க.

பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்கு அனற்பண்ணுத கோடைவெம்
படையில் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்து முடியாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல் வேண்டுமே.

என்னுஞ் சீட்டுக்கவி ஒன்று தீட்ட அவனும் பரிமா ஒன்ற னுப்பிப் பாவலர் குறை முடித்தான். அவனைக் குறித்துப் பலருஞ் சேறலையும், மற்றோரிடத்து யாருஞ் சேருதலின் மையையும் அமைத்து ஒட்டு என்னும் அலங்காரம் தோன்ற,

சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்; தண்ணீர் சுரக்கும்
ஞாலத் தகழ்வர்; கறக்கின்ற ஆவைநற் கால்தளைவர்;
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பர்; என்னீர்
சேலத்து வேந்தன் அகத்தாகந் தீர்த்த செழியனுக்கே.

என்று ஒரு செய்யுளையும் புலவர் பின்னொருகால் பாடினர். மற்றொரு கால் இவர் விசயராசன் என்னுங் கோமானைக் கண்டு மீள, அவன் இவரை விட்டுப் பிரிய மனமின்றியும், பெரியோர் பின்சென்று வழிவிட வேண்டு மென்னும் கருத்துப்பற்றியும் இவர் பல்லக்கின்பின் வந்தபோது இவர்,

திருமாலு மீசனும் பின்போயுந் தூதுசெ லத்துணிந்தும்
அருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபெங்கால்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்கும்
பெருமான் சிவிகைப்பின் சென்றான் விசயப் பிரமனுமே.

என்று பாடி அன்னான் அருங்குணச் செல்வத்தைப் பாராட் டினர்.

வேறொரு சமயம், பாவலர் இடும்பாவனம் என்னும் ஊரிலே தங்கி யிருந்தபொழுது தமக்கு நேர்ந்த இன்னல் களைக் குறித்து,

பசிமுடுகு நோவதல்லாற் பாழ்வீட்டில் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குமைந்தோம்—மிசையில்
நெடும்பாவம் யாஞ்செய்தால் நீரென்ன செய்வீர்
இடும்பா வனநாத ரே.

என்ற ஒரு பாட்டைப் புனைந்தார்.

இன்னுமொருகால் முதலியார் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத நாவலரைச் சந்தித்து அவருக்குச் சங்க நூல்களிலுள்ள விழுப்புலமையை நன்று போற்றி,

ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்பதின்ம ரென்றே யுரைப்பரோ — இம்பர்புகழ்
வன்மீக நாதன்அருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதங் நாட்சரித்தக் கால்.

என்று ஒரு பாச்செய்யுள் மொழிந்தனர்.

சிறிது காலஞ் சென்றபின் கவி வீரராகவ முதலியார் தாம் சந்திரவாணன் மீது பாடிய கோவையை அரங்கேற்றத் தொடங்கி, 'பெருநயப்புரைத்தல்' என்னுந் துறை யமைந்த,

மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சேற்றின் அமுதவயல்
மேலே முளைத்த கரும்போஇம் மங்கைக்கு மெய்யெங்குமே.

என்னுஞ் செய்யுளைச் சொல்லி வாய்மூடுமுன், ஆங்கிருந்த அம்மைச்சி என்னும் புலமை நிறைந்த தாசியொருத்தி, 'கவிராயர்க்குக் கண்தான் கெட்டது; மதியுங் கெட்டதோ?' என்றாள். அது கேட்ட கவிராயர் உடனே அவள் குறிக்கும் பொருள் இன்னதெனை அறிந்து, கையேடு வாசிக்கும் மாணவனை நோக்கி, 'அக்கொம்பை வெட்டிக் காலை நடு,' என்றனர். அவன் அஃதுணர்ந்து உடனே செய்யுளிலுள்ள சேற்றின் என்னும் பதத்தைச் சாற்றின் என மாற்றிப் படித்தான். அம்மைச்சி அவர்தம் கூர்மையைக் கொண்டாடினள். ஆண்டிருந்தார் பிறர் அக்கருத்துப் புலப்படாமையால் திகைத்துக் கவிராயரை விளக்கும்படி வேண்டினர். அவர்,

'புலவீர், அம்மைச்சி என்னும் இம்மாதரிசி, எமது பாட்டில் கரும்பு சேற்றில் முளைத்திருப்பதாகக் கூறியிருப்பது, அது புன்செய்ப் பயிராதலின் பொருந்தாதெனக் குறிப்பிட்டார். அஃதுணர்ந்த யாம் சேறு என்னுஞ் சொல் லிலுள்ள சுழியை நீக்கிச் சகரத்தின் பின் கால் கொடுத்து வாசிக்கும்படி நம் மாணவருக்குச் சொன்னோம். அக்குறிப் புணர்ந்த அவர் சேற்றில் என்பதை மாற்றிச் சாற்றில் என வாசித்தார். அதனால் அவ்வையம் அகலப்பெற்ற அம் மைச்சி களிகூர்ந்தார்,' என்று விரித்துச் சொல்லி, அப்பா வின் பொருளை எடுத்துரைத்து யாவரையும் உவப்பித்தனர். அன்று முதல் அம்மைச்சியும், கவி வீரராகவ முதலியாரும் துவர நட்புடையராயினர்.

இங்ஙனம் வாழும் நாளில், காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாள் ஆலயத்துப் பிராமணர் சிலர், அம்மைச்சியின் கல்விச் செருக்கை எங்ஙனமேனும் அடக்க வேண்டுமெனத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். திருக்கோயில் திருவிழாக்காலம் அண்மியது. அவர்களும் தம் கருத்தை முடித்துக்கொள்ள ஒரு சூழ்ச்சியை யெண்ணித் தேர்விழா வன்று, தேரை அம்மைச்சி வீட்டில் முட்டுவித்து அவளி டஞ்சென்று, வீட்டை இடித்துத் தள்ளியே தேரைச் செலுத்த வேண்டுமென வற்புறுத்தினர். உடனே அம் மைச்சி கவிவாணரைத் தருவித்துத் தனக்கு நேர்ந்ததைக் கூறி வருந்தினாள். அப்போது முதலியார், பிராமணர்களை அழைத்து, 'ஐயன்மீர், ஒரு பேதைப் பெண் வாழும் வீட்டை யிடித்தல் நேரிதன்று; வேறேதேனும் ஒரு விரகு கொண்டு தேரைக் கடாவுமின்,' என்று மெல்லென மொழிந் தனர். அவ்வந்தணர் அவள்பால் கொண்ட பகைமை கார

ணமாக அத்தகைய கேடு சூழ்ந்தவராதலின், புலவர் சொல்லுக் கிணங்காது தாம் கொண்ட கருத்தை நிறைவேற்றுவான் விரைந்தனர். அவர் தீக்குணத்தை நோக்கிய கவிஞர் வெகுண்டு வாதனை முன்னிலைப்படுத்தி,

> பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
> தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பாகக்
> கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று வந்தீர்ஈது
> அம்மைச்சி வாழும் அகம்.

என்ற பாட்டைப் பாடினர். அதுகேட்ட அவ்வேதியர் இவர் கையறம் பாடின் நாம் வாழ்வேமல்லேம் என அஞ்சி யகன்று, வேறோராற்றான் தேரைச் செலுத்திச் சென்றனர். அற்றைநாட் டொடங்கி அம்மைச்சிக்கு முதலியார் பாலிருந்த நட்புக் கனிந்து காதலாக முடிந்தது. அவள் சிறந்த புலமையும் விரிந்த அறிவும் உண்மையன்பும் கவிராயர் நெஞ்சத்தைக் கவர்ந்தன. அவளும் புலவர் புறவழகைப் பொருட்படுத்தாது அகவழகைக் கண்டு ஆராக் காதலுடையளாய் அவரைத் தெய்வம்போல் ஏற்றிப் போற்றிப்பணி விடை புரிந்து வந்தாள்.

சில நாட்கள் சென்றபின் கவிவீரராகவ முதலியார் பொற்களந்தையைச் சேர்ந்து, ஆங்குப் பல்லாண்டு இனிது வாழ்ந்து அருந்தவப் பேறாக ஒரு பெண்மகவைப் பெற்றுக் களிப்புற்றிருந்தனர். அப்போது 'திருக்கழுக்குன்றமாலை' என்னும் ஒரு பத்திச்சுவை மிகுந்த நூலைப் பாடிச் சிவாநுபூதிமானுய் விளங்கினர். அந்நூலின் அருமையை, 'கந்தரந்தாதியைப் பாராதே, கழுக்குன்றத்து மாலையை நினையாதே' என்னும் அமுதவசனம் தெளித்துரைக்கும். அதன் செய்யுள் ஒன்றை இங்குத் தருவோம் :

மாடேறு தாளும் மதியேறு சென்னியும் மாமறையோன்
ஓடேறு கையும் உடையார் தமக்கிடம் ஊருழவர்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறும் அன்னஞ் சிறகால் அணைக்குங் கழுக்குன்றமே.

சீட்டுக்கவி பாடுதலில் இவருக்கிருந்த ஆற்றலைப் புகழ்ந்து நிரஞ்சன நாதர் என்னும் புலவர்,

'சீட்டுக் கவியென்று சொல்வார் சிலரந்தத் தீட்டுக்கவி
காட்டுக் கெறித்த நிலவாகிப் போம்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்தர் உற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவன் நற்கவியே.'

என்று ஒரு கவி இசைத்தனர்.

இவர் உலக நடையை ஒட்டிச் செய்த சில செய்யுட்களுமுள. அவற்றில் இங்கே சிலவற்றைத் தருவோம்:

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றி யாகும்
அவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பி றைபோல்
தவங்குறையும் மிடியுண் டாகும்
தூய்யதாய் தந்தையர்க்குப் பொய்யு ரைத்தால்
வறுமைபிணி தொலையா வென்றும்
உய்ய அருள் தேசிகர்க்குப் பொய்யு ரைத்தால்
நரகமது வுண்மை தானே.

மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதற்கு நீதியொ டாசாரம் நண்பின் நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய் கோளுக்குக் கோள்அறிவி
லாதற் கிரட்டிப் பறிவுடையோர் செய்யும் ஆண்மைகளே.

## விநாயகர் மேல் பாடிய நிந்தாஸ்துதி

வீரஞ் சொரிகின்ற பிள்ளாய் உனக்குப்பெண் வேண்டுமென்றால்
ஆருங் கொடார் உங்கள் அப்பன் கபாலிஅம் மான்திருடன்

ஊருஞ் செங்காடு நின்றன் முகம்யானை உனக்கிளையோன்
பேருங் கடம்பன் உன்தாய் நீலி நிற்கும் பெருவயிறே.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பின்னர்ச் சிவபெருமானது சிந்துரச் சேவடியை இரண்டறக் கலந்து இனித்தனர். அவரது பிரிவைக் குறித்துக் கயத்தாற்று மன்னன்,

'முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும் வான்
மீகனுமுன் முன்னில் லாமற்
றென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும்
புற்றிடத்துஞ் சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே
கவிவீர ராக வாநீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ புகலு வாயே.'

என்னுங் கையறு நிலை பாடி மனம் வருந்தினான். இயற்கையிலேயே குருடராகப் பிறந்தும் தமது முயற்சியின் வன்மையால் கண்ணுடைய புலவர் பலரினுஞ் சிறந்த புலமை வாய்ந்து, பாவலராகிக் காவலர் பல்லோரால் பரிசு பெற்றுத் திருவருளையும் பெற்றுத் தம்பெயர் என்றும் நின்று நிலவுமாறு பல அருந்தமிழ் நூல்களையும் இயற்றிச் சிவனடி நீழல் சேர்ந்த இப்பெரியார் சரித்திரம் யாவர்க்கும் பெரிதும் மனமகிழ்ச்சியைத் தருமென்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை.

## 2. பொய்யாமொழிப் புலவர்

காப்பு

'மதிபாய் சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தேன் னுள்ளம்
உருகவிட்டு நின்ற ஒளி.'

ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டிலே செங்காட்டங் கோட்டத் துறையூரின்கண் பொய்யாமொழிப் புலவர் பிறந்தார். இவர் வயிரபுரம் என்னும் ஊரிலே தமிழாசிரியர் ஒருவர்பால் கல்வி பயின்று வந்தனர். ஆசிரியருக்கு ஒரு கொல்லையுண்டு. அதனை யவர் தம்மிடம் தமிழ் கேட்கும் மாணவரைக் கொண்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருநாள் முறைவைத்துக் காத்து வருதல் வழக்கம். ஒருநாள் பொய்யா மொழி யார் முறை வந்தது. அன்று அவர் சென்று கொல்லைக் கணித்தாயுள்ள காளி கோட்டத்தின்கண் இருந்த ஒரு பழுமரத்தின்கீழ்ப் படுத்துத் தம்மை மறந்து துயின்றனர். அந்நேரம் புலவர் அவ்வூர் அரசன் காளிங்கராயன் குதிரை, கொல்லையில் இறங்கிப் பயிரை மேய்வதாகக் கனக்கண்டு திடுக்கிட்டு விழித்து ஓடிச்சென்று கொல்லையைப் பார்க்கப் பயிரனைத்தும் குதிரையால் மேயப்பட்டிருந்ததைக் கண்டு, அஞ்சி நடுநடுங்கி, ' அந்தோ! குரவன் வெகுளுமே! என் செய்வேன்!' என்றரற்றி அழுது காளிகோட்டம் குறுகினர். குறுகித் தேவியின் திருமுன்னர் நின்று, 'எம்பெருமாட்டி,

அடியேன் குரவன் தாளால் இட்ட பணியைத் தலையாற் செய்ய வேண்டியவனாக இருந்தும், ஊழ்வினை வயத்தாலோ, பிள்ளைமையாலோ, மற்றெக் காரணத்தாலோ வினையிற் சோர்ந்து, மெய்யயர்ந்து துயின்றொழிந்தேன். கொல்லைப் பயிரை வல்லை குதிரை மேய்ந்திருக்கக் கண்டேன். ஆரியன் அறியின் என் கதி என்னாகும்?' என்று கூறி வேண்டினர். அச்சிறுவன் அருந்துயர் கண்ட அத்தேவியார் அருள் சுரந்து, செந்தாமரை போன்ற தமது திருமுக மலர்ந்து, செங்கனிவாய்த் தேனொழுகுமாறு வாய்பூத்துக் குறுநகை யரும்பி, சிறுவர் உச்சிமேல் தம் அருமைத் திருக்கரம் அமைத்து, 'மைந்த கவலற்க; எல்லாம் இனிது முடியும்,' என்று மெல்லிய இனிய மொழி நவின்று மறைந்தனர். காளிதேவி மறைந்ததும் நிகழ்ந்தன வெல்லாம் கனவோ நனவோ என்றையுற்ற பொய்யாமொழிப் புலவர் புத்துயிர் பெற்றவர் போலப் பெருகளிதுள்ளி நிற்கும்போது வாயினின்று,

வாய்த்த வயிரபுரி மாகாளி யம்மையே,
ஆய்த்த அருகாம் அணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்கன் ஏறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.

என்னும் வெண்பா உதயமாயிற்று. அச்செய்யுளைப் பாடிய துணையானே அப்பரிமா பொட்டெனை விழுந்து தொட்டெனை மாண்டது. அக்காலை ஆண்டுச் செல்வோர் இதனையுணர்ந்து தமிழ்க் கணக்காயரைக் கண்டு காவலன் பரிமா ஆவி நீத்தமையைக் கூறினர். ஆசிரியர் விரைந்து புனஞ் சென்று குதிரை இறந்திருப்பதை யுணர்ந்து, கைபிசைந்து 'அந்தோ யாதுபுரிவேன்! காவலன் ஆணை என்செயுமோ!'

என்று கவன்றுழி, பொய்யாமொழியார் தம் ஆசிரியர் படும் அல்லலை நோக்கி, முன்னர்த் தாம் செப்பிய வெண்பாவின் ஈற்றடியை மட்டும் 'குதிரை மீளக் கொண்டுவா' என மாற்றி மீண்டும் உரைத்தனர். அதனை அவர் உரைத்ததும் குதிரை உயிர்த்தெழுந்து ஆண்டிருந்த குழுவைக் கண்டு வெருண்டு கால்வாங்கிப் பறந்தது. சூழ்ந்திருந்தார் யாவரும் சொல்லொணு வியப்பும் மகிழ்வும் உடையராய்ப் பொய்யா மொழியாரின் அருஞ்செயலை ஊர் முழுதும் பரப்பினர். அப்போது ஆசிரியர் தமது மாணவனைக் கட்டி மார் புறத் தழுவி,

'பொதியில் அகத்தியனும் பொய்யா மொழியாய்ச்
சிதைவிற் புலவர் சிறப்பாய்த்—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டத் துறையூர் எனுந்தலத்துத்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.'

எனப்பாடி முத்தமிழ்ப் புலமை அகத்தியனுரே பொய்யா மொழியாய்ப் போந்தா ரென்னுங் கருத்துப் பொருந்தப் பாடி வாழ்த்தினர். அன்று தொட்டு அவருக்குப் பொய்யா மொழிப் புலவரென்னும் பெயரே பெயராய் வழங்கலா யிற்று. அவர் பிள்ளைப் பெயரும் மறைந்தொழிந்தது. பொய்யாமொழியார் அன்று முதல், கவிபாடுதலையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். அன்றி யும் அவர் செந்தமிழ் நூல்கள் பலவற்றையும் மிக விரைவில் கற்றுப் பொருள்களை அறிந்து கொண்டனர். காளியம்மை யின் கருணையோடு புலமையும் நிரம்பி நின்ற பாவலர் பெரு மையும் இன்னதெனக் கூறல் வேண்டுமோ? அவருக்குப் புகழும் மதிப்பும் எங்கும் உண்டாயின.

## கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவனோ ?

இவர் சிவபெருமான் திருவடித்தாமரைகளில் என்றும் குன்றாத பேரன்புடையராய் அவர்மீது செந்தமிழ்ச் சுவை யொழுகும் அருட்பாடல்களைப் பாடி உருகுவார். ஒரு நாள் செந்தமிழ் அமுதம் திருச்செவிமாந்த வாயூறி நிற்கும் அறுமுகப்பெருமான் அவர்பால் ஒருவிளையாட்டைக் கருதி அவர் கட்புலன் கதுவ அருட்டிருமேனி தாங்கித் தோன்றி, 'பொய்யில் புலவோய், எம்மீது ஓர் அருஞ் செய்யுள் இசைக்கற் பாலையோ ?' என்றனன். அதற்குப் புலவர் துண்ணெனத்தாம் சிவபெருமான் ஒருவரை யன்றி வேறொருவரையும் பாடலாகா தென்னும் துணிபுள்ளங் கொண்ட கற்புடைச் செல்வராதலின், 'கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவனோ ?' என்றார். அது கேட்டலும், நாணினன் போலக் கந்தவேள் கதுமென மறைந்தனன்.

சிறிது காலஞ் சென்றதும் புலவர் பாண்டிமண்டலத்திலே தஞ்சாக்கூரிலே வாழ்ந்திருந்த தஞ்சைவாணன் என்னும் ஒரு வேளாளப் பிரபுவின்மீது **கோவை** என்னும் தமிழ் வளம் கெழுமிய பிரபந்தத்தைப் பாடியெடுத்துக் கொண்டு அவனைக் காணுமாறு சென்றனர். அப்போது அவன், பாண்டியன் அமைச்சனும், படைத்தலைவனு மானதால், தன் மனைவியை வேந்தற் குற்றுழிப் பிரிந்திருந்தான். புலவர் வருகையைக் கண்ட அவன் அருமைத் தலைவி முகமும் அகமும் மலர்ந்து அவரை வரவேற்று, அவர் கருத்தை யுணர்ந்து, தாம் பாடிய நூலை அரங்கேற்றக் கேட்டு நானூறு பாக்களுக்கும் நானூறு பொற்றேங்காய்களைப் பரிசாக உருட்டினள். அம்மங்கையர்க் கரசியின் கல்வி விருப்பையும்,

நற்குணப் பெருக்கையும் மிகுதியும் வாழ்த்திப் புலவர் சென்றனர்.

இவற்றைப் பெற்றுக்கொண்டு சென்ற புலவர்பெருமான் வழிச் செல்லுகையில் பாலைவனம் ஒன்று குறுக்கிட்டது. அங்கே முருகவேள் ஒரு வேட்டுவச் சிறுவன் போலத் திருவுருக்கொண்டு நகைவேலுடன் புலவர் எதிர்த் தோன்றினன். புலவர் அவனைக் கண்டு அஞ்சி ஓரடியெடுத்து வைக்க, வேட்டுவக்குமரன் அவரை வழிமறுத்து, 'நில், நில்,' என்று கடுத்துரைத்தனன். அப்போது புலவர், 'ஐய, நான் ஒரு புலவன்,' என்று கூறினர். உடனே வேலன், 'நீ புலவனானல் பாட வல்லையோ?' என்று வினவினன். புலவர், 'பாடுவேன்,' என்றனர். முருகவேள், 'அங்ஙனமாயின் இப்பாலை வனத்தைச் சுட்டி என்மேல் நற்றுயிரங்கலாக ஒரு செய்யுள் கூறுக,' என்றனன்.

அது கேட்ட பாவலர், 'வேட்டுவன் கல்வி நலம் அறிந்தவன்போலும்! நாம் இனி அஞ்சவேண்டுவதின்று,' என வெண்ணி, அவ்வேடனை நோக்கி 'ஐயா' நும் பெயர் யாது?' என்றனர். வேள், 'என் பெயர் முட்டை' என்றான். உடனே செந்நாப் புலவர்,

> பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
> என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
> மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போல்
> கானவேன் முட்டைக்குங் காடு.

என்று பாடினர். இப்பாட்டைக் கேட்டதும் வேட்டுக்குமரன், 'புலவ, நின்மதி யிருந்தவாறென்னே? கள்ளிப்பொறி பறக்குங் காட்டிலே வேலமரத்தின் முள் வெங்தெரியாமற் கிடந்தது மிகவும் நேரிது,' என்று எள்ளி நகையாடினன்.

பின் முருகவேள், 'நான் பாடுவேன் கேள்,' என் றுரைத்து,

> 'விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
> எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
> பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
> பொய்யா மொழிப்பகைஞர் போல்.'

என்னும் பாலைப்பாடி முடித்து, 'குஞ்சியைப் பாடாத நீ முட்டையைப் பாடியது வியப்பே,' என்று முன்னிகழ்ச்சியைக் குறிப்பித்துச் சிறுநகைசெய்து திருவுருக் கரந்தனன்.

பின்பு பொய்யாமொழிப் புலவர், முருகவேள் அளப்பருங் கருணையை நினைந்து நினைந்து மனமுருகி, 'எம்பெருமான் திருக்கருணை புழுத்தலைச் சிறியேற்கும் வாய்த்ததோ' என்று பலவாறு பரவி வணங்கித் தம் வழிச் சென்றனர். சில நாட்கள் கழிந்தபின் தஞ்சைவாணன் தன் நகருக்குத் திரும்பி வந்து, மனைவியினால் புலவர் கோவை பாடி யரங்கேற்றியதைக் கேட்டு மகிழ்ந்தான். மனைவி, தான் அவருக்கு அளித்த பரிசிலைச் செப்ப, வாணன் கேட்டு, 'பெண்மணி, இங்ஙனம் செய்தல் பொருந்துமோ? அவர் வரிசை யறியாது போயினையே,' என்று கூறி உடனே ஆட்போக்கிப் புலவரைப் பரிசிலுடன் வருமாறு புரிந்தனன். பொய்யாமொழிப் புலவரும் ஐயங்கொண்டு தாம் பெற்ற பரிசிலுடன் வாணனைக் கண்டார். அப் பிரபுசிகாமணி புலவாணரைக் கனிந்த அன்போடு எதிர்சென்று, முகமன் கூறிக் கோவையை மற்றொருகால் அவரால் அரங்கேற்றுவித்துக் கேட்டு உள்ளங் குளிர்ந்து, நானூறு பொற்றேங்காய்களிலும் ஒவ்வொரு காயின் முக்கண்ணிலும் மூன்று மணி யிழைத்துப் புலவரிடம் உருட்டினான். புலவர் இன்பவாரியில் திளைத்

தனர். வாணன் மனைவியும் கணவர் கருத்தை நன்குணர்ந்தனள்.

பின்பு பாவாணர் பாண்டி மண்டலஞ் சேரவிழைந்து வழிக்கொண்டு திரிசிரபுரம் குறுகினர். அங்கே சிவபெருமான், செந்தமிழ்ப் புலவர் அந்தமில் வேடமே கொண்டு சுந்தரப் புலவர் முன்னர்த் தோன்றி,

> கோட்டாற் கொழும்பிரசம் கூத்தியதன் நடுவே
> பாட்டாற் பனைக்கைப் புகமெடுத்துக்—காட்டானை
> தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடையே
> வானீர் கரந்தான் மலை.

என்னும் சீரிய கூரிய வெண்பாட் டொன்றால் தாம் மேவியுறையுமிடம் சிராமலை எனக் குறிப்பித்து மறைந்தனர். பொய்யா மொழியார் தம் எதிரே தோன்றிக் காட்சி தந்தவன் கருணைக் கடலாகிய கண்ணுதற் பெருமானே யெனவுணர்ந்து, அப்பெருமான் என்றும் அடியார்க்கு எளிவரும் பெருமையையும், தேனூறு தமிழ்க்கு வாயூறி நிற்றலையும் பல்காற் சிந்தித்து,

> அங்கம் புலியதன் ஆடையைச் சாத்தி அரவமுடன்
> பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாள்எயிற்று
> வெங்கட் புலியைவிட் டானையைத் தேடி விதம்விதமாய்ச்
> சிங்கமிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

என்னும் ஒரு கட்டளைக் கலித்துறைச் செய்யுள் பாடிப் பரவிப் படர்ந்தனர்.

## பழைய குருடி கதவைத் திறடி

பின்பொருகால் புலவர் பெருமகன் காளையார் கோயில் என வழங்கும் திருக்கானப்பேர் என்னுஞ் சிவதலத்துக்குச்

சென்று, அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் அடிகளாரை வழிபட்டு மீளுங்கால் பெருமழை பெய்யக் கூத்தாள் என்னுந் தேவமாது ஒருத்தி அகத்தை அடைந்தனர். ஆண்டு, சிறிது நேரம் தங்கி யிருந்தபோது, அவளும் அவள் தமக்கையும் தாயும் பாட்டியும் ஆகிய நால் வருங் குருடாய்க் கையால் தடவித் தடவிச் செல்வதை நோக்கி, மனங் குழைந்து அந் நால்வருக்கும் கண் வருதல் வேண்டுமெனத் திருவுளங் கொண்டு,

கூத்தாள் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாள்தன்
மூத்தாள் முகத்தில் முழுநீலம்—மூத்தாள்தன்
ஆத்தாள் முகத்தில் அரவிந்தம் ஆத்தாள்தன்
ஆத்தாள் முகத்திலிரண் டம்பு.

என்றொரு அரும்பாட்டு இசைப்ப, அனைவரும் அழகு மிக்க ஒளி வீசும் விழிகளைப் பெற்றுக் கங்கு கரையற்ற இன்ப முடையவராய்ப் புலவர் பெருமானைப் போற்றி, வழிபா டாற்றி நின்றனர். இச்செய்தி யாண்டும் பரம்ப, அவ்வூரின ராகிய பொருட் பெண்டிர் எழுபதின்மரும் ஒருங்கு குழீஇப் புண்ணியப் புலவரை நண்ணி பொன்னொடு தூசுந் துகி லும் பொலிவன தந்து, அவர் எதிரே நின்று பணிவுடன், 'பொய்யா நாவின் புலவரேறே, அடியேங்கள் உய்யுமாறு ஒரு நற்றமிழ்ச் செய்யுள் எம்மைச் சுட்டிப் பாடுதல் வேண் டும்,' எனக் கூசி மொழிந்து பூங்கொடிகள் போல ஒசிந்து நின்றனர். அப்பாவையர் அடக்கத்தையும், தமிழ் மொழிக் கண் வைத்துள்ள அன்பின் பெருக்கையுங் கண்டு கழிமகிழ் பூத்து, இசைப்புலவர்,

வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பேர்
ஈசன்தன் மக்கள் எழுபதின்மர்—தேசத்து

இரவலர்மேல் நீட்டுவர்கை ஈண்டுலகங் காக்கும்
புரவலர்மேல் நீட்டுவர்பொற் கால்'

என்று சமத்காரந் தோன்ற அவர் கொடையையும் எழிலின் மிகுதியையும் வியந்து பாடினர். பின் அங்குச் சின்னாள் வைகி, அத்தலத்தை விட்டு நீங்கிப் பல அரிய திருப்பதிகட்குச் சென்று வணங்கிக் கானப்பேருக்குச் சிறிது காலம் சென்றபின் மீண்டனர். அங்குப் போந்ததும் தாம் முன்னர்க் கண் பெறப் பாடிய கணிகையர் செவ்வியை யுணர விரும்பி அவர் இருக்கையைத் தேடிச் சென்றனர். அவர்களோ கண் பெற்ற காரணத்தால் அழகு மிகப் பெருஞ் செல்வர் கண்களைக் கவர்ந்து, நன்னிதி பலவும் ஈட்டிச் செல்வத்திற் சிறந்திருந்தனர். அஃதுணர்ந்த உத்தமக் கவிஞர் அவரது பெருவாழ்விற்கு உவந்து, அவரது மாளிகையிற் சென்று கதவைத் தட்டினர். அவர்கள் இவரை இன்னாரென வறிந்தும்,

'முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்.'

என்னுந் திருவாக்கின்படி தம்மைத் தாமறியாமலும், கண் கொடுத்த தெய்வம் என அவரை மதியாமலும், கதவைத் திறவாது வாளா விருந்தனர். அவர்தம் இறுமாப்பையும் நன்றியறியாக் கயமையையும் கண்டு, செந்தமிழ் வாணர் சினமீக் கூர்ந்து, '**பழைய குருடி கதவைத் திறடி**,' என்று கூறினர். கூறியவுடன் அந்நால்வருள் மிக்க இளையாளாகிய ஒருத்தியின் கண்கள் இரண்டும் பொட்டென அவிந்தன.

'வில்லேர் உழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.'

என்னும் புலவர் வாக்கு பொய்ப்படுமோ? அப்போது அவ

ளும் மற்றையோரும் புலவாணர் செந்தாமரைச் சேவடிகளில் அடியற்ற பனையென விழுந்து கைகட்டி வாய்பொத்தி, 'எங்குல தெய்வமே, அடிச்சிமார்கள் செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும். எமது அறியாமையால் யாம் பிழை செய்தலும் இயல்பே; அவற்றைப் பொறுத்தருளலுந் தேவரீருக்கு இயல்பே,' என்று பலவாறு பன்னிப்பன்னி ஏத்தி நடுநடுங்கி அவர் அருளை எதிர்பார்த்த வண்ணம் நின்றனர். அருள் மிகுந்த நெஞ்சினராகிய அருந்தமிழ்ப் புலவர் அவர் செருக்கொழிந்து பிணம்போற் கிடத்தலைக் கண்டு, இரங்கி, அத்தையல் அவிந்தகண் மீண்டும் பெறும்படி அருள் முகிழ்த்தனர்.

## குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்

நம் புலவர் பெருமகனார் சிறிது காலங்கழிந்த பின்னர் மதுரை மாநகரை அடைந்து வணங்காமுடிப் பாண்டியனைக் காண, அவனது அரண்மனைக் கேகினர். அவன் அக்காலை ஆலயதரிசனஞ் செய்யும் பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றிருத்தலை யுணர்ந்து ஆங்குச் சென்றனர். அரசன் அப்போது தீவண்ணன் திருமுன்னர்த் தலை வணங்கி உள்ளம் அனலிடைப்பட்ட மெழுகென வுருகி நிற்றலைக் கண்டு,

*குழற்கால் அரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப*
*நிழற்கால் மதியமன் றோநின் திருக்குலம் நீயவன்தன்*
*அழற்கால் ஒளிர்சடை மீதே யிருந்தும்அவ் வந்திவண்ணன்*
*கழற்கால் வணங்கு தியோவணங் காமுடிக் கைதவனே.*

எனப் பாதி வசையும் பாதி நகையுமாகப் பாடினார். அப்பாடலைக் கேட்டும் வணங்காமுடியன் வணங்கா வாயினனாய்ப் புலவரை நோக்கி, 'நீர் உண்மைப் புல்வர் ஆயின் ஈண்டுச்

சிலைவடிவாக விளங்கும் பண்டைத் தண்டமிழ்ச் சங்கப் புல வரைச் சிரக்கம்பம் செய்விப்பீராக; என்று எட்டுணையும் மதிப்பின்றி இயம்பினன்.

அதுகேட்ட செம்புலச் செல்வர் அங்ஙனமே செய்யத் துணிந்து, அங்குத் திருமேனி கொண்டிருக்கும் சங்கப் புல வரை முன்னிலைப் படுத்தி, நெஞ்சங் குழைந்து,

உங்களிலே யான்ஒருவன் ஒவ்வுவனே ஒவ்வேனே
திங்கட் குலன்அறியச் செப்புங்கள்—சங்கத்தீர்,
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பன்னூலும் எற்குமோ
ஏடவிழ்தார் ஏழெழுவீர் இன்று.

என்றோர் அரிய வெண்பாவை இசைக்க, அச்சிலா ரூபங்கள் சிரக்கம்பம் செய்தன. அது கண்டும் பாண்டியன் வணங்கா முடியனாகிப் புலவரைப் பொற்றாமரைத் தடத்துள் அமிழ்ந் துள்ள சங்கப் பலகை மிதக்கப் பாடுக, எனப் புலவர் அதற்கு மிசைந்து,

பூவேந்தர் முன்போற் புரப்பார் இலையன்றிப்
பாவேந்தர் உண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித.

என்னுந் தனிப்பாசுரம் கூறக் கன்மாப் பலகை கவினுற மிதந்தது. அத்திறங் கண்டும் பாண்டியன் இணங்கா மனத் தினனாய்ப் புலவரைச் சிறப்பியாது கல்லினும் வல்லெனும் நெஞ்சினனாய் வாளா விருந்தனன். பாவலர் பெருமான் வெகுளி பொங்க, அவனை விட்டகன்று சென்றனர்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் மறைவிலிருந்து பார்த் துக் கொண்டிருந்த பாண்டிமாதேவி மன்னவனது அறியா மைக்கு மிகவும் வருந்தி, மாறுவேடந் தரித்துப் பொய்யா

மொழிப் புலவர் சிவிகையைத் தாங்கிச் சென்றனர். அப்பொழுது புலவர், சிவிகை காவுவோரால் புதியவரது வரவையுணர்ந்து, அவரைத் தம்மெதிரே தருவித்து, வினவி, அரசன் கோப்பெருந்தேவி யாதல் தெரிந்து, அப்பெருமாட்டியின் கற்புடைமையையும், விழுமிய குணத்தையும் பெரிதும் பாராட்டி,

> உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பே
> உமையாளுக் கங்குண்டோர் ஊனம்—உமையாள்தன்
> பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியன்நின்
> ஆகந்தோய்ந் தாண்டான் அரசு.

என்று பாடினார். அச்செல்வியும் அவர் வெகுளித் தீயை இனிய சொற்களாகிய தெண்ணீரால் தணிவித்துத் தாம் கொணர்ந்து வந்த சில பரிசில்களையும் தந்து விடைபெற்றுச் சென்றனர்.

ஒருகால் அரசன் பொய்யாமொழியாரை, 'நீர் நல்ல புலவர்' என்றபோது,

> அறம் உரைத்தானும் புலவன் முப்பாலின்
> திறம் உரைத்தானும் புலவன்—குறுமுனி
> தானும் புலவன் தரணி பொறுக்குமோ
> யானும் புலவன் எனில்.

என்றோர் அருமைச்செய்யுளால் தமது சிறுமையையும் திருவள்ளுவர், அகத்தியனார் முதலியோர் பெருமையையும் இனிது விளக்கினர்.

## புரைய மன்ற புரையோர் கேண்மை

பின்னர்க் கவிஞர் சோழவள நாட்டை யடைந்து அவ்வேந்தன் அமைச்சராகிய சீநக்கன் என்பவரைக் கண்டு

தம் புலமை விளங்கக் கவிபாடி அவர் ஆதரவு பெற்றிருந்தனர். அவர் ஒருகால் தமக்களித்த கட்டுச் சோற்றைப் பெற்று, அவன் அன்புடைமைக்கு மகிழ்ந்து,

அளிகொ ளுந்தொடை யான்அா சைக்குமன்
ஒளிகொள் சீநக்கன் இன்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.

எனப் பாடினர். பின்பு சீநக்கனுந் தாமும் உடலும் உயிரும் போலக் கெழுதகைமை யுடையவராய் இனிது வாழ்ந்தனர். சீநக்கனை விட்டுப் பிரியப் புலவருக்கும், புலவரை விட்டுப் பிரியச் சீநக்கனுக்கும் இயலாது போயிற்று. இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள், கங்குற் பொழுதில் புலவரும், சீநக்க முதலியாரும் பள்ளியறையின்கண் நெடுநேரம் அரச கருமங் குறித்து உரையாடி யிருக்குங்கால் பாவாணர் அயர்வால் சிறிது கண்ணுறக்கங் கொள்ள, முதலியார் யாதோ கரும வயத்தராய் வெளிச்சென்றனர். புலவர் பெருமானே தம்மை மறந்து இன்துயில் கொள்வாராயினர்.

அது போழ்து முதலியாரின் மனைவியார் தம் பள்ளியறையிற் சென்று, மஞ்சத்தில் துயில் புரிவோர் தமது கணவனாரே என வெண்ணிக் களங்கமின்றி அருகே கிடந்துறங்குவாராயினர். சிறிது நேரம் சென்றதும் சீநக்க முதலியார் கருமம் முடித்துப் பள்ளியறை புக்கு நோக்க, தமது அமளியின் மேல் புலவரும் மனைவியும் ஒருங்கு உறங்குதலைக்கண்டு தினைத்துணையும் ஐயமின்றித் தேவியைச் சற்றே ஒதுக்கிவிட்டுத்தாமும் அம்மஞ்சத்திலேயே ஒருபுறம் படுத்துத் துயில் புரிந்தனர். வைகறையாமம் குறுகியதும், தேவியார் வழக்கம் போலத் துயிலுணர்ந்து பார்க்கத் தமது

மருங்கில் புலவர் படுத்திருத்தலைக் கண்டு துணுக்குற்று, அம்பு பாய்ந்த மயிலேபோல் பாயலினின்றுந் துள்ளிக் குதித்து வீழ்ந்தனர். அவருடைய அணிகலங்களின் ஆரவா ரங்கேட்டுத் திடுக்கிட்டெழுந்த புலவர் தாம் தேவியார் பக்க லில் கிடந்து துயின்றதை நோக்கிக் கட்டிலைவிட்டு இறங்கத் தொடங்குகையில், சீநக்கராயர் விழித்துக்கொண்டு புலவ ருடைய கைகளைப் பற்றிச் 'செல்லக்கிட,' என்றுரைத்து அவரை மீண்டும் படுக்கும்படி கூறியிருந்தனர். முதலியார், தேவியை நோக்கி, 'கண்மணி, உன் தந்தையார் பக்கலில் படுத்திருந்ததால் உனக்கு யாது குறை?' என்று தன்மனக் கருத்தை வெளியிட்டுச் செல்லுமாறு விடுத்தனர்.

அற்றைக் கணமே புலவருக்கும் சீநக்கனுக்கும் மேன் மேலும் முறுகி வளர்ந்து வந்த நட்பு முற்றி நின்றது. புல வர் சீநக்கன் பெருந்தகைமையை உள்ளுந்தோறும் உருகு வர். அவர் முதலியாரின் அமிழ்தம் ஒத்த மனைவியாரது கற் புடைமைக்குத் தமது அறியாமையாலும் அயர்வாலும் ஏதே னும் பழுதுவருமோ என்றெண்ணி யெண்ணி ஏங்குவார். இவ்வாறு வருந்தும் பாவலருக்கு உகிர்ச்சுற்றின்மேல் உலக் கை விழுந்தாற்போல ஊரார் பழியும் ஏற்பட்டது. உல கம் என்றும் உண்மை யுணர்வது அரிதன்றோ? அவர் அக் கம் பக்கத்தில் தம்மீது பழி சுமத்திப் பேசுவோர் உரை யைக் கேட்டு இன்னது செய்வதெனத் தோன்றாது திகைத்து மனம் புழுங்கினர்; உண்மை யறியாத உலகத்தின் மீச்செலவை நிந்திப்பார்; அந்தோ! அந்தோ! இத் தீவினைக்கு யாது புரிவேன்,' என்று அரற்றிப் புலம்புவர்.

'இதனை வெளியிட்டு உண்மை நிலையிடலாமெனினும் நன்றெனத் தோன்றவில்லையே!' என நினைப்பர்; 'முதலியார்

இப்பழிச் சொல்லைப் பொருட்படுத்தார் என்பது திண்ணமே யெனினும், அவர் தம் மறுவற்ற பெயரை மடவோர் பன்முறை தம் தீயவாயாற் கூறி மாசு படுத்துகின்றனரே' என்றெண்ணிமாழ்குவர்; 'கற்பரசியாராகிய தேவியார் தூய குணத்தைப் பொல்லாமை கூறும் புல்லர் கறைப்படுத்து கின்றனரே' எனக் கவல்வர். இங்ஙனம் வருந்தும் புலவர் ஒருநாள் தமது மனத்தூய்மையையும், தேவியார் வாய்மை யையும் புலப்படுத்தி,

தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன்றன் கண்டி
ஊரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே.

என்னுங் கவியைப் பாடித்தமது ஆற்றாமையையும்,செயலின் மையையும் வெளியிட்டுத் தேறியிருந்தனர். காலம் செல் லச் செல்லப் புலவர்மீது ஆராயாது பழிசொல்லிய புல்லரும் சொல்லுதல் தவிர்ந்தனர். உலகமும் உண்மையை அறிந் தது. காலம் செய்யும் வேலையை யாவரே செய்ய வல்லார்? ஆறுமனநோயை ஆற்றவல்ல அரிய மருந்து அதுவே. தீராவினையைத் தீர்ப்பதும் அதுவே. அதுவே பகையை மாற்றும், நகையை ஊட்டும்; மெய்ம்மையை நிறுத்தும், பொய்ம்மையைச் சிதைக்கும்; புரவலனை இரவலனுக்கும், இரவலனை புரவலனுக்கும்; அன்பில்லா நெஞ்சினும் அன்பு முளையைத் தோற்றுவிக்கும்; அருள் பழுத்த உள்ளத்தில் ஆனந்த நுகர்ச்சியைத் தரும்; துன்பத்தைப் போக்கும்; இன்பத்தை ஆக்கும். உயிரினுஞ் சிறந்த அன்னையையும் மனைவி மக்களையும் இழந்து வருந்தும் மக்களுக்குக் காலம் என்னுங் கடவுள் அருள்புரியானாயின் அவர் உயிர் வாழ்

தலும் உண்டோ? கொடும்பிணியாலும் நெடு வறுமையாலும் பெரும்பழியாலும் அல்லலுழப்பார்க்கு அவர்தம் தமர் போலத் துணைபுரிவது காலமே அன்றோ? ஆதலின்; புலவரும் மனநோய் நீங்கி மகிழ்ச்சி யோங்கிச் சீநக்கனுக்குத் தமிழ்ச்சுவையை அடிக்கடி புகட்டிக் கொண்டு நன்றுரை வாராயினர். இவ்வாறு ஆண்டுகள் பல சென்றன.

மக்கள் வாழ்க்கையோ நிலையற்றது. இன்றிருப்பார் நாளையிருப்பர் என்று துணிந்துரைக்க வியலாது.

'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.'

என்றார் தெய்வப் புலவரும். சீநக்க முதலியாரும் சின்னாள் சிறிது மெய்ச் செவ்வி கெட்டிருந்து, ஒருநாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை யெய்தினர். அப்பொழுது அவர் இல்லக்கிழத்தியாரும் உடன்கட்டை யேறத் துணிந்தார். இவ்விருவரையும் ஈமத்தில் சந்தன விறகை அடுக்கி அதன்மேற் கிடத்தித் தீக்கொளுவினர். சுற்றத்தார் சோழ மன்னனும், அவன் அமைச்சரும், தானைபதிகளும், குறுநிலமன்னரும், பட்டவர்த்தனரும், போர் வீரரும் சூழ்ந்து நின்று, அமைச்சர் பெருமானாகிய சீநக்கராயர் பிரிவாற்றாமையைக் குறித்துப் பேசி நின்றனர். அரையனும் முதலியார் அருங்குணமாட்சியை நினைந்து கண்ணீர் சொரிந்தனன்.

அப்போது ஒரு குரோசத்தில் ஒருவர் ஓடிவருதலை அனைவரும் நோக்கினர். அவர்தம் வாடிய பொடியாடிய மேனியையும், ஊற்றுநீர்க் கேணிபோல் ஒழுகு கண்ணீரையும், உரை யிழந்து நாத்தழுதழுத்து நிற்கும் நீர்மையையும் சோழன் கண்டு ஒன்றுந் தோன்றாது திகைப்பூடு மிதித்த

வன் போல நின்றான். அங்ஙனம் ஓடிப் போந்தார் பொய்யா மொழிப் புலவரே. அவர் வேற்றூருக்குச் சென்றிருக்கையில் சீநக்கராயர் இறந்துவிட்டனர். அச்செய்தியைப் புலவருக்குத் தெரிவிப்பினும் அவர் வருதற் கியலாதென நினைத்துச் சோழன் பிணத்தைச் சுடலை சேர்ப்பித்தனன். புலவரோ எங்ஙனமோ செய்தி எட்ட, ஓட்டமாகவே வழியைக் கடந்து இத்தருணத்தில் வந்து சேர்ந்தனர். அவருடைய அளவு கடந்த துன்பத்தைக் கண்டவர் அனைவரும் பொறுக்கலாற்றாது புலம்பினர். கன்னெஞ்சினரும் கரைந்து கண்ணீர் உகுத்தனர். சிலர் 'புலவர் இங்ஙனம் வருந்துவாரென ஒருவரும் எண்ணவில்லையே'? என்று கூறி வருந்தினர். சோழனும் சிறிது உரங்கொண்டு, புலவாணரைக் குறுகி, 'தெளிதமிழ்க்கோர் வரம்பு செய்ய வந்தசெழும்புலவரே, எம் போன்றார் வருந்தின் ஆற்ற வேண்டிய தாமும் இவ்வாறு புலம்புதல் தகுமோ? கற்றுவல்ல தமக்கு யான் கூறுவது யாதுளது? மனந் தேறுவீராக,' என்று கூறினன். பொய்யா மொழிப் புலவர் சோழர் பெருமானைப் பார்த்து,

'வாழி சோழ, என் வாய்மொழி கேண்மோ:
ஊழி நிலவுஎறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்றுஅற்றி மனைவி நெடிது துயில்கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச்செல் பவனே
நானும் ஏகுவன் நற்றுணை யவற்கே.'

என, முன்னர் நிகழ்ந்த செய்தியை நன்கு எடுத்துரைத்துத் தாமும் உயிர் விடத் துணிந்திருத்தலை உணர்த்திச் சிதை மருங்கு சென்றனர். அதுகண்ட சோழன் புலவரை நோக்கி,

'ஐயனே, நீர் இன்னுஞ் சின்னாள் இந்நிலவுலகில் இருப்பின் எம்மனோர் உய்வா ரன்றோ? அன்றியும் நம் சீநக்கராயர் எம்மைப் புகுத்திய துன்பக் கடலினின்றுங் கரை யேறுதற்குத் தம்போன்ற கல்விச் செல்வராகிய தெப்ப மின்றேல் யாம் யாது புரிதும்? ஆதலின், அவ் வெண்ணத்தை விட்டொழிமின்,' எனச் சாலவும் வருந்திக் கேட்டுக் கொண்டனன். பொய்யாமொழிப் புலவரோ அதற் கிசையாமல் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி விடை பெற்றுச் சிதையை நோக்கி,

அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோடு
இன்றுநீ வானுலகம் ஏறினாய்—மன்றல்கமழ்
மானொக்கும் வேல்விழியார் மாறனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட.

என்றொரு செய்யுளைப் பாடச் சிதை விரிந்து புலவருக்கு இடந்தந்தது. உடனே அவர் அதிலேறி எல்லாரும் தம் விழிகளில் நீரைச் சொரியப் பொன்னுலகு புகுந்தனர். ஈதன்றோ உண்மை நட்பு! கோப்பெருஞ் சோழன் இறந்த போது பிசிராந்தையார் என்னும் புலவர் உடனுயிர் நீங்கியதும், வேள்பாரி இறந்ததனால் கபிலர் உயிர் நீத்ததும் போலப்பொய்யாமொழிப் புலவரும் தமதுயிரைச் சீநக்கராய முதலியாரோடு நீக்கினர்.

'அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.'

# 3. இரட்டைப் புலவர்

*கற்றார் அறிந்துரைத்த கண்ணகன்ற நூற்பொருளைப்*
*பெற்றாரே பெற்றார் பெரும்பேறு—மற்றோர்*
*ஒள்ளறிவும் இன்சுவையும் ஒப்புரவும் கண்டக்கால்*
*தெள்ளமுதுங் கைக்குந் தெளி.*

இந்நிலவுலகு கற்றறிந்தாராலேயே எக்காலமும் நடைபெறுவது. அவரே உலகுக்குக் கண்ணெனக் கருதப்படுவர். உலக வியற்கையில் தோன்றும் பொருள்களின் உண்மை அவர்தம் நுண்ணறிவிற்குப் பொள்ளெனப் புலப்படும். இறந்தகாலத்தில் நிகழ்ந்ததைக் கொண்டு எதிர்காலத்தில் நடப்பதை உணர்ந்துரைக்கும் வன்மை அவருக்கு இயல்பின் அமைந்தது. மக்கள் ஒழுகலாறு இதுவென நம்முணர்வுக்கு இயைந்த வண்ணம் இனிய மெல்லிய சொற்களால் நமது புலத்தில் நன்கு பதியுமாறு அழகுறக் கூறும் அவர்தம் செந்நாவீறு பெரிதும் போற்றன் மாலையது. அவர் உறுதிப் பொருளாகிய தெள்ளமுதத்தைத் தீஞ்சுவை கனிந்த சொற்குழூவாகிய வலம்புரிச் சங்கானே ஊட்டி, நமது உடம்பைப் பெரிதும் பேணி வளர்க்கும் நற்றாயைப் போன்று நமது அறிவை வளர்ப்பவராவர். அவருக்கு இவ்வுலகு என்றுங் கடமைப்பட்டுளது. அவர், தம் அறிவின் மாட்சியானும் சொல்வன்மையானும் உலகநிலையை ஒரு கணத்தில் மாற்றத்தக்க ஆற்றல் படைத்தவராவர். அவர் இயற்றிய அரும்பெரு நூல்களையன்றி, அச்செல்வர் வாழ்க்கையில் ஒழுகியவாறும் பெரிதும் சுவை பயப்பன

வாம். அப்பெரியாரது நடையின்கண் மதிப்பொலிவு தோன்றின் மகிழ்ச்சி பூப்பேம்; கல்வி உயர்வு கவின்றால், கண்டு வியப்பேம். மென்மையும் இழிதகவும் காணின் அவர்தம் கல்வியும் அறிவும் பயன்படாமை நோக்கிக் கவல்வேம். எவ்வாறாயினும் நமக்கு அவை பேரின்பமும் விழுப்பயனும் பயப்பனவே. அத்தகைய அருந்தமிழ் வாணர்களுள் இரட்டையர் என்னும் இருபெரும் புலவருடைய சரித்திரம் நமக்கு ஆராவின்பம் பயப்பது.

இற்றைக்குச் சற்றேறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழவள நாட்டின்கண் ஆமிலந்துறை என்னும் ஊரிலே **செங்குந்தர் மரபிலே** இரட்டையர் எனப் பெயரிய இருவர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரையொருவர் எவ்வாற்றானும் ஒத்திருந்தமையானும் ஒருங்கு சேர்ந்து செய்யுள்பாடி வந்தமையானும் இரட்டையர் என வழங்கப்பட்டனர். இவர் தம்முள் ஒருவர் முடவர்; மற்றவர் குருடர். முன்னை வினைப்பயனாலே கால் முடம்பட்டாரேனும் அறிவான் முடம்பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றார் குருடர். இவ்விருவருக்கும் **முதுசூரியர்** என்றும் **இளஞ்சூரியர்** என்றும் முறையே பெயர் வழங்கலாயின. முடவர், குருடர் தோள் மீது இவர்ந்து அவருக்கு வழிகாட்டுவர். குருடர் முடவரைச் சுமந்து செல்வர். இவ்விருவரும் உறவின் முறையால் ஒருவருக்கொருவர் அம்மான் சேயாகவும், அத்தை மகனாகவும் அமைந்தனர். இவர் திருவருட்செல்வம் பெற்றவராய்க் கல்விவளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் உழைப்புமின்றி எளிதிற் பாடிய காரணத்தாலே **தெய்வப்புலவர்** எனவும் சிறப்பித்தோதப் பெறுவர்.

இப்புலவர் தமது சமயமாகிய சைவசமயத்திலே பெரும் பற்றும் அன்பும் உடையராய்த் திகழ்ந்தனர். தமது வாழ் நாள் முழுவதும் சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று, ஆங் காங்குக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அருட்பெருங் கடலைப் பலவாறு கனிவு தோன்றப் பழிச்சுதலும், தணிவு தோன்ற உள்ளமுருகிச் சிந்தித்தலும், பணிவு தோன்றத் தலையாரக் கும்பிட்டு வணங்குதலும் ஆகிய இவற்றையே அரும்பெருந் திருப்பணியாகக் கொண்டு வாழ்ந்துவந்தனர். அக்காலத்துச் செந்தமிழ் நாட்டிலே வதிந்த செல்வரை யணுகி, அவர்மீது அரிய பெரிய தமிழ்ச் செய்யுட்களைப் பாடிப் பரிசுபெற்று அதனால் தமது வாழ்க்கையைச் செலுத் துவர். ஒவ்வொரு பாட்டையும் இருவரும் கலந்தே பாடு தல் இவருக்கு இயல்பு. ஒவ்வொரு நூலையும் இருவரும் சேர்ந்தே பாடி முடிப்பர். ஒரு பாட்டில் அரைப் பகுதியை ஒருவர் பாடி முடிக்க, மற்றப் பகுதியைக் கருத்துப் பிற ழாது சொல் வகையும் ஒப்ப, ஒருவரே பாடியது போலத் தோன்றுமாறு மற்றவர் பாடி முடிப்பர். இப்பரிசு எவரானும் பாராட்டப்படு மென்பதில் ஐயமுண்டோ? உறுப்பானும் புலத்தானுங் குறைபாடுடைய இவ்விருவரும் கல்வி கற்றலே அருமை! அதனினுங் கவிபாடுவ தென்றால் அஃது அருமையினும் அருமை யன்றோ! அங்ஙனம் பாடுங் கவிகளும் சொற்சுவை பொருட்சுவை செறிந்திருத்தல் எல்லாவற்றினும் அருமை யாதலை மறுப்பார் யாவர்? இத னால் இவர் கற்றார் கல்லாதார் ஆகிய எல்லாரானும் நன்கு மதிக்கப்பட்டுத் தெய்வப் பாவலர் என்னும் புகழுரையும் பெற்று, இனிதுறைவா ராயினர்.

இவ்விருவரும் சிவஸ்தல யாத்திரை செய்து போதருங் கால், ஒருநாள் பூலோக கைலாயம் எனப் புகழ்பெற்ற

சிதம்பரத்துக்குச் சென்று ஆங்குக் கோயிலின்கண் பொன்னம் பலத்தே வீற்றிருக்கும் இன்னமுதை இருகண்களாலும் பருகும் பொருட்டுக் கோயிலுக்கு வழிக்கொண்டனர். அப்போது இடைவழியில் செல்வ மிக்குடைய ஒருவன் விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்து சிறக்கப் போதலை முடவர் கண்ணுற்றுப் பரிசிலைக் கருதி, அவனைப் புகழ்ந்து முதலிரண்டடி தொடுத்துப் பாடக் குருடர் பின்னிரண்டடி பாடி முடித்து நின்றனர். அவிழ்ச் சுவையே யன்றித் தமிழ்சுவை யறியா அச்சீமான் செல்வச் செருக்கால் அப் பாடலைப் பாராட்டாது நெடுமரம் போல நின்றான். அத் தகைமையைக் கண்ட முடவர்,

மூடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவாரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—

என்று துவங்கிப் பாடினர். அக்குறிப்பினை அறிந்த குருடர், கவிப்பொலிவைக் காணற் குரிய கண் அச்செல்வற் கில்லை என்பதைக் குறித்து,

—ஆடகப்பொற்

செந்திருவைப் போல்அணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனா னால்.

எனக் கூறி முடித்தனர். இப்பாட்டைக் கேட்டார் பலர் இதன் பொருளை வியந்து, அச்செல்வனுக்கு இவர்தம் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். அதன் பின்னர் அவனும் தனது குற்றத்தை யுணர்ந்து அவரை உபசரித்து வேண்டும் பரிசிலளித்துக் கொண்டாடினன்.

பின்னர் இரட்டையரது அரும்புலமையைக் கேள்வி யுற்ற தில்லைவாணர் சிலர் அவ்விருவோரையுங்குறுகி,

'தெய்வப்புலவீர், இத்தலத்தைச் சுட்டி, ஐந்தொழி லியற்றும் எமது ஐயன்மேல், பண்டு தொல்காப்பியத் தேவர் திருப் பாதிரிப்புலியூர்க் கலம்பகம் பாடியருளியது போலத் தாமும் ஒரு கலம்பகம் பாடியருளல் வேண்டு,'மெனக் குறை யிரந்து விண்ணப்பித்தனர். அதனைச் செவிமடுத்த நாவலர் இருவோரும், முன்னிரண்டடி ஒருவரும் பின்னிரண்டடி மற்றவருமாக உடனே,

> தொல்காப் பியத்தேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
> நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ?
> மல்காப் புனல்ததும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
> பல்காற் பொருள் அழற்கும் பாற்கடல்ஒன் றீந்தார்க்கே.

என்ற பாடலைப் பாடித் தம் பணிவையும், தொல்காப்பியத் தேவர் பாவன்மையையும், சிவபெருமானது அருட்பான்மை யையும் இனிது விளக்கினர். மீண்டும் அத்தில்லைவாணர் அவரைப் பாடுதல் வேண்டுமென மன்றுடி வேண்ட, அவர் தம் வேண்டுகோளுக் கிணங்கித் தெய்வத் திருக் குறிப்பை உணரும் பொருட்டு, அவர் சுட்டிய திருப்பாதி ரிப்புலியூர்க் கலம்பகத்தில் கயிறு சார்த்திப் பார்த்தனர். அப்போது,

> 'பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
> ஆடுவார் அன்றி அயலார் அறிவாரோ?
> தோடுவார் காதன்றே தோன்றுத் துணைஐயர்
> பாடுவார் ஓர்இருவர்க் கிட்ட படைவீடே.'

என்னும் நறும்பா உதய மாயிற்று. அப்பாடலின்கண், 'பாவாணர் பாக்களின் தன்மையையும், அவர்தம் வரிசை யையும் முத்தமிழ் முனிவராகிய அகத்தியனுருக்குத் தமிழ் நூல் செவியறிவுறுத்திய செல்வ நடராசப் பெருமான் ஒரு

வர் அறிவாரே யன்றி, வேறு அறியவல்லார் யாவர்? அதனுன்றே எமது இறையனார் தமது திருச்செவியை இன்னிசை மிழற்றும் கந்தருவர் இருவருக்கும் இருப்பிடமாக அளித்தருளினார்,' என்னுங் கருத்தினை அறிந்து, நெஞ்சங் குழைந்து, உடல் புளகம் போர்ப்ப, உவகைக் கண்ணீர் அருவிபோலச் சுரந்து சொரிய, நாத்தழுதழுத்து, அழகிய திருச்சிற்றம்பல முடையான் திருவுளம் இருந்தவாற்றைக் கண்டு, கழி பேருவகை பூத்துப் புல்லறிவிற் கடைப்பட்ட புழுத்தலைச் சிறியேமாகிய எமக்கும் எம் கண்ணுடைய வள்ளல் கருணை முகிழ்த்ததோ எனத் தமது நல்வினைப் பயனை எண்ணியெண்ணி, தம் வசமற்றுப் பரவசப்பட்டு, அன்னோர் வேண்டுகோளை நிறைவேற்ற ஒருப்பட்டனர். பின்பு சின்னாட் சென்றதும், 'தில்லைக் கலம்பகம்' பாடி முடித்துக் கற்று வல்ல புலவர் பலரும், '**கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்**' என்று வியந்து நயக்குமாறு, அரங்கேற்றி முடித்து, தமது கல்விப் பெருமை முன்னினும் பன்மடங்கு சிறக்கப் பெற்று நன்றிருந்தனர். அக்கலம்பகத்தினின்று இங்கே இரண்டொரு செய்யுட்கள் எடுத்துக் காட்டப்படும்.

புலியூர் உறையும் புனிதா புகுவெண்
பலியூர் தொறும்இரக்கும் பண்பா—பொலிகயிலைக்
கல்லி லிருக்கக் கடனூல் என்நெஞ்சக்
கல்லில் இருக்கக் கடன்.

தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளும் மேவுங்காண் அம்மானை
வெம்புலியொன் றெந்நாளும் மேவுமே ஆமாகில்
அம்பலத்தே விட்டே அகலாதோ அம்மானை
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை.

பின்னர் இரட்டையர் திருவாமாத்தூர் என்னும் திருப்பதியை அடைந்தனர். அங்குள்ள புலவாணரும், பிரபு சிகாமணிகளும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு, அத்தலத்தே எழுந்தருளியிருக்கும் பெருமானைச் சுட்டி ஒரு கலம்பகம் பாடவேண்டுமென வேண்டினர். அவர்களும் அதற்கிசைந்து, திருவருட்பான்மை இருந்த வண்ணம் அறிந்து, உவகை மீக்கூர்ந்து சொல்லழகு, பொருளழகு விஞ்சக் கலம்பகம் இயற்றி அரங்கேற்றினர். அதன் கண்,

ஆற்குழையோ அரவோ ஆயர்பாடி அருமனையோ
பாற்கடலோ திங்களோ தங்குமாவம் பலபலவாம்
மார்க்கமும் ஆகின்றார் மாதைநாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கண் டார்புரஞ்சீறிய வெங்கணைக்கே.

என்னும் தூக்கில், திருக்கோயில் பம்பையாற்றின் மேலைக் கரையிலே இருப்பதாகக் கூறப் பட்டிருந்தது. அதனைக் கண்டார் நகைத்து, 'குருடருக்குத் தான் கண்ணில்லை, முடவருக்குமா கண்கெட்டது?' என்று அவர்தம் அறியாமையை இகழ்ந்து கூறினர். அது கேட்ட பாவணர், 'இந்நூலை இன்னுஞ் சின்னாட் கழிந்தபின் அரங்கேற்றுவோம்,' என்று மொழிந்து தமது உறைவிடம் சேர்ந்தனர். அற்றைநாள் இராப்பொழுது இறைவன் திருவருளால் பெருமழை பெய்யக் குளம், மடு, கூவல் எல்லாம் தண்ணீர் நிரம்பி, எங்கும் பெருவெள்ளம் தேக்கியது. அவ்வெள்ளப் பெருக்கால் பம்பைநதி பழைய நெறியை விட்டு விலகித் தென்பால் ஓடி வடபால் மீண்டது. மறுநாள் இவ்வியப்பைக் கண்ட அவ்வூர் மக்கள் அச்சமும் விம்மிதமு முற்று இரட்டையர்பால் சேர்ந்து, நிகழ்ந்த செய்தியை உணர்த்தி அவர்தம் புலமையைப் பெரிதும் போற்றி நின்றனர். பின் நூலை மீண்

டும் அரங்கேற்றத் தொடங்கி, எல்லாரும் பெருங்களி துளும்புமாறு, சொற்பொருள் விரித்துரைத்து முடித்தனர்.

சிறிது காலஞ் சென்றபின் இரட்டையர் ஆங்கூர் என்னும் ஊருக்குச் சென்றனர். ஆங்குச் சென்ற வளவில், வழி நடந்த வருத்தத்தாலும் களைப்பாலும் பசிநேரம் கடுகுதலும் முடவர்,

தேங்குபுக ழாங்கூர் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ ?

என்றிரண்டு அடிகளை இசைப்பக் குருடர்,

—போங்காணும்

கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்.

எனப் பின்னிரண்டடி தொடுத்து முடித்தனர். இச்செய்யுளில் முடவர் வருந்திக் கேட்ட வினாவிற்குச் சிவபெருமான் விடையாக எழுந்த அடிகளால் சிவபிரான் தாமே அன்னமறிந்திலர் என்னும் உண்மை புலப்பட்டது.

பின்னர்ச்சின்னாட்களில் அவ்வாலய அருச்சகர் அங்குச் செய்துவந்த சூழ்ச்சி வெளிப்பட்டது. அஃதாவது: அருச்சகர் நித்திய நைமித்திகத்தின் பொருட்டுத் தரப்படும் அரிசி, பருப்பு முதலியவற்றை எல்லாம் தாமே எடுத்துக்கொண்டு கோயிலின் நைவேத்தியத்திற்காக ஒரு செங்கல்லை அடுப்பிலிட்டு, அதிலே சூடேறிய பின் அதை ஒரு தட்டிலே வைத்து மூடிக்கொண்டு சென்று, பலரறியச் சுவாமி சந்நிதானத்திலே அதன்மேல் சிறிது தண்ணீரைத் தெளிப்பார். அப்போது கல்லினின்று புகை எழுதலைக் காண்போர் புதிய நைவேத்தியம் அருச்சகர் படைக்கின்றனர் என்றெண்ணிச் செல்வர் என்பதாம்.

இஃது ஒருநாள் ஒருவனுக்குப் புலப்பட அவன் அதனை ஊர் முழுதும் அறிவித்தான். ஊரார் குழுமி அருச் சகனைப் புறப்படுத்தினர். அவ்வூரினர் இரட்டையர் பெரு மையைப் பல்காலும் பாரித்துரைப்பர் என்பது பகரவும் வேண்டுமோ? இரட்டையர் பின்பு தொண்டை நாட்டின் கண் மிகச் சிறந்து விளங்கும் காஞ்சிமா நகரை அடைந்து ஒரு மாவிற் பெருமானை அறுபோதும் வணங்கி, ஆண்டுச் சிறிது காலம் இனிதுறைவாராயினர். அங்கு ஏகம்ப வள்ள லார் இனிய பவனி விழாவிலே ஈடுபட்ட மனமுடையவ ராய் அவர் மீது ஓர் அழகு பழுத்தொழுகும் 'உலாப்பிர பந்தம்' பாடினர். அதனை அரங்கேற்றுகையில் விநாயகர் வணக்கச் செய்யுளாகிய,

> சாற்றிய ஆயிரக்கால் மண்டபத்தின் சார்வாக
> ஏற்ற முடனே இனிதிருந்து—போற்றும்
> விறல்விகட சக்ர விநாயகனை யேத்துந்
> திறல்விகட சக்ரா யுதம்.

என்பதைக் கூறி உரை விரிப்பத் தொடங்குழி, அவைக் களத்தே அமர்ந்திருந்த புலவர் சிலர் அப்பாட்டிலே குறிப் பிடப்பட்டிருக்கும் ஆயிரக்கால் மண்டபமும்,விகடசக்ரவிநா யகரும் ஆண்டில்லை என்பதை உணர்த்தினர். அது கேட்ட இரட்டையர், 'யாமும் அறியோம், அவளும் பொய் சொல் லாள்,' என்று தமக்குக் கலைமகளார் உண்ணின் றுணர்த்துத லைக் குறிப்பித்துப் பின்னொருகால் இந்நூலை அரங்கேற்று வோமெனக் கூறிச் சென்றனர். சிறிது காலஞ் சென்றதும் காஞ்சிநகரை ஆண்டுவந்த அரையன் ஒருவன் வேள்விபுரி வான் நிலந்திருத்துகையில், அங்கிருந்த மண்மேடு கரைய விகடசக்ர விநாயகரும், ஆயிரக்கால் மண்டபமும் விளங்கித்

தோன்றின. அதுகண்டார் இறும்பூதெய்தி இரட்டையருக்கு நிகழ்ந்ததைத் தெரிவித்து உலாவை அரங்கேற்றுவித்தனர். அனைவரும் அன்று முதல் அதனைத் **தெய்வீக உலா** என இறப்பவும் மகிழ்ந்துரைத்துப் பாராட்டுவாராயினர்.

ஒருகால், இவ்விருவரும் காவித்தண்டலம் சென்று, செல்வத்தாற் சிறந்த வேளாளப் பிரபுவாகிய ஓமளநாதனைப் பரிசில் கருதிக் கண்டனர். அவனோ கல்விச் செல்வர்களின் கண்ணிய மறியாத கயவனாதலின், அவர்களைப் பொருட்படுத்தாது இருந்தனன். அவன் அயலகத்தானும் சிறிதும் மதியாது, நாவலர் பெருமக்களை அவர் மனம் புண்படுமாறு பல வசைமொழி கூறினன். அதனால் மனங்கொதித்து இருவருமாக,

ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வீடு
இருகாலும் பற்றி யெரிக—அருகாருங்
கம்பத்தான் வீடுங் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்.

என்னும் வெண்பா இசைத்துச் சில அடிகள் நடத்தற்குள் அவ்வீடுகள் இரண்டும் தீப்பற்றி எரிந்தன.

பின்னொருகால் இரட்டையர் சிவராசதானியாகிய மதுரை மாநகரஞ் சென்று, ஆலவாய் அவிர் சடைக் கடவுளைத் தரிசிக்க விழைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடப் புக்கனர், அப்போது முடவர் கரையின்மேல் அமர்ந்திருந்தனர். குருடர் படித்துறையில் இறங்கித் தமது உடுக்கையைத் துவைத்து ஆடைய அலச, நீர்ப்பரப்பின்மேல் விரிப்ப, அது சிறிது நழுவிவிட்டது. நழுவியதைக் குருட

ராதலின், அறியாது தடவித் தடவித் தவிப்பன்தக் கண்ணுற்ற முடவர்,

அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதோ

எனக்கூறி மைத்துனக் கேண்மையான் எள்ளி நகையாடினர்.

அது கேட்ட குருடர் நாணி,

—அப்படியே
ஆனலுங் கந்தை அதினுமோர் ஆயிரங்கண்
போனல் துயர்போச்சுப் போ.

என்று இயம்பினர். அதுகேட்ட முடவர்,

கண்ணு யிரமுடைய கந்தையே ஆனலும்
தண்ணீர் குளிரையுடன் தாங்காதோ—

என்று மீண்டுஞ் செப்பக் குருடர்,

—எண்ணுதீர்
இக்கலிங்கம் போனல்என் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை.

என்று விடையிறுத்தனர். உடனே அவ்வாடை காற்றல் உந்தப்பட்டுக் கரை சேர்ந்தது. பின் சொக்கலிங்கப் பெருமானை அங்கயற்கண்ணியோடு தொழுது மீண்டு அத்தலத்தின்கண் சின்னாள் வதிவாரா யினர்.

அவர் பின்பு ஒருநாள் வழுதியைச் சேர்ந்து அவன் செந்தமிழ் வளர்க்குஞ் செல்வியினை வியந்து பாடினர். அம்மன்னர் மன்னனும் அப்பாவலருக்கு மிக்க பரிசில் அளிப்பான் எண்ணி யிருத்தலை அவன் குறிப்பாலுணர்ந்த தன்னலமொன்றே கருதும் புன்றொழில் அமைச்சன் ஒருவன் அவனைத் தகைந்தனன். அஃதுணர்ந்த இரட்டையர்,

புராதன மான தமிழ்ப்புலவீர் இந்தப் புன்குரங்கு
மாராமரம் விட்டிங்கு வந்ததென் னேவகை கேட்டிலையோ
தாராதலம் வென்ற தமிழ்மாற னையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவன் என்றும் இருந்ததுவே.

என்ற செய்யுளால் வசைபாடத் தமிழ்மாறன் அவ்வமைச்சனுக்கு நற்றமிழ்ப் புலவர் நல்லிசையை எடுத்துக் கூறி அவருக்கு வரிசை வழங்கி யனுப்பினன்.

இரட்டையர் அதனைப் பெற்று வேறோர் ஊருக்கு வழிக்கொண்டு செல்கையில், இடையில் பிள்ளையார் கோயிலொன்று புலப்படலும், ஆங்குப் புக்குப் பிரணவப் பொருளாகிய ஐங்கரக் கடவுளை வணங்கும் ஆதர முடையராகித் தாம் பெற்று வந்த பொருளை ஒரு கிழியில் கட்டிமுடிந்து அப்பெருமான் திருமுன்னர் வைத்துவிட்டு நீராடப் படர்ந்தனர். நீராடி முடித்துப் பின் அவர்கள் செல்வக் கணபதியை வாழ்த்தி வணங்கித் தமது முடிச்சைக் காண, அஃது அவிழ்ந்து கிடந்தது. அதன்கண் இருந்த பொருளும் களவாடப்பட்டிருந்ததை நோக்கிக் கவிவாணர், 'இப்பிள்ளையே இச்செயலைச் செய்தது. வேறு யாவரே இது செய்ய வல்லார்?' என நினைத்து விநாயகப் பெருமானைச் சுட்டி,

தம்பியோ பெண்திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும் மாமாயன்—அம்புவியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்தீர் போமோ?
கோத்திரத்திற் குள்ள குணம்.

என மிகச் சமத்காரமாக ஓர் அருங்கவி சொற்றனர். அதன் பின் அம்முட்டை முன்னினும் பெரிதாய் மிக்க பொருளுடன் காணப்பட்டது. அவர் அதனை உவகை மீதூர எடுத்துக் கொண்டு அப்பெருமான் திருவிளையாடலை எண்ணி

யெண்ணி மனமுருகி அன்பு கனிந்தொழுகப் பரவசப்பட்டு ஏகுவா ராயினர்.

சின்னாட் கழிந்த பின்னை அவர் ஈகையிற் சிறந்தவனு கிய திருவேங்கடேசன் என்னும் பொருட்செல்வனை அணுகி னர். அவனும் இவ்விரட்டையர் தம் பெரும்புகழை முன் னரே கேள்வியுற்றிருந்தலின், அவர்தம் அருமை யுணர்ந்து பரிசிலளிப்பான் விரைந்தனன். அஃதுணர்ந்த அவன் தம யன் கண்ணுக்கினியான் என்பவன் இயற்கையிலே வன் கண்ணனாதலின் தன் இளவல் புலவோருக்கு ஈதலை விலக் கினன். அஃதறிந்த செந்நாச் செல்வர்,

தேன்பொழியும் வாயான் திருவேங்க டேசனுடன்
ஏன்பிறந்தான் இந்த இனியான்காண்—யான்சொலக்கேள்
சீதேவி யார்பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்.

என்றொரு தூக்கிசைத்துச் சென்றனர். அப்பாவினைக் கேட்ட இளையான், தமயன் அறியாது அவர் பின்னே தொடர்ந்து சென்று தான் கொடுக்கக் கருதிய பொருளைத் தந்து முகமன் கூறி, அவர்பால் விடைபெற்று மீண்டான்.

பின் அவ்விருவரும் அருட்சோதிப் பிழம்பாகிய அண் ணாமலையான் அடிக்கமலம் பரவத் திருவண்ணாமலைத் திருப் பதியை அடைந்து, அங்கே சத்தி உபாசகனும் செந்தமிழ்ப் புலவனும் செருக்கு மிக்கவனும், புலவர் எவரேனும், அவரை இழித்துரைத்தலை தன் கடப்பாடகக் கொண்ட வனுமாகிய சம்பந்தாண்டான் என்பவனைக் கண்டனர். அப் போது அவனுக்கு மயிர் வினைஞன் ஒருவன் க்ஷவரம் செய்துகொண்டிருந்தான். அவன் புலவரென இவர்களைக் கேட்டவுடன், விரைந்து, 'மன்' னென்றெடுத்து 'மனுக்'

கென்று ஒரு வெண்பா கூறுமின்,' என்று கூறினன்; அவன் அறியாமைக்கு நகைத்துச் செந்தமிழ்ப் புலவர் இருவரும்,

மன்னு திருவண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்த மடவார் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு.

என்றோர் தொடர்பை அவன் செருக்கொழியுமாறு கூறினர். அன்று முதல் அவன் இறுமாப்பும் அடங்கிற்று.

அப்பால் புலவர் அவ்விடம் விட்டு வேற்றூருக்கு வழி பற்றிச்செல்லுகையில், தமக்கு மெய் வருத்தமும் இளைப்பும் மீதூர, மிகுதியும் வருந்தி, இவ்வல்லல் பரிசில் வாழ்க்கையை நினைந்து நொந்து குருடர்,

குன்றும் வனமும் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—

என்றிசைப்ப, முடவர் தாம் பொய்யும் புனைவுங் கூறுந் தன்மையை முனிந்து,

—ஒன்றுங்
கொடாதவரைச் சங்கென்றுஞ் கோவென்றுஞ் சொன்னால்
இடாதோ அதுவே இது

என்று செய்யுளை முற்றுவித்தனர். இவ்வாறே இவ்வரும் புலவர் தமது வறுமையைப் பல்கால் நினைந்து வருந்திய நாட்கள் பல. சங்க காலத்துக்குப் பின் தமிழ்ப் புலவருக்குப் பெருமையும் ஆதரவும் இறப்பவும் குறைந்தன. ஆங்காங்குச் சிற்சில மன்னர்கள் சிற்சில புலவர்களை ஆதரித்து வந்தனரே யன்றி ஓர் ஒழுங்காகக் கல்வி வளர்ச்சிக்கேற்ற சாதனங்கள் ஒன்றுமில்லை. அதனால் தமிழ் செழித்து

வளரத் தடை நிரம்பவும் நேர்ந்தது. இன்றேல், இயல்பாகவே கருவிலே பாடுந்திறன் அமையப்பெற்ற செந்தமிழ் நன் மக்கள் இனிய அழகிய பலவகை நூல்களைப் பல துறைகளி லுஞ் செய்து முடித்துத் தமிழகத்துக்கே யன்றி இவ்வைய கத்துக்கே அறிவமுதை வழங்கி யிருப்பார்கள் என்பது ஒருதலை. ஒருகால் இரட்டையர் நல்குரவு என்னும் வல் விடம் தீண்டச் செப்பிய தீங்கவி கற்றோர் நெஞ்சத்தைக் கரைந்துருகச் செய்யும் :

கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள் !
கூட்டோடே எங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினோம் அல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்.

இவரைக் கூவத்து நாரணன் என்னும் தமிழ் வள்ளல் கண் ணோட்டம் வைத்துப் பெரிதும் பேணி வந்தனன். அவன் புகழ்ச்சிப் பெருக்கை நெஞ்சார மென்மேலும் உவகை ததும்ப,

மாதாபி தாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா அவனே தருங்கீர்த்திக்கு—ஆதாரன்
தியாக சமுத்திரன் தண்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தோ.

என்று எடுத்துரைத்தனர். பின் அவ்வருங்குணச் செம்மல் இவ்வுலக வாழ்வை நீத்தமைக்கு உள்ளமுருகி, இயமனைச் சுட்டி, 'அந்தோ! பாவி! கூவத்துத் தியாக சமுத்திரமாகிய நாரணனைக் கொல்லல் நன்றோ? கற்பகச் சோலையைக் கறிக் கென வெட்டலாமோ?' என நல்லார் பன்னாள் நில்லாது இறத்தலையும், அல்லார் பல்லாண்டு இருத்தலையும் பொரு ளாக அமைத்து, அதனைக் காலன்மீது மடமையாக ஏற்றி,

இடுவார் சிலரும் இடாதார் பலரும்
வடுவிலா வையத் திருக்கப்—படுபாவி,
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு.

என்று ஓர் யாப்பு இயம்பினர்.

இரட்டையர் ஒருகால் ஆசுகவி பாடுவதில் தமக்கிணை தாமேயாகிய காளமேகப் புலவரைச் சந்தித்து அவருடன் கமலாலயம் எனச் சீர்த்தி பெற்ற திருவாரூரை அடைந்து, தியாகராயப் பெருமானை முறுகி வளர்ந்த அன்போடு வணங்கினர். அப்போது குருடர் சிவபெருமானைப் பாவால் பரவ நினைந்து,

நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்
பாணந்தான்—

என்ற வளவில் அவருக்கு நாத்தடைப்பட்டது. முடவருக்கும் அதனை முடிக்கச் சீர் வரவில்லை. இருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்பட்ட அளவில் அவ்வேளையில் அருகேயிருந்த காளமேகப்புலவர் உடனே,—'மண் தின்ற பாணமே,' என்றனர். இச்சீர் எழுந்த மாத்திரையானே முடவர்,

—தாணுவே,

சீராரூர் வாழுஞ் சிவனே சிரிப்பன்றோ
நேராரூர் செற்ற நிலை.

என்று கூறி வெண்பாவை நிரப்பினர். பின் இரட்டைப் புலவர் காளமேகப் புலவர் அற்புத சக்தியை வியந்து,

விண்தின்ற கீர்த்தி விளைகாள மேகமே,
மண்தின்ற பாணமென்ற வாயினிக்கக்—கண்டொன்று
பாகொடுதேன் சீனியிடும் பாக்கியம்பெற் றோமிலையே
ஆகெடுவோ மூக்கிங்கென் னும்.

என்று பாடிப் புகழ்ந்தனர். பின்னர் இரட்டையரும், காள மேகப் புலவரும் ஒருவரோ டொருவர் அளவளாவி,

'உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.'

என்னுந் தமிழ்மறையின்படி மிக்க வருத்தத்துடன் பிரிவாரா யினர்.

சில்லாண்டுகள் சென்றபின்னை இரட்டையர் திருவா னைக்காவிற்குச் சென்று திருக்கோயில் வழிபாடு புரிந்து, காளமேகப் புலவரைக்கண்டு மகிழ, அவர் அகத்துக்குச் சென்றனர். அப்போது அங்குள்ளார், அவர் அன்று தானே சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தாரெனவும், அப் போது தானே அவரது யாக்கை சுடலைக்குக் கொண்டு போகப்பட்டது என்பதையுங் கேட்டு, கடலுள் கலங்கவிழ்ந் தாற் போன்று வருந்திச் சுடலைக்கு விரைந்து செல்லப் பிணம் வேதலைக் கண்டு மீளாத் துயரத்துடன்,

ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா,
விண்டின்ற செந்தழலில் வேவுதே ஐயையோ !
மண்டின்ற பாணமென்ற வாய்.

என்று பாடிப் புலம்பினர். இளமையிலேயே கவிபாடுந் திறன் வாய்ப்பப் பெற்றுக் கலம்பகம், உலா முதலிய அரிய பெரிய பிரபந்தங்களைப் பாடி முடித்த செந்தமிழ்ப் புலவ ராகிய இரட்டையார் இருவரும் சிறிது காலஞ் சென்றபின் செம்பொருளின் அம்புயத்தாளில் சொரியும் சிவானந்த மதுவை உண்ண அதனுடன் இரண்டறக் கலந்தனர்.

# 4. காளமேகப் புலவர்

'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும்சோழ மண்டலமே'

எனச் சிறப்பித்துப் பாராட்டப்படுவது சோழ வளநாடு. அந்நாட்டிலே 'கோனிலை திரிந்து கோடை நீடினுந் தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை' யாகிய காவிரி யாறு எக்காலத்தும் பெருக்கறாது நின்று பொன் கொழிக்கும். நீர் வளம் குறைவறப் பெற்ற அச்சோணாடர் முப்போகம் விளைத்துச் 'செல்விருந் தோம்பி வருவிருந்து' பார்த்திருப்பர். அதனால் அது, 'சோழ வளநாடு சோறுடைத்து,' என்ற புகழுரையும் பெற்று விளங்கும். வயிற்றுப் பெருமான் பூசனை இனிது நிறைவேறவே அந்நாட்டினர் கடவுள் வழிபாடு புரிவதிலும், தமிழாராய்ச்சியிலும் தமது காலத்தைச் செலவிட வல்லாராயினர். அதனால், சோழ மன்னர் தமிழ் மொழியைப் புலவர் பலரை ஆதரவு செய்து முகத்தான் வளம்படுத்தினர்; தமது நாட்டில் எங்கெங்கும் திருக்கோயில்கள் கட்டினர்; ஆங்காங்குத் திருக்குளங்கள் தொட்டனர்; அன்னசாலை, விடுதிசாலை முதலியன எடுத்தனர்; இளமரக்காவும், பயன்மரச் சோலையும் வைத்தனர்; தத்துவ ஆராய்ச்சியில் தலைக்கூடி நின்று, புராணக் கேள்விகளை மக்கள் கேட்குமாறு பட்டி மண்டபங்களை இயற்றுவித்து, ஆங்குப் புலவர் குழுமிப் பொருளுரை பொழியுமாறு செய்தனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சோழ வளநாட்டிலே

5

செல்வம் ஓங்கிய நகரங்களில் ஒன்ருகப் பொலியும் திருக் குடந்தையம்பதி என்னும் கும்பகோணம். அஃது எப்புற னும் அழகிய கோயில்களை உடையது. அந்நகரிலே குளங் கள் நிறைந்து, சோலைகள் செறிந்து,வயல்கள் மிகுந்து, விளங் கும் காட்சி எவ்வெவர் மனத்தையும் கவர்ந்து கொள்ளும் நீர் மையது. சிவாலயங்கள் பலவற்றினும் பேர் பெற்றுத் திகழ் வது கும்பேசன் கோட்டம். விஷ்ணுவாலயங்களுள் சீர்பெற் றுத் துலங்குவது ஆராவமுதன் சந்நிதி. இவ்விரு பெருங்கோ யில்களிலும் திருவிழா நடைபெறுங்கால் திரள்திரளாக மக் கள் குழுமித் தேவபூசனைசெய்து எண்ணிய வரங்களை எளிதில் அடைந்து எக்களிப் பெய்துவர். அந்நகரம் கல்விச் செல்வம் கவின்று, புலவர் வதியும் பொன்னகராய்ப் பொலிந்தது. அதனல் அங்குச் செந்தமிழ் மணம் சந்தநம் வீசிற்று. அப்பதியிலே புலவர் பாட்டுக்களாகிய களிய முதைப் பூரித்துண்டு அவரைப் போற்றும் புலமுடையோர் பலர் வாழ்ந்திருந்தமையான் அவர் பாடும் பாட்டும் பாடெய் தியது. அவரும் புகழும் பொருளும் பெற்று அருமைப் பாடு கொண்டனர்.

அத்தகைய அரும் பெரும்பதிக்கு அருகிலே யுள்ள நந்திக்கிராமத்திலே வேதியர் குலத்திலே வைணவ மரபிலே ஏறக்குறைய நானூறு ஆண்டுகட்கு முன்னர்க் **காளமேகப் புலவர்** பிறந்தார். அவருக்குப் பெற்ரேர் இட்டு வழங்கிய பிள்ளைப் பெயர் வரதர் என்பது. அவர் தக்க வயது வந்த தும், காவிரியாற்றின் நாப்பண் கண்டவர் கண்ணையுங் கருத் தையுங் கவரும்அழகுடன் விளங்கும் திருவரங்கத் திருந்கரை அடைந்து அவ்விடத்தே திருக்கோயிலின் மடைப்பள்ளியிற் பரிசாரகராக அமர்ந்தார். அப்போது அவர் அப்பெரிய

கோயிலிலே எழுந்தருளி இருக்கும் பெரிய பெருமாளாகிய அரங்கநாதனைத் தரிசிக்கவரும் பெருந்திரளான அன்பர் கூட்டுறவால் அரியபொருள்கள் பலவற்றையும் உணர்ந்தனர். அன்றியும் அவர் கல்வியறிவு மிகவும் பெற்றிலரேனும் கேள்விச் செல்வம் இனிது வாய்ப்பப் பெற்றார். அரங்கனது திருமுன்னர்க் கைகூப்பி நின்று, அப்பெருமான் வடிவழகு வெள்ளத்தில் ஈடுபட்டு, விழிநீர்பெருக, உள்ளங் குழைந்து, ஆர்வலர் வாயாரப் பாடும் வண்டமிழ்ப் பாடல்களால் வரதர் தோட்கப்பட்ட செவியராயினர். அவர் மடைத்தொழிலில் வினைத்திறன் சிறந்து, வெவ்வேறு வகைப்பட்ட சித்திரான்னங்களைப் பாகமுறச் சமைத்து யாவர்க்கும் மகிழ்ச்சியூட்டினர். திருவரங்கத்தின் ஒரு மருங்கிலே திகழ்வது **திருவானைக்கா** என்னுஞ் சிவநகர். அத்தேவ குலத்தில் வழிவழித் திருப்பணி செய்துவரும் கணிகையருள் அழகிலும் அன்பிலும் சிறந்தாள் **மோகனாங்கி** என்னும் ஒரு பெண்மணி. அவளுக்குத் திருவாசகம், தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளில் நல்ல பயிற்சி உண்டு. மோகனாங்கி இனிய குயில் போன்ற தனது குரலெடுத்துத் திருவெம்பாவை ஓதுவாளாயின் கல்லுங் கரையும்; மண்ணும் உருகும். அவள் வாயில் வரும் ஒவ்வொரு சொல்லும் தனித்தனி ஒவ்வோர் அழகைப் பெறும்.

இம்மாதரசி திருவிழா நடைபெறுகையில், ஒருகால் திருவாசகத்தில் வரும் குயிற்பத்தைப் பொருளுணர்ந்து, முப்பொறிகளும் ஒன்றுபடப் பாடி வரும்போது திருவரங்கத்துப் பரிசாரகராகிய வரதர் கேட்டு, அவள் அன்பு கனிந்த இன்பப் பாடலை மேன்மேலுங் கேட்டு மனமுருக வேண்டுமென விழைந்தார். அவ்விழைவு நாளேற நாளேற

முதிர்ந்து அவள்பால் காதலாய் அங்குரித்தது ; அக்காத லுஞ் சிறிது காலத்துள் வளர்ந்து வரதர் நெஞ்சை வாங்கிக் கொண்டது. வரதரும் மோகனாங்கியின் அரும்பெறற் காதலை அடையப் பலவாறு முயன்று இறுதியில் அவள் காதற்கிழமையைப் பெற்று மகிழ்ந்தனர்.

இங்ஙனம் வரதர் அம்மங்கையுடன் இன்புற்று அன் புற்று வாழ்ந்து வருங்கால், மார்கழித் திருநாள் வந்தெய்தி யது. திருவானைக்காவிலுள்ள கணிகை மாதர் யாவரும் ஈசனடியார்கள். அவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடித் தேவ கோட்டத்தில் திருவெம்பாவை ஓதி வந்தனர்; அக் கால் மத வைராக்கியம் மிகுந்துள்ள,

உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள் :
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க ;
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க ;
கங்குல்பகல் எங்கண் மற்றொன் றுங் காணற்க ;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.'

என்னுந் திருப்பாசுரத்தைப் பாடத் தையலர் அனைவ ரும் மோகனாங்கியை நோக்கிக் கொல்லென்று நகைத்தனர். மோகனாங்கியோ மென்மைத் தன்மை வாய்ந்தவள் ; வன் சொல் பொறாதவள் ; ஒரு சிறு சொல்லும் அவளைத் துன் புறுத்தும். இவ்வாறு மடவார் தன்னைச் சுட்டிப் பெருநகை செய்ததைக் கண்டு, அப்பாவை துண்ணென, வெகுண்ட நோக்குடன் அவர் தம்மை நோக்கி, அவர்கள் தன்னைப் பார்த்துச் சிரித்ததற்குக் காரணம் யாதென அவரை வின

ினள். அவர்கள் அவள் வெகுளியைத் தணிக்கவெண்ணி மெல்லென, 'மோகனாங்கி, நீ இப்போது பாடிய திருப்பாடலின் கருத்துக்கு முற்றும் முரண்பட்டிருக்கிறது' உன் செய்கை என்பதை நினைத்துத்தான் நாங்கள் யாவரும் நகைத்தோம்,' என்றனர். அதுகேட்ட மோகனாங்கி கண் சிவந்து, மொழி குழறி, அவர்களைச் சீறி நோக்கி, 'எவ்வகையில் என் செய்கை மாறுபட்டுளது? கூறுமின்,' என்றனள். அப்பொழுது அவளது சினக்குறிப்புப் பொறாத மங்கை யொருத்தி, மோகனாங்கியைப் பார்த்து, 'வைணவப் பார்ப்பானுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிற உனக்கு ஏன் வாயும் வீறும்? படிக்கிறது திருவாசகம்; இடிக்கிறது சிவன் கோயிலா? நீ இப்போது பாடிய பாட்டுக்கும் உனக்கும் எவ்வளவு தூரம்? எண்ணிப்பார். உன் செய்கை இதுவாயின் உண்மையுரைத்த எங்களை வெறுத்துக்கொள்வதால் என்ன பயன்?' என்று வெடுவெடுப்புடன் இகழ்ந்துரையாடினள். அவ் வன்சொற்களைக் கேட்ட மோகனாங்கி, வெங்கதிரால் தெறப்பட்ட இளங்கொடிபோல வாடிவாளா விருந்தனள். அவள் நெற்றி ஒளி இழந்தது; முகம் பொலிவழிந்தது; இதழ் புன்னகை தவிர்ந்தது. பின்பு அவள் தன் மனைக்கேகி அந்நங்கையர் கூறிய சிறுசொல்லை நினைந்து நினைந்து வருந்தினாள்; 'இவ்விழிவைப் போக்கும் வழியாது?' எனப் பலகாலும் சூழ்ந்து சோர்வுற்றாள். ஒருபுடை மாதர் மொழிந்த வன்மொழியும், மற்றொரு புடை வரதர் தன்மேல் வைத்திருக்குந் தலையன்பும் அவள் மனத்தைத் துன்புறுத்தின.

அப்போது வரதர் பெரிய கோயிலிலே தமக்குரிய வேலையை முடித்து மிக மகிழ்வோடு மோகனாங்கி இல்லம்

புகுந்தனர். அப்பாவை தனது மஞ்சத்தின்மீது பூங்கொடி போலச் சாய்ந்திருத்தலைக் கண்டார். அவள் மதர் விழி கள் பிறழ்வின்றி ஆழ்ந்திருந்தன; முகம் வெண்டாமரை யாய் வெளுத்திருந்தது. அது கண்ட வரதர் மனம் நொந்து, அவளுக்கு நேர்ந்த இடுக்கண் யாதென உணரு மாறு அவள் மருங்கு சென்று, இனிய மொழிகளால், 'கண் மணி போல்வாய், உனக்குற்ற இடர் யாது? உனக்குப் பூசல் செய்தார் உளரோ? உடனே கூறுக,' என்று மொழிந் தனர். அப்பொழுது அவளுக்குத் துக்கம் மேலிடக் கண் களில் புலப்பு முத்துறைத்தாற் போலப் புன்கணீர் உகுத் தாள். உடனே வரதர் தமது கரத்தால் அவள் கண்ணீரைத் துடைக்கத் தொடங்குழி, அம்மங்கை வரதர் கையைத் தடுத்துச் சினக்குறிப்புப் புலப்படுத்தினள். வரதர் இன்னது செய்வதென அறியாது திகைத்து, அவள் திருமுக மலரில் வழிந்தொழுகும் எழிலாகிய தேனைப் பருகுவாராய், 'என் உயிரினும் இனியாய், உனக்குற்ற துன்பம் எனக் குற்றதன்றோ? உடலை விட்டு உயிர் பிரியுமோ? உன் இன்னலுக்குக் காரணம் இன்னதெனத் தெரிவிப்பின், உடனே அதனை ஒழிப்பேன். உனக்குத் தீமை இழைத்தவர் உள ராயின், அவரை இந்நொடியிற்றானே ஒறுத்து உனக்கு உவகை யூட்டுவேன்; ஆகலான் கரவாது நிகழ்ந்ததை அறிவி,' என்று அவளைப் பெரிதும் வேண்டினர். அவ்வினிய மெல்லிய மொழிகள் மோகனாங்கி உள்ளத்தைக் குளிர் வித்தன; அவள் மனப்புண்ணுக்கு மருந்தாயின; அவள் நெஞ்சம் உயர்வுற்றது; அதனால் தனக்கும் கணிகையார் பிறர்க்கும் நேர்ந்தனவெல்லாம் செவ்விதின் வரதருக்கு எடுத்துரைத்தாள். இவையனைத்துஞ் செவி மடுத்த வரதர்

உவகை ததும்பும் வதனத்துடன் மோகனாங்கியை நோக்கி, 'ஆருயிர்ப்பாவாய், இவ்வளவுதானா? இதற்காக ஏன் வருந்தல் வேண்டும்; யாதோ என்று அஞ்சினேன். உன்னைப் பழித்த பாவையர் கருத்து இன்னதென உணர்ந்தேன். உன் மனக்கவலையின் காரணமும் இனிது விளங்கிற்று. உன்னை மகிழ்விப்பதே எனது மதம். அதன் பொருட்டு யாதாயினுஞ் செய்ய எனக்குச் சம்மதம். அதனால், இக்கணமே வைணவ சமயத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைத் தலைக்கொள்வேன். யாதற்கும் அஞ்சற்க; நாளை உன்னை இகழ்ந்த பெண்டிர் இடையே பெருமித முடைய மயில்போல நடந்து சென்று இச் செய்தியைச் செப்பிச் செருக்கி நிற்க,' என்று தெளிவாகத் தன் செயலைக் கிளந்து கூறி, அவள் அருகே சென்றனர். அவளுக்கு அதனால் பெருங்களிப்புப் பொங்கி வழிந்ததேனும் மதத்தை மாற்றிக் கொள்வது அத்துணை எளிதென அறியாளாய், அவள் வரதரை உற்று நோக்கி ஆழ்ந்த நினைவோடு, 'அவ்வாறு எளிதிலே ஒருவர் தமது மதத்தை மாற்றிக்கொள்ள இயலுமோ?' என்றாள். வரதர் அவளைப் பார்த்து, 'அஃது எளிதே; அரிதன்று. இனி நான் திருநாமஞ் சாத்துதலை விடுத்துத் திருவெண்ணீற்றை அணிய வேண்டுவது தானே. அதனால் விளையும் இடையூறு யாது?' என்று மறுமொழி கூறினர்.

மோகனாங்கி, அவரைப் பார்த்து, 'அங்ஙனமாயின் கோயில் அதிகாரிகள் தங்களை அங்கே வைத்திருக்கமாட்டார் அன்றோ?' என்று வினாயினள். உடனே வரதர், அவளை நோக்கி, 'இந்த மடம் போனால் ஒரு சந்தமடம் ஆகிறது; அதற்கு நீ ஏன் கவலைப்படல் வேண்டும்?' என்று கூறி

அவள் செந்தாமரை போன்ற கரங்களைப் பற்றி, கண்ணடி போலத் தெளிந்து, அழகு ஒழுகுவனவாகிய கபோலங் களில் ஆர்வமுடன் கணக்கின்றி முத்தம் வைத்தனர். மோக ஞங்கியும் உடனே திருவெண்ணீற்றைக் கொணர்ந்து, அவர் கையிலளித்து, அதனைச் 'சிவசிவ' என அண்ணுந்து நிலத் திற் சிந்தாமல் தரிக்கச் சொன்ஞள்; அவரும் அவ்வாறே அன்போடு அதனை யணிந்து, திருவருளை வழுத்தி நின்ருர். மோகஞங்கி அவரைத் தழுவிக் கற்பகத்தைச் சேர்ந்த காம வல்லிக் கொடிபோலத் திகழ்ந்தனள்.

மறுநாட் காலை வரதர் திருமண் தரித்துக் கொள்ளா ராய்த் திருநீற்றை அணிந்து வெளிப் போதலைக் கண்டார் அனைவரும், 'இதென்ன விபரீதம்! இப்பரிசாரகர் ஆண்டி வேடம் பூண்டார்! இவர் மதி கெட்டதோ! இது பைத்தி யத்துக்குத் தொடக்கமோ!' என்று தம்முள்ளே பேசி நகைத்துக் கொண்டனர். வைணவர் மனம் வருந்தி வரதர் மீது அளவற்ற சினங் கொண்டனர். சைவர் மனமகிழ்ந்து அவரைத் தழுவிக்கொண்டனர். திருவரங்கம் பெரிய கோயில் அதிகாரிகள் இவரைத் தம்மால் இயன்ற வரை நயந்தும் அச்சுறுத்தியும் பார்த்தனர். அவர் ஜபம் பலிக்க வில்லை; அதஞல் அவரைக் கோயிலினின்றும் நீக்கினர். உடனே வரதர் திருவானைக்காக் கோயிலின்கண் மடைப் பள்ளிப் பரிசாரகராய் அமர்ந்தனர்.

மோகஞங்கி தன்னை முன்ஞள் எள்ளிய கணிகையர் குழுவிற் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி இன்புக்கு உரை விட மாயினள். அவர்களும் அவள் ஆற்றலை வியந்து வரதர் செய்கையை எண்ணி நகைத்து, விளையாட்டு வினையாக முடிந்தமையைப் பன்னிப் பன்னிப் பொழுது போக்குவா

ராயினர். இச்செய்கை நிகழ்ந்த பின்னர் மோகனாங்கிக்கு வரதர்மீதுள்ள காதல் முறுகி வளர்ந்தது. அவளும் அவரும் உடலும் உயிரும்போலும், உகிரும் தசையும் போலும் இனிது வாழ்ந்து வந்தனர். அவர்தம் மனங்கலந்த வாழ்க்கை இம்மையிலே எய்தும் சுவர்க்கலோக சுகம்போ லிருந்தது.

இஃதிவ்வாறாக, திருவானைக் காவிலேயுள்ள சிவாலயத்துள் சைவ வேதியர் ஒருவர் இருந்தார். அவர் ஒழுக்க மிக்கவர்; விரதத்தால் இளைத்த திருமேனியினர்; அனுட்டானபரர்; வைதிக ஒழுக்கம் வழுவாதவர். அவருக்குச் செந்தமிழ்ப் புலமை அடைந்து, கவிபாடல் வேண்டுமென்னும் வேணவா உதித்தது. அவர் கவிதா சக்தியைக் கலைமகளார் திருவருளாலே பெறல் வேண்டுமென எண்ணினார். ஏனெனில், ஒரு புலவரை அடுத்துக் கல்வி கற்பது அவருக்கு இயலாது. ஏடுதூக்கிச் சென்று, ஆசிரியர் ஏடு அவிழெனை அவிழ்த்து, இருவென விருந்து சொல்லெனச் சொல்லிச் சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிப் போவெனப் போதல் அவருக்கு முடியாத கருமம். பொருள் நனி கொடுத்தேனும், வழிபாடு புரிந்தேனும் கற்றற்கும் அவருக்குப் பொருளும் விருப்பமும் இல்லை. அதனால் அவர் கம்பர், கூத்தர் முதலியோர் வரப்பிரசாதம் பெற்றுப் பாடினார் என்று கேள்வியுற்றவராதலின் அவற்றுள் முழுநம்பிக்கைகொண்டு, தாமும் அன்னோரைப் போலவே நாமகளார் அருள் பெற்றுக் கவிபாடும் வன்மை பெறல் வேண்டுமென நினைந்து, சாரதாதேவியை முன்னிட்டுப் பன்னாள் நோன்பு நோற்று வந்தனர். வெண்டாமரையாளும் அவர் நெடுங்காலம் நோற்று வந்தமையான் அவருக்கு அருள் சுரக்கத் திருவுளங் கொண்டு, ஒருநாள் கோயிலின் ஒருபுறத்தே சாவித்திரி

மந்திரத்தை உருவேற்றிக் கொண்டிருக்கும் அவ்வந்தணர் அருகே சென்றனள். சென்ற வாணி அம்மறையோரை விளித்துத் தன் திருவுருவத்தைத் தோற்றுவித்து அவரைத் தனது அருள் வழியும் திருக்கண்களால் நோக்கி, 'அன்ப, நின் வாயைத் திறக்க', என்று கூறி, அண்மையிற் சென்று தன் வாயிலுள்ள தம்பலத்தை உமிழ்வான் புக்கனள். அந்தோ! பாவம்! அப்பார்ப்பனர் போகூழ் வயத்தானே அங்குத் திருமேனி தாங்கி எழுந்தருளி யிருப்பவள் மணிமுடி மன்னரும் வணங்கத்தக்க அணிமலர்ச் செல்வியென்று அறிகிலராய், யாரோ ஒரு தீயொழுக்கமுடைய தையலெனப் பிழைத்துணர்ந்து வெடுவெடுப்புடன், 'ஹே! துஷ்டை! அகலச் செல். யாரென மதித்தனை', என்று சினந்துரைந்தார். அம்மட்டில் நாவின் கிழத்தி அவருக்கு அப்பிறப்பிலே தவமுதிர்ச்சி யின்மையைத் திருவுளத்தடைத்துக் கோபுர வாயிலை அடைந்தனர்.

அங்கே வரதர் பள்ளிக்கொண்டிருந்தார். அவர் படுத்திருந்ததற்குக் காரணம்: தாம் தம்காதற்குரிய மோகனாங்கியிடம் கோயில் திருப்பணி முடிந்ததும், தம்மை மனைக்கு அழைத்துப் போம்படி உரைத்துச் சென்று ஓரிடத்தில் அயர்ந்து படுத்துக் கொண்டவர், மெய்ம்மறந்து உறங்கி விட்டதேயாம். மோகனாங்கியோ தன் பணி முடிந்ததும் தன் காதலரைத் துருவித் துருவிப் பார்த்துக் காணாளாய் வீடு சென்றிருப்பாரென எண்ணி மனையை அடைந்தனள். கோயிலும் அடைக்கப்பட்டது. கோபுர வாயிலின் மருங்கிலே ஒரு மூலையிலே அயர்ந்து துயின்ற வரதர் நள்ளிரவில் துயிலுணர்ந்து, தனது ஆருயிர்க் காதலியை எண்ணி யெண்ணி உறக்கம் பிடியாமல் விழித்துக்கொண்டிருந்தனர்.

அவர், 'அவள் ஒருகால் கோயிலிலேயே தங்கிவிட்டனளோ!' என நினைப்பார்; மற்றொருகால், 'வீடு சென்று என்னைக் காணாது மீண்டு வருவாளோ!' என எண்ணுவர்; மரமசைந்தால், 'அவள் காலடிச் சத்தம் கேட்கின்றது; அதோ அவள் வருகின்றாள்,' என உன்னுவர்; 'வாராதொழியாள்; அவள் உள்ளம் மலரினும் மெல்லிது அன்றோ?' என உள்ளுவர்; 'இன்று மோகனாங்கி வெள்ளாடை பூண்டு வெள்ளைப் பணி பூண்டிருத்தலைக் காணின், கலைமகளும் நாணுவாள்," என முன்னுவர்; 'இக்கோயிற் பணிக்கர் இவள் கோலத்தையே இறைவிக்கு நாளை நவராத்திரி விழாவிற்குக் கொள்ளலாம்,' எனக் கொள்ளுவர்.

இங்ஙனம் எண்ணமிட்டுக் கொண்டிருப்பார் எதிரே சகலகலாவல்லி, வெளியது உடீஇ, வெண் சாந்தணிந்து, வெண் பூச் சூடி, வெண்பணி பூண்டு தோன்றினார். உவா மதி தண்ணிய கதிரைச் சொரிந்து பாற்கடல் பொங்கி ஒழுகுவது போல ஒளிர்ந்தது. எங்கும் ஒலி யவிந்து அமைதி குடி கொண்டிருந்தது. அவ்வெண்மதியே நிலத்தே இறங்கிப் போந்ததோ என்று எண்ணுமாறு விளங்கும் அம்மையார் திருவுருவைக் கண்டு வரதர் தம்மை மறந்தும், சிறிதுங் காலந் தாழ்த்தாது,'கண்மணி, வந்துவிட்டனையோ? இவ்வளவு நேரம் எங்கிருந்தாய்?' என்று கூறத்தொடங்கியவர், சிறிது நேரத்தில் தமக்குள்ளே பொங்கி யெழுந்த காதல் வெள்ளத்தைக் கரைசெய்து, அவளே வந்து விட்டமையான் சிறிது மௌனஞ் சாதித்து விளையாட்டு அயரலாம் என்னும் எண்ணத்தால் வாய்வாளாமை மேற்கொண்டிருந்தார். அப்போது வாக்கின் செல்வி அவருக்கு அண்மையிற் சென்று, 'நின் வாயைத் திறக்க', என்றனள். வரதர் மோகனாங்கி தானே இவ்வண்ணஞ் செப்புகின்றாள் என்று

நினைந்து அவள் வெகுளுமேல் தனது விளையாட்டனைத்தும் பறந்து விடுமென உட்கொண்டு, உடனே, தமது வாயை அகலத்திறந்தனர். அப்போது கலைமகளார் தமது வாயி லுள்ள தம்பலத்தைத் தம் பலத்தைத் தருவார்போல் அவர் வாயில் துப்பினர். அதனால் வரதர் துப்பினர் ஆயி னர். உடனே வரதர் தம்பலந்தந்தருளிய தலைவியைத் திருமிநோக்க, அத்தெய்வ வடிவம் துண்ணென மறைந்தது. வரதர் நான்கு பக்கங்களிலுஞ் சென்று தேடினர்; அப் பளிக்குமேனியையும், விளிக்கும் ஓசையையுங் கண்டிலர். அப்பொழுது அவர், 'அந்தோ! ஈண்டுப் போந்தவள் என் அன்னை யன்றே! ஆ கெடுவேன்! வலிய வந்து எளியேனை ஆண்ட என்னம்மையை அறியாது போனேனே! பாவி யேன் அவள் பவளம்போன்ற தூய திருவடிமலரைத் தலைக் கணியாகச்சூடேனே! அவள் தூயசேவடிகளில் விழுந்து விழுந்து வணங்கேனே! அவள் அழகிய திருமேனிப் பொலிவை நோக்கி நோக்கி உள்ளங் குழையேனே! அவள் அருள் பொழியும் விழிக்கடையில் ஒழுகும் ஆனந்தத் தேனைப் பாவி விழிகளால் பருகி ஆரேனே!' எனப்பலவாறு நெஞ்சம் எரியி லிடைப்பட்ட இழுதுபோலுருகி, கண்ணீர் தண்மணற் கேணிபோல் சுரப்ப, உடல் முழுதும் புளகம் போர்ப்ப, அழுதும் தொழுதும் அரற்றியும் தலையன்பிலே நிலைநின்றனர். இதுகாறும் அறுசுவை யமுதம் பாகமுறச் சமைத்த பரிசாரகர் இதுமுதல் செந்தமிழ்த் திருச்சுவை அமுதம் பாகமுறச் சமைக்கும் பாவலரானர். கைவளம் படைத்த வரதர் நாவளம் படைத்த நாவலரானர். நாவிற்கு இனிமை யூட்டி உடம்பை வளர்த்த வரதர் செவிக்கினிமை யூட்டி உயிரை வளர்ப்பவ ராயினர். புதுப்புதுப் பாகம்

செய்து சோற்றுச்சுவை தெரிப்பார், புதுப் புதுப் பாகம் செய்து பாட்டுச் சுவை தெரிப்பார் ஆயினர். செந்தமிழ் அணங்கு புதுக்கலன் புனையும் நாள் வந்தது. அருந்தமிழ் மொழியில் ஒரு புத்தம் புதுச் சுவை தோன்றிற்று. வரதர் தம்மை மறந்தார்; தாம் ஏதோ பேராற்றல் வாய்ப்பப் பெற்ற வராக நினைந்தார். தமக்குப் பாட்டுப் பாடும் வன்மை யுண் டானதாக ஒருணர்வு அவருள்ளிருந்து உணர்த்திற்று. தமது நல்வினைப் பயனை எண்ணி இறும்பூதுற்ருர். 'நான் இனிக் கவிமாரி பொழிவேன்,' என மகிழ்துாங்கி மெய் யெலாம் உணர்ச்சி வயப்பட்டுத் துள்ளினர்; குதித்தார்; கூத்தாடினர். அப்போது, 'நீ காளமேகம்போல் கவி பொழிவாயாக', என்ருெர் உணர்ச்சி உண்ணின் றிசைத் தது. 'ஆம்; ஆம்; நான் காளமேகம்போல கவிமழை சொரிவேன்; என் பெயர் காளமேகப் புலவன்', என்று கூறித்தலைதெரியாது களிப்புக்கடலுள் முழுகினர்.பொழுது விடிந்தது; திருப்பள்ளி யெழுச்சிக்காகக் கோயிலுட் புக் கனர் ஆதி சைவ அந்தணர். திருக்கதவுந் திறக்கப்பட்டது; காலைச் சங்கம் முழங்கிற்று; அடியவர் அரா அரவென ஒலித் தனர். காளமேகப் புலவரும் எழுந்து திருக்குளத்திற்குச் சென்று, நீராடிப் பூசைமுடித்து, அகிலாண்டேசுவரியின் திருமுன்னர்ச் சென்று தொழுது வணங்கி, மோகனங்கி யின் இல்லம் புகுந்து நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொல்லிச் சொல்லி உவகைக் கண்ணீர் சொரிந்தனர். மோகனங்கியும் தன் தலைவனைப் பன்முறை தழுவி, அளவு கடந்த இன்பக் கடலுள் அமிழ்ந்தனள். அவள் பெருமகிழ்ச்சியைக் காண மேலும் மேலும் மகிழ்ந்தனர் காளமேகப் புலவர்.

அன்று முதல் காளமேகப் புலவர் செந்தமிழ்ப் பாக்களைப் பொழிதலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்துவருவாராயினர். அவர் பாடும் பாட்டுக்கள் எல்லாம் நகைச்சுவை மலிந்து, இயற் சொற்களால் இயன்று, விநோதமுடையனவாய், எளிதிற் பொருள் விளங்குவனவாய்ச் சொன்னயம் பொருந்தி யிருந்தன. இதனால் இவர் செய்யுட்கள், கற்றார் கல்லாதார் ஆகிய இருதிறத்தினரையும் மகிழ்வித்தன. இவருக்குப்பேரும் புகழும் பெருகித் திகழ்ந்தன. எத்தகைய கவியையேனும் தட்டுத் தடையின்றிப் பாடிய காரணத்தானே இவர் **ஆசுகவி** எனப்பட்டனர்; எவரேனும் தகாதசெயல் புரிவரேனும், தம்மைச் சிறிது இகழ்வரேனும் பொறாது அவரை வைது **வசைக்கவி** என வழங்கப்பட்டனர். வசைக்கவி செய்தலில் வல்லவராக விளங்கியதனால் கற்று வல்ல பெருமக்களும் இவர்தம் பேர் ஆற்றலை வியந்து, **'வசைபாடக் காளமேகம்'**, எனப் புகழ்ந்துரைத்தனர். இங்ஙனம் சீர்த்திபெற்று வாழ்ந்து வருங்கால், ஒருநாள் புலவர் திருவரங்கம் சென்றனர். அங்கிருந்த சைவர் சிலர் இவரை நோக்கி விளையாட்டாக, 'புலவரேறே, திருவரங்கம் பெரிய கோயிலில் பிள்ளையார் வருவானேன்?' என்றனர். அதுகேட்ட கவிவாணர் உடனே,

> தந்தை பிறந்திறவாத் தன்மையினால் தன்மாமன்
> அந்தம் பிறந்திறக்கும் மாதலால்—முந்துமணி
> நாணிக்கு வில்வேளும் மாய்தலால் நம்மாமன்
> காணிக்கு வந்திருந்தான் காண்.

என்றோர் அருங்கவி அறைந்தனர். அது, பிள்ளையார் தம் நன் மாமனாகிய திருமாலின் உரிமையை எய்துதற்குரிய மன்மதன் எரிந்தமையானும், தம் தந்தை இறவாத் தன்மையராதலின், அவர் பொருளை அடைதலென்றும் தமக்

இன்மையானும் அந்நன்மாமனுர் உரிமையைப் பெறுவான் ஆங்கே போந்திருந்தனரென உலக வியலை யொட்டி வேடிக் கையாகப் பொருள்படுதலைக் கேட்டார் அனைவரும், 'இது போல் கவி சொல்லுதல் யாவர்க்கும் அருமை—அருமை!' என்று வியந்து சென்றனர். அப்போது அடிக்கடி சீரங் கத்து வைணவர்க்குந் திருவானைக்காச் சைவர்க்கும் வைராக் கியத்தால் மதச் சண்டை நேர்தல் உண்டு. அவ்வாறு அவ் விருதிறத்தாரும் ஒருபகல், 'அரியதிகன்,' 'அரன் அதிகன்' என வாக்குவாதஞ் செய்திருக்கையில் ஆண்டுச் சென்ற காளமேகப் புலவர், அவர் தம்மை நோக்கி,

சீரங்கத் தார்க்குந் திருவானைக் காவார்க்கும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டா மிதெல்லாம் விகற்பந் தெரியாதோ
ஆண்டாருந் தாசருமா னல்.

என்று சைவப்பரதேசிகள் ஆண்டிகளெனவும், வைணவப் பரதேசிகள் தாசரெனவும் உலகத்தில் அழைக்கப்படுதலைத் தலைக்கீடாகக் கொண்டு சொல்வழக்காறே பெருமை, சிறு மை இனி துணர்த்தலை உணர்தல் அரிதன்று என்னும் உட் கோள் தோன்ற நன்கு விளக்கினர். அஞ்ஞான்று சீரங் கத்தே வாழும் தமிழறிந்த பாகவதர் ஒருவர் அண்ணனப் புலவரை விளித்து, "தமிழ்ப் புலமையில் மிக்கோம் எனத் தருக்கித் திரியும் காளமேகமே, 'என்னை இடுக்கடி பாயைச் சுருட்டடி ஏறடி அம்பலத்தே', என்றமைத்து ஒரு கவி விறைவில் பாடுதிர்", எனச் சமுத்தி கொடுத்தனர். கொடுத் ததும் புலவர் பெருமான்,

தடக்கடலிற் பள்ளி கொள்ளுவம் யாமதைச் சங்கரனுர்,
அடற்புலிக் குட்டிக் களித்தன ரால்அது கேட்டுநெஞ்சம்

நடுக்கம துற்றது கைகா லெழாவளி னத்தியென்னை
இடுக்கடி பாயைச் சுருட்டடி ஏறடி அம்பலத்தே.

என்றொரு பாட்டிசைத்துப் பாகவதர் திடுக்கிடச் செய்தனர். இவர் வைணவ சமயத்தை விடுத்துச் சைவ சமயத்திற் புகுந்தமையான், வைணவர் இவரை வெறுத்து அவ்வப்போது இவரை இடர்ப்படுத்துவா ராயினர்; ஆகவே சிவபரத்துவம் தோன்ற அன்னோர்க்குக் கவி புனைந்து காட்டுவர்; எனினும் மதத்துவேஷம் வாய்ந்தவரல்லர். இவர் கள்ளங் கவடு இல்லாதவராயுஞ் சிறிது முன்கோபம் உள்ளவராயும் இருந்தமையான், சிலர் இவரை வெறுத்தனர். அதனாலும் இவருக்குப் பல வேளைகளில் இடர்ப்பாடுகள் நிகழ்ந்தன. ஞானவரோதயர் என்னும் புலவர் மதுரைக்குச் சென்ற காலை அவருக்குப் பின்வருமாறு ஒரு கவிதை எழுதி யனுப்பினர்:

முதிரத் தமிழ்தெரி நின்பாடல் தன்னை முறையறிந்தே
எதிரொக்கக் கோப்பதற் கெழு பேரில்லை இன்தமிழின்
பதரைத் தெரிந்தெறி கோவில்லை யேறப் பலகை யில்லை
மதுரைக்கு நீ சென்ற தெவ்வாறு ஞான வரோதயனே.

ஒருகால் காளமேகப் புலவர் ஒரு பந்தியில் அமர்ந்து உண்ணும்போது சவையப்ப நாயன் என்பவன் பக்கத்தில் இருந்து உண்டான். அவன் நீண்ட குடுமி யுடையவன். அவன் குடுமி இலைச்சோற்றில் அவிழ்ந்து விழுந்தது; அதனை அவன் எண்ணாது உதறினான். உதறியதனால் குடுமியிலேயே பற்றியிருந்த சோற்றுப் பருக்கை கவிவாணர் பரிகலத்தில் தெறிக்க, புலவர் பெருந்தகை வெகுண்டு, அவனது ஒழுங்கின்மையை எள்ளி,

சொருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா, சோற்றுப்
பொருக்கெழுந்த வாயா, புலையா,—திருக்குடந்தை

நாயா நரியாஉன் நாய்முகமுஞ் சேய்வடிவுந்
தாயார்தான் கண்டிலளோ தான்.

என ஒரு வெண்பாவைச் சொற்றனர்.

பின்னாட் சென்றதும் புலவர், 'திருவாரூர்ப் பிறந்தார்கள் அனைவர்க்கும் அடியேன்' என்று நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சிறப்பித்துக் கூறப்பட்ட திருவாரூரைத் தரிசிக்க விரைந்து சென்றனர். ஆங்குத் தியாகராயப் பெருமான் திருக்கோலத்தைக் கண்டு வணங்குகையில், அம்மையப்பர் திருமார்பிலே வயிரப் பதக்கம் இலங்குதலை அவர் கண்டார். கண்டதும் சதுரம்பட மதுரம் பொருந்திய,

அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரா, நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருப்பதா?—முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றும் சோழன்மக னைக்கொன்றுஞ்
சண்டன்மக னைக்கொன்றுந் தான்.

என்னும் இனிய செய்யுளை இசைத்தனர். பின்னர்ப் பன்னாள் அங்கே வதிந்து முப்போதும் வீதி விடங்கனை வழிபட்டு வந்தனர். ஒருநாள் திருக்கோயில் திருமதிலைச் சுற்றி வலம் வரும்போது, 'இதுதான் பரவையார் மாளிகை,' என்று அன்பர் சிலர் கூறக் கேட்டனர். அது செவிபுக்கதும் அவ்வம்மையாரின் அன்பின் பெருக்கும், சுந்தரருக்கும் அந்நாச்சியாருக்கும் இருந்த காதற் சிறப்பும், அந்நங்கையார்பால் சிவபரம்பொருளே சுந்தரனார் பொருட்டு ஒருகாலக் கிருகால் திருவடி நோவச் சென்றமையும் நினைவிற்கு வந்தன. உடனே சிவபெருமான் அடியார்க் கெளியார் என்பதும் மற்று எத்தகைய கடவுளர்க்கும் அரியர் என்பதும் தோன்ற,

ஆனார் இலையே அயனும் திருமாலும்
காணார் அடிமுடிமுன் காண்பதற்கு—மேனாள்

இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

என்னும் வெள்ளைக் கவி விளம்பினர்; பின் அவ்வூரை விட்டு நாகைக்குச் செல்லப் புறப்பட்டனர். அப்போது விகடராமன் என்னும் ஆயக்காரன் ஒருவன் சண்டிக் குதிரை ஒன்றைப் பூட்டி வண்டி ஊர்ந்து செல்வானாயினன். அவ்வண்டிக்கு முற்போந்து குதிரையைப் பற்றிச் சிலர் இழுப்பவும், பின்னே சிலர் வண்டியை உந்தித் தள்ளவும், அப்பரிபரிதபித்தது கண்ட காளமேகப் புலவர் அக்குதிரையை இகழ்ந்து,

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி.

என்றியம்பினர். பின்னொருகால் ஆமூரின்கண் வேங்கட்டன் குதிரையைப் பார்த்து, அது வடிவு, ஓட்டம், பெருமிதம் முதலிய எவ்வாற்றானும் பரிமாவிற் குரிய இலக்கணம் முற்றும் வாய்ந்து சிறந்திருந்ததா லதனைப் புகழ்ந்து,

ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா—வேறுமா
வெந்தமா சும்மா வெறுமா களிகிளற
வந்தமா சந்தமா மா.

என்று விகடமாக ஒரு யாப்பு உரைத்தனர். பின்பு அவர் நாகையின்கண் காத்தான் சத்திரத்திலே உண்டு இளைப்பாற வந்தனர். அங்கே பரிசாரகப் பிராமணன் ஒருவன் அவருக்கு அன்னம் விரைவில் தருவதாகக் கூறி, நெடுநேரம் பசிப்பிணியால் பெரிதும் வருந்துமாறு விடுத்தனன். அப்பொழுது,

*கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்*
*அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி*
*உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்*
*இலையிலிட வெள்ளி யெழும்.*

என்று ஒரு வசைக்கவி இசைத்தனர். பின்னர் அவர், அந் நகரத்திற் சிறிது காலம் தங்கிக் காரோணரைத் தரிசித்து மீள்கையில், தாசி ஒருத்தி பாடினாள். அவள் குரல் இனிமை யின்றி இன்னாததாய் இருப்பக் கவிஞர்,

*வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்*
*பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்*
*கழுதைகெட்ட வண்ணான்கண் டேன்கண்டேன் என்று*
*பழுதைஎடுத் தோடிவந்தான் பார்.*

என்று பாடினர். மற்றொருநாள் நெடுந்தூரஞ் சென்று பசியாலும், வழிநடந்த வருத்தத்தாலும் இளைத்துக் களைத் துப் போய் ஒரு வீதியை அடைய, அங்கே சிறுபிள்ளை கள் பாக்கு விளையாட்டை ஆடிக்கொண் டிருந்தனர். அவர் களைப் பார்த்து அருந்தமிழ்வாணர் கண்பஞ்சடைந்து, மெய் சோர்ந்து, நாவுலர்ந்து, வாய்சோர, 'சோறு எங்கே விக்கும்?' என்று வினவினர். அவர்கள், 'கற்றார் வாழ்நாகை'க் காளைக ளாதலால் புலவர் 'விக்கும்' என்று கூறியதை உட்கொண்டு, 'சோறு தொண்டைக் குழியில் விக்கும்,' என்றுரைத்துப் பெருநகை செய்தனர். புலவரோ முன்கோபம் உடையவர்; அதனோடு பசியோ காதடைக்கிறது ; அவருக்குக் கோபம் பொங்கி யெழுந்தது. உடனே அவர், ' இவர்களை அறம் பாடித் தொலைத்து விடுவேன்,' என்றெண்ணி ஏடு இன்மை யால் ஒரு சுவரை அடைந்து தமது கைக்குக் கிடைத்த கரித் துண்டு ஒன்றை எடுத்து,

'பாக்குத் தரித்து விளையாடும் பாலகர்க்கு'

என்றோர் அடியை யெழுதினார்; அதன்மேல் பாட்டு நடக்கவில்லை; பசியால் ஆசுகவித் திறமும் அகலப் பறந்தது கண்டு, அவர், 'நன்று, நான் சென்று சோறுண்டு மீண்டு கவிதையை முடிப்பேன்,' என்றுன்னி விடுதி நாடி விரைந்தனர். இறைவன் திருவருளால் இனிமையான விடுதி அவருக்குக் கிடைத்தது. அங்கே சைவவேதியர் ஒருவர் அவர் பசியை யறிந்து பரிகலம் முதலியன திருத்திப் பலவகை உபசாரங்களுடன் அறுசுவையுண்டி அமர்ந்து ஊட்டினர். அவர் முனை முரியாது பதமுற வெந்த சோறும், தீம்பருப்பும், புத்துருக்கு நெய்யும், காயம் கலந்து கடைந்த தீம்புளிக் கீரையும், கார்ப்புத் துவையலும், இன்சுவைக் குழம்பும், கடலை நீரில் பாகமுறச் சமைத்த மிளகு நீரும், வாழை இளம் பிஞ்சு, கத்தரி, முருங்கை முதலியவற்றுற் பலவகைப் பாகமுறச் சமைத்த கறியும் கனிவுடன் படைக்கப் புலவர் உண்டு தேக்கெறிந்தார்.

கவிராயர் சுவரின் அருகே சென்றதையும் ஏதோ எழுதியதையும் அச்சிறுவர்களுள் ஒருவன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அவர் சென்றதும் சுவருக்கு அண்மையிற் சென்று அவண் தீட்டப்பட்டிருக்கும் பாவடியைக் கண்ணுற்றுப் பலர்க்கும் காட்டினான். அவர்கள் அனைவரும் அதனைப் பார்த்து, "அடடா! அவன் புலவன் போலும்; அவனுக்குப் பாட்டு ஓரடிக்குமேல் ஓடவில்லை; நம்மேல் அறம் பாடத் தொடங்கினான். நாம் சொன்னது அவனைச் சுட்டது போலும். ஆயினும் நாம் அப்பாட்டை முடிப்போம் வாருங்கள்" என்று மொழிந்து, அதனோடு ஓரடியை மட்டும் சேர்த்தெழுதிப் பின் வருமாறு விட்டுவைத்திருந்தனர்:

'பாக்குத் தரித்து விளையாடும் பாலகர்க்கு
நாக்குத் தமிழ் உரைக்கும் நன்னுகை.'

புலவர், உண்ட இளைப்புத் தீரப் படுத்துச் சிறு துயில் கொண்டார். சிறிது நேரம் தாழ்ந்ததும் அவர், பிள்ளைகளைக் கண்ட இடம் சென்று, சுவரிலுள்ள பாட்டைப் பார்த்தார்; அப்பாட்டு மற்றொரு அடி வளர்ந்திருந்ததலைக் கண்டு அவ்வடியின் பொருளைச் சிந்தித்தனர். அஃது உண்மையே யென அவருக்குப் புலப்பட்டதும் வெகுளி தணிய வாளா சென்றனர்.

பின்னொருகால் புலவர் பெருமான், கோண்டத்தூர் என்னும் ஊருக்குச் சென்று, ஆங்கு அன்போடு குழைத்து இனிய வமுதூட்டிய அருமைப் பெண்மணியையும், அவள் அளித்த பூசுணைக் காய்க்கறியையும் வியந்து,

கண்டக்கால் கிட்டுங் கயிலாயங் கைக்கொண்டுள்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே—கொண்டத்தூர்த்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசுணைக்காய்
அண்டர்க்காம் ஈசருக்கும் ஆம்.

என்று ஒரு வெள்ளைக் கவிதை விளம்பினர்.

கவிஞர் மற்றொரு முறை ஆழூர் என்னும் அரும் பதியை அடைந்து, அங்கே செல்வத்தாற் சிறந்து திகழ்ந்த வேளாண் குலத்தலைவரைக் கண்டனர். அவர் தமிழ் மொழியைத் தமது குலதெய்வமாக வழிபடும் கொள்கையினர்; செந்தமிழ் வாணர் எவரேனும், அவர்க்கு மெய்யடிமை பூண்டு ஒழுகுபவர். அத்தகைய பெரியார் ஆசுகவிச் சிங்கமாகிய காளமேகப் புலவரை எங்ஙனம் ஏற்றுக் கொள்வார் என்பது கூறலும் வேண்டுமோ? அவர் இவரை எதிர் கொண்டழைத்து முகமன் கூறி, வேண்டும் துறை முடித்து

அனுப்பினர். அப்போது புலவர் அவர் அருமையைச் சிறப்பித்து,

உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோன் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்.

என்று ஒரு செய்யுள் செப்பினர்.

வேறொரு சமயம் புலவர், **கயத்**தாறு என்னும் திருமால் திருப்பதியை அடைந்தனர். அப்போது திருக்கோயிலின்கண் திருவிழா நடைபெற்று வந்தது. அன்று கருடவாகன சேவைக்காகச் சுவாமி அலங்காரம் செய்யப்பட்டு மிகச் சிறப்பாகப் பெரிய திருவடியின்மேல் எழுந்தருளும் வேளையில் சுவாமியைத் தூக்கிச் செல்லும் ஆட்கள் குறைபட்டனர். அவ்வேளை கோயிலதிகாரி சுற்று முற்றும் பார்க்கையில் காளமேகத்தைக் கண்டான். காளமேகமோ பருத்த உடலும், மாசுண்ட ஆடையும் வாய்ந்து காணப்பட்டார். கோயிலதிகாரி இவரைப் புலவரென மதியாது, சுவாமி தூக்கும் ஓர் ஆளாக எண்ணி அவரைத் தண்டைத் தோளிலே தூக்கக் கூறினன். புலவரோ, இது யாதோ திருவருள் செய்கை என்றெண்ணி வாளாது தண்டைத் தூக்கிச் சென்றனர். பின் சுவாமி திருவீதி வலம் வந்து ஆலயத்தை அடைதலும், புலவர் ஏதேனும் பிரசாதம் கிடைக்கும் என்று எதிர் பார்த்தனர். யாதும் கிடைத்திலது. எல்லாரும் பிரசாதத்தை விழிப்பாய் இருந்து முன்னரே பங்கிட்டுக் கொண்டனர். 'சும்மா இருந்த சுவாமிக்குச் சோற்றுப்பட்டை இரண்டு,' என்றவாறு ஒரு வேலையும் செய்யாதவர்கள் தளிகையில் முக்காற் பங்கைக் கவளீகரிக்க, முதுகிலுள்ள

என்பொடியச் சுவாமியைச் சுமந்த பாவலர் பசியால் வருந்த நேர்ந்தது. வேளையோ பதினாறு நாழிகைக்கு மேலா யிற்று. இனிச் செல்லுமிடமும் இல்லை. 'சுவாமியைச் சுமந்ததே யன்றிக் கோயில் நம்பியையும் சுமக்க நேர்ந்ததே!' என்றெண்ணிக் கவிஞர் வயிறெரிந்தார். அவருக்குக் கோபத்தீ கொழுந்துவிட் டெழுந்தது. அப்பொழுது அவர் பெருமாளை முன்னிலைப்படுத்தி,

பாளைமணங் கமழ்கின்ற கயத்தாற்றுப் பெருமாளே, பழிகா ராகேள்:
வேளையென்றால் இவ்வேளை பதினாறு நாழிகைக்கு மேலா யிற்றென்
தோளைமுரித் ததுமன்றி நம்பியா னையுங்கூடச் சுமக்கச் செய்தாய்
நாளைஇனி யார்சுமப்பார் எந்நாளும் உன்கோயில் நாசந் தானே.

என்றொரு வசைக்கவி வகுத்தனர்.

சிறிது காலஞ் சென்றபின் கவிஞர் திருப்பனந்தாளுக் குச் சிவதரிசனஞ் செய்யச் சென்றனர். அக்காலம் மழை மாறிக் கருப்புக் காலமாய் இருந்தது. உண்ண உணவும் பரு கத் தண்ணீரும் இன்றி மக்கள் வாடினர். பிறர் கையையே என்றும் எதிர்நோக்கி நிற்கும் புலவர் நிலை பெரிதும் இரங் கற் பாலதா யிருந்தது. அப்பொழுது அத்திருப்பதியில் வாழும் பட்டர் ஒருவர் இவரை வரவேற்று இன்னுரை வழங் கித் தண்ணீரும் சோறும் உபசரித்திட்டனர். தமக்கு அன்ன மிட்டமையை நயந்து வியந்து பாவாணர்,

விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்பியுணத்
தண்ணீரும் வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே
உண்ணீர்உண் ணீர்என் றுபசாரஞ் சொல்லி உபசரித்துத்
தண்ணீருஞ் சோறுந் தருவான் திருப்பனந் தாட்பட்டனே.

என்று கட்டளைக் கலித்துறை ஒன்று யாத்தனர்.

அவ்வாறு ஆசு கவிராயர் ஓரிடத்தே நிலையாய்த் தங்குதல் இன்றிப் பலவிடங்களுக்குஞ் சென்று ஆங்காங்குத் தம் மனஞ் சென்றவாறு செய்யுள் பாடிச் சிலரை வைதும், சிலரை வாழ்த்தியும் வருவாராயினர். அப்பொழுது புலவர் காதற்கிழத்தியாகிய மோகனாங்கி தனக்கு விலையுயர்ந்த முத்துக்கள் வேண்டுமென்றும், அத்தகையன மதுரைமா நகரிலே எளிதிற் கிடைக்குமென்றும், அதனால் அவர் அந்நகருக்குச் சென்று முத்து வாங்கி வருதல் வேண்டுமென்றும் அவருக்குத் தெரிவித்தாள். அன்றியும் புலவருக்கு மதுரைக்குத் தாம் சென்று அங்குச் செங்கோல் செலுத்துந் திருமலைராயனைக் காணவேண்டு மென்றும், அங்குச் செருக்கித் திரியும் அறுபத்து நான்கு தண்டிகைப் புலவருடன் வாது புரிய வேண்டுமென்றும் பன்னெடு நாட்களாக விருப்பம் உண்டு. அதனால் உடனே செந்தமிழ் வளநாடாகிய பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டு, இடையிலேயுள்ள திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு மதுரையம்பதியை அடைந்தார். அடைந்தவர் ஆவண வீதியில் ஒரு கூலவாணிகன் கடையில் அமர்ந்திருந்தனர். அவ்வேளையில் திருமலைராயன் சமஸ்தான வித்துவான்களுக்குள் தலைவரான அதிமதுரகவிராயர் என்பவர் தண்டிகையின்மீது சென்றுகொண் டிருந்தனர். அவர் பல்லக்கின் முன்பு கட்டியங் கூறுவோர் சிலர், 'அதிமதுர கவிராயர் வருகிறார்; பராக்கு-பராக்கு,' என்று எச்சரிக்கை செய்தவண்ணஞ் சென்றனர். அவ்வீதியிலுள்ளார் அனைவரும் அவரைக் கண்டவுடன் எழுந்து, கைகுவித்து அவருக்கு வணக்கஞ் செய்தனர். அது கண்ட காளமேகப் புலவர் அக்கவிராயர் செருக்கை அடக்க எண்ணிக் கட்டியங் கூறுவோனைப் பார்த்து, உரத்த குரலால்,

*அதிமதுரம் என்றே அகிலம் அறியத்*
*துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன*
*காட்டுச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக்*
*கூட்டுச் சரக்கதனைக் கூறு.*

என்றொரு கவி கூறி, அதிலே, அதிமதுரம் என்பது குன்றி வேருக்குப் பெயராகும் என்று எள்ளி நகையாடினர். அன்றியும் யாவரும் எழுந்து வணக்கஞ் செய்த பொழுதும் இவர் தம் நிலையை விட்டு அசைந்திலர். இதனைக்கண்ட அதிமதுரகவி வெகுண்டு, 'அவ்வாறு செய்தவர் யார்?' என்பதை அறியும் பொருட்டுத் தம் மாணவன் ஒருவனை விளித்து, 'நீ ஆவண வீதி சென்று வெளியூரான் ஒருவன் அமர்ந்துள்ள கூலக் கடையிலே இருக்கும் வணிகரை, 'மேகம், பசு, இரத்தினம்' வேண்டுமென்று கேள். அங்ஙனம் கேட்கும்போது அப்புதியவன் செயலை யெல்லாம் உற்றுநோக்கி அவைகளை என்னிடம் வந்து இயம்பு,' என்றனர். அவ்வாறே அம்மாணவன் அந்தக் கடையினிலுள்ள வணிகரைக் கேட்டான். வணிகர் விழித்தனர். அதுகண்ட புலவர் இகழ்ச்சி நகை புரிந்து, வணிகரைப் பார்த்து, 'ஐயா வணிகரே, இது நம்மைச் சோதிப்பதாகும்; கேட்கும் பொருள் வேறொன்று மன்று; காராமணியே ஆகும். ஆகையால் அதனைத் தந்தனுப்புக,' என்றனர். வணிகர், புலவரை அஃதெப்படி யெனக் கேட்க, அவர், 'மேகம் என்பதற்குக் கார் என்று ஒரு பெயர் உண்டு; பசு என்பதன் மற்றொரு பெயர் ஆ; இவ்விரண்டையும் கூட்டிப்பார்க்கக் காரா என்றாகும்; இதனோடு இரத்தினத்தின் பரியாயப் பெயராகிய மணியைச் சேர்க்கக் காராமணி யென்றாகும்,' என்றனர். வணிகர், கேட்ட பொருள் இன்னதுதான் எனத் தெளிந்து அவ்வாறே அந்த மாணவனிடம் காராமணி

கொடுத்தனுப்பினர். மாணவன் இதனைக் கொண்டுபோய், அதிமதுரகவியிடம் ஈந்து நிகழ்ந்தவற்றைக் கூறினன். அதிமதுரகவி மீண்டும் மற்றொருவனைக் காளமேகப் புலவரிடம் விடுத்து அவரை இன்னாரென அறிந்து வருமாறு விடுத்தனர். அவன் புலவரைக் கண்டு அவர் பெயர் முதலியவற்றைக் கேட்டான். அப்போது காளமேகப் புலவர் பின் வரும் பாட்டை எழுதி அவன்பால் தந்தனர் :

‘ தூதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி எழுநா ழிகைதனிற்
தொகைபட விரித்து ரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாள்முழு தமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக்கொ டிக்கட்டினேன் ;
சீதஞ்செ யுந்திங்கள் மரபினால் நீடுபுகழ்
செய்ய திரு மலைராயன்முன்
சீறுமா றுகவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப்பு லவரைக்
காதங் கறுத்துச் செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னொடுகொடிய கடிவாளம் இட்டேறு
கவிகாள மேகம் நானே.’

அவன் சென்று அதிமதுர கவியினிடம் அதனைக் காட்டினன். அக்கவியைக் கண்ட அதிமதுரகவி வெகுளி பொங்கினவராய், ‘ நல்லது, இவன் ஆணவத்துக்கு ஓர் அளவே யில்லை. எங்ஙனமேனும் இவன் அரசனைக் காண வருவான் ; அப்பொழுது அவன் கொட்டந்தை அடக்க வேண்டும்,’ என்று எண்ணி அற்றம் நோக்கி யிருந்தார்.

காளமேகப் புலவர் திருமலைராயனைக் காண்பதற்கு அவன் சமஸ்தானத்துக்குச் சென்றனர்.

அங்கே இருந்த புலவர்கள் அனைவரும் இவரைப் பொருட்படுத்தாமல் புறக்கணித் திருந்தனர். அரசனும் சும்மா விருந்தான். அப்போது காளமேகப் புலவர் தாம் கொணர்ந்து வந்த எலுமிச்சம் பழத்தை அரசன் திருமுன்னர் நீட்டி அவனை வாழ்த்தினர். அப்பொழுது அரையன் அப்பழத்தை வாங்கத் தன் பொற்கரம் நீட்டினான். அது கண்ட புலவர்கள் சிறிது ஒதுங்கினர். ஒதுங்கவே, காளமேகம் வேந்தனைக் குறுகிக் கனியை அவனிடம் கொடுத்தனர். மன்னனும் பெற்றுக்கொண்டான். பின்னரும் காளமேகம் அமர இடம் பெறுமையினால் மனம் நொந்து, கலைமகளார் கமலச் சேவடியைக் கருத்திருத்தி முப்பது வெண்பாக்கள் பாடிக் கனிந்துருகுவா ராயினர். உடனே அரசன் சிங்காதனம் வளரப் புலவர் அவ்விருக்கையின் மீது நன்கு அமர்ந்து,

> வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
> வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
> அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
> சரியா சனம்வைத்த தாய்.

என்று பாடித் தமக்கு இன்னருள் புரிந்த இறைவி இன்னளென இசைத்து, ஆங்கு அச்சமும் வியப்பும் குடிகொண்டிருந்த புலவரை நோக்கி, 'ஐயன்மீர், நீவிர் யாவர்?' என்று வினவினர். அவர்கள், அதற்கு உத்தரமாக, 'நாங்கள் கவிராயர்கள்,' என்றார்கள். அது கேட்ட காளமேகம் வேறோர் குறிப்பை உட்கொண்டு நகைத்து, 'ஓ! ஓ! அப்படியா? நீங்கள் கவிராயர்களா?

வாலெங்கே நீண்ட வயிறெங்கே முன்னிரண்டு
காலெங்கே உட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்.'

என்று பாடி இகழ்ந்தனர். அதுகேட்ட அதிமதுர கவிராயர் காளமேகத்தைப் பார்த்து, 'நீர் காளமேகம் ஆனால் பொழிய வேண்டுமே,' என்று இகழ்ச்சிக் குறிப்பாய் வினவினர். உடனே புலவர், 'ஆம்; பொழியத்தான் இங்கு வந்திருக்கின்றோம்,' என்றுரைத்து,

கழியுந் தியகடல் உப்பென்று நன்னூற் கடலின்மொண்டு
வழியும் பொதிய வரையினிற் கால்வைத்து வன்கவிதை
மொழியும் புலவர் மனத்தே இடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே.

என்றொரு அருங்கவியையுஞ் சொற்றனர். இப்பாட்டைச் செவியுற்ற அதிமதுரகவி, 'இனிச் சும்மா இருந்தால் இவன் ஏறுவான்; ஆதலால் நாம் நமது பாவன்மையைக் காட்டி இவனது ஆணவத்தை அடக்க வேண்டும்,' என வெண்ணிக் காளமேகத்தைப் பார்த்து,

'மூச்சு விடுமுன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.'

என்று விரைவாக ஒரு வெண்பா கூறினர். அவர் அங்ஙனம் கூறி வாய் மூடுமுன் புலவர், 'இவ்வளவுதானா? நான் மலைத்தேன்,' என்றுரைத்து,

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதா—சும்மா

இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யானால்
பெருங்காள மேகம் பிளாய்.

என்று தமது பாவன்மையை மீதுயர்த்தி அதுமதுரகவி, கவியுலகத்தில் சின்னஞ் சிறுபிள்ளையே என்பது தோன்ற ஒரு பாட்டைக் கூறினர். பிறகு ஆங்கிருந்த புலவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமுத்தி கொடுத்துக் காளமேகப் புலவரைத் தேர்ச்சி செய்யலாயினர். ஒருவர் திருமலேராயன் வாளைச் சிறப்பித்து ஒருசெய்யுள் கூறுக என்னலும் புலவர்,

செற்றலரை வென்ற திருமலேரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாள்அவாள் ஆம்.

என்று பாடினர். மற்றொருவர் அரசன் கீர்த்தியைப் புகழ்க, என்று கேட்க, கவிஞர்,

வீமனென வலிமிகுத்த திருமலேரா யன்கீர்த்தி வெள்ளம் பொங்கத்
தாமரையின் அயன்ஓடிச் சத்தியலோ கம்புகுந்தான், சங்க பாணி
பூமிதொட்டு வானமட்டும் வளர்ந்துநின்றான், சிவன்கைலேப் பொருப்பில் எறிச்
சோமனேயுந் தலேக்கணிந்து வடவரைத்தண் டால்ஆழுஞ் சோதித் [தானே.

என்று பாடினர். பின்பொருவர், அவரைக் 'கங்கை குடத்திலே அடங்கப் பாடுக,' என்று வினவப் புலவர்,

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணே
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும்.

என்று பாடினர்.

இவ்வாறு புலவர், தண்டிகைப்புலவர் அறுபத்து நால்

வரும் கொடுத்த சமுத்திகள் பலவற்றிகும் மிக விரைவிலே உத்தரஞ் சொல்லித் தமது ஆசுகவி வன்மையை நிலைநாட்டினர். அப்போது அவர் பாடிய பாடல்களுள் பல, சிலேடை அணி பொருந்தியன. அவற்றுள் இரண்டொன்று இங்கே காட்டப்படும் :

பாம்பும் எலுமிச்சம் பழமும்

பெரியவிட மேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணும் உப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

விநாயகர், முருகர், சிவன் ஆகிய மூவருக்கும்

சென்னிமுக மாறுளதாற் சேர்க்கரமுன் னாலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானுங் கணபதியுஞ் செவ்வேளும்
எண்ணரனும் நேரான வரே.

பின்னர்ப் புலவரும் திருமலைராயனும் காளமேகப் புலவரைக் கொண்டாடினர். அரசனும் அவருக்குப் பல வரிசைகளையும், அளவிறந்த முத்துக்களையும் வழங்கினான். அப்போது பாவலர் மனமகிழ் பூத்துத் திருமலைராயனைப் பின்வருஞ் செய்யுளால் புகழ்ந்து கொண்டாடினர் :

இந்திரன் கலையாய் என்மருங் கிருந்தான் அக்கினி
உதரம்விட் டகலான்
யமனெனைக் கருதான் அரனெனக் கருதி நிருதிவந்
தென்னையென் செய்வான் ?
அந்தமாம் வருணன் இருகண்விட் டகலான் அகத்தினில்
மக்களும் யானும்
அநிலமுந் தாங்கும் அமுதினைக் கொள்வோம் யாரெதிர்
எமக்குளார் உலகிற்

சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர
ராஜனை வணங்கித்
தலைசெயும் எம்மை நிலைசெய்சற் கீர்த்திச் சாளுவகோப்
பையன் உதவும்
மந்தரப் புயத்தான் திருமலை ராயன் மகிழ்வொரு
விலையிலா வன்றேன்
வாக்கினாற் குபேரன் ஆக்கினான் அவனே மாசில்
ஈசான பூபதியே.

பின்னர்க் கவிவாணர் மதுரையை விட்டகன்று தமது இருப்பிடமாகிய திருவானைக்காவை அடைந்து, மோகனாங்கிக்குத் தாம் கொண்டுவந்த முத்துக்களை அளித்து இனிதிருந்தனர். இவ்வாறு வாழ்ந்துவருங்கால் ஒருநாள் திருவானைக்காவின் வீதியிலே புலவர் சென்றுகொண்டிருக்கையில் குப்பையைப் பெருக்கிக் கொண்டிருக்கும் செருக்குடைய மாது ஒருத்தி அவரைப் பார்த்து, 'காளமேகம் என்னும் கட்டை விளக்குமாறு நீதானா?' என்றாள், அதற்கவர், 'பெருக்கப் பெருக்கத் தெரியும்,' என்றனர். அவ்வாறு அவர் சொன்னதனால் அவள் எவ்வளவு நேரம் பெருக்கினாலும் குப்பை அகலாது மீண்டு மீண்டு வருதலைக் கண்டு கையோய்ந்தாள். பிறகு அவள் அஞ்சி நடுநடுங்கிப் புலவர் அகஞ்சென்று அவரைத் தான் அறியாமையால் செய்த பிழையை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொண்டனள். அவரும் இரங்கி அவ்வாறே மன்னிக்கக் குப்பையும் நீங்கிற்று.

பின் சிறிது காலஞ் சென்றதும், காளமேகப் புலவர் காஞ்சிமா நகரஞ்செல்ல வழிக்கொண்டனர். கொண்டவர் இடையிலே தில்லையிலே தங்கித் திருச்சிற்றம்பலத்தை வணங்கிச் சிலநாள் அங்கே வதிந்தனர். அங்கே அம்பலவாணனைக் குறித்து அவர் பல செய்யுட்களைப் பாடி இன்புற்றனர்:

தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறுளோ
பூண்டசெருப் பால்ஒருவன் போடானோ—மீண்டொருவன்
வையானோ வில்முறிய மாட்டானோ தென்புலியூர்
ஐயாநீ ஏழை யானால்.

பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
வன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவுந் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று.

இங்ஙனம் அவர் வழியிலே யுள்ள திருப்பதிகளை யெல்லாம் தரிசித்துக்கொண்டும்,தொண்டைநாட்டின் வளத்தை உற்று நோக்கியும் அவ்வழகுகளிலே ஈடுபட்டுச் சென்றார். பின் அவர் கச்சி நகரை அடைந்தபோது, வரதராஜப்பெருமாள் கருடவாகனத்தின்மேல் திருவீதியில் வருதலைக் கண்டு அவர்மேல் புகழாப் புகழ்ச்சியாக,

பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்—பெருமாள்
இருந்த இடத்தில் இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துச் செல்கிறதே பார்.

என்று பாடினர். பின்பு ஏகாம்பர நாதர் பிக்ஷாடன மூர்த்தியாய்த் திருவீதியில் எழுந்தருள்வதைப் பார்த்த கவிவாணர்,

நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போ லேமுழங்கும்
மேளமேன் ராசாங்க மேன்.

என்று பாடித் துதித்தனர். சின்னாட் சென்ற பின்னர்ப் புலவர் பெருமான் திருவேகம்பத்தை நீங்கித் தமது பதியை அடைந்து, பல்லாண்டு இன்புற்று வாழ்ந்திருந்து சிவபெரு

மான் திருவடிநீழலில் இரண்டறக் கலந்து நித்தியானந்தப் பெருவாழ்விலே திளைத்தார்.

## கம்பரைக் குறித்தது

நாரா யணனை நாராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக
வாவென்றால் வாளென்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாவென்றால் நாளென்பேன் நான்.

## திம்மி யென்னும் கணிகையை இகழ்ந்தது

ஏமிரா வோரி என்பாள் எந்துண்டி வஸ்தி யென்பாள்
தாமிராச் சொன்ன தெல்லாந் தலைகடை தெரிந்த தில்லை
போமிராச் சூழுஞ் சோலை பொருகொண்டைத் திம்மிகையில்
நாமிராப் பட்டபாடு நமன் கையிற் பாடு தானே.

## திருவொற்றியூர்த் தியாகர்மீது பாடியது

ஆடுந் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு
வீடுஞ் சமுசாரம் மேலிட்டுக்—கூடிச்
செருக்கி விளையாடச் சிறுவர் இரண்டாச்சே
இருக்குமூர் ஒற்றியாச் சே.

## முருகன் வள்ளியை மணந்ததைக் குறித்தது

மருவிருக்கும் வேளூரின் வயித்திமகன்
குறமகளை மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான் உமையவளும்
தவம்புரிந்தாள் உயர்மான் மேனி
கருகிமுகம் மண்தின்றான் கமலன்முகம்
நாலானான் கடவு ளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல்
உறங்காமல் இருக்கின் றாரே.

### எண் அமைத்துப் பாடியது

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது.

### நஞ்சுண்டதைக் குறித்தது

கல்லா லடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் னாள்.

### தலம் அமைத்துப் பாடியது

வாணியன் பாடிட வண்ணான் சுமக்க வடுகன் செட்டி
சேணியன் போற்றக் கடற்பள்ளி முன்னெழத் தீங்கரும்பைக்
கோணியன் வாழ்த்தக் கருமான் துகிறனைக் கொண்டணிந்த
வேணிய னானவன் தட்டான் புறப்படல் வேடிக்கையே.

### வைத்தியநாதரைப் பற்றியது

வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறாம் புத்திரருக்—கோதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரார்
எந்தவினை தீர்ப்பா ரிவர்.

### கடைமொழி மாற்று

மாடுதின்பான் பார்ப்பான் மறையோது வான்குயவன்
கூடிமிக மண்பிசைவான் கொல்லனே—தேடி
இரும்படிப்பான் செக்கான்எண் ணெய்விற்பான் வண்ணான்
பரும்புடவை தப்பும் பறை.

# 5. படிக்காசுத் தம்பிரான்

---

'வையகம் எல்லாம் கழனியா வையகத்தின்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு'

எனச் செந்நாப் புலவரால் பாராட்டப்பட்ட தொண்டை மண்டலத்திலே அருந்தமிழ் வாணர் பலர்க்குப் பிறந்தகமாகச் சிறந்திலங்கும் பொற்களந்தைப்பதி என்னுந் தென்களத்தூர். அவ்வூரின் நிலவளத்தை வியந்து, 'பொன்னிட்டாற் பொன்விளையும்,' என யாவரும் புகல்வர். அதனால் பொன் விளைந்த களத்தூர் என அதற்குப் பெயர் வழங்கலாயிற்று. அன்றியும், அப்பதியின்கண் ஒரு காலத்திலே நெற்கதிர் பொற்கதிராய்த் திகழ்ந்ததென்றும், அக்கதிர் இன்றும் அவ்வூர்க் கோயிலகத்தே தூங்குகின்றதென்றும் கண்ணிற் கண்டார் போலக் கூறித் தங்கூற்றை மெய்ப்பிக்க முயல்வாரும் உளர். இத்தகைய செழுமை மிக்க ஊரிலே செங்குந்தர் குடி சிறந்து விளங்கிற்று. அக்குடியினருள் இற்றைக்குச் சிறிதேறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்க் கல்வியும் ஒழுக்கமும் சிறந்து சிவபக்தி மிகுந்த ஒருவருக்குத் தாம் இயற்றிய தவமே ஓர் உருக்கொண்டாற்போலப் **படிக்காசுப் புலவர்** பிறந்தனர்; பிறந்து உரிய பருவத்தே கல்வி கற்கத் தொடங்கித் திவாகரம், அந்தாதி, கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களைக் கற்று மாணவர் எல்லாரினும் மேம்பட்டு விளங்கினர். அவர் கற்குந் திறனைக் கண்ட கணக்காயர் நனிமகிழ்ந்து, பிற்காலத்தே அவர்

பெரும்புலவராக வீறுவரெனப் பன்முறையுங் கூறிப் பாராட்டுவார்.

அவர் அப்பள்ளியிற் கற்கத்தக்க நூல்களைக் கற்று வல்லவரானபின் மேன்மேலும் புலமையிற் சிறக்க விழைந்து தொல்லாணை நல்லாசிரியரைத் தேடிப் பலரையும் உசாவுவா ராயினர். அக்காலை, பிறக்க முத்திதருந் திருப்பதியாகிய **திருவாரூரிலே, வைத்தியநாத நாவலர்** என்னும் சான்றோரது அகன்ற புலமையையும் தெளிவையும், அவர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர் என்பதையும், அக்கல்விப் பொலிவு தோன்ற **இலக்கண விளக்கம்** எனப் பெயரிய சீரிய கூரிய நூலை இயற்றியுள் ளார் என்பதையுங் கேள்வியுற்று,

> ' எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
> எழுத்தறிவார்க் காணின் இலையாம் '

என்னும் உண்மையை எண்ணி அவர்பா லேகிக் கற்கத் துணிந்தனர்.

துணிந்த புலவர் நன்னாள் கொண்டு நன்னிமித்தம் நோக்கித் திருவாரூர் என்னும் கமலாலயத்தை அடைந்து நாவலர் பெருமானைக் கண்டு தமது அவாப் பெருக்கை வெளியிட அவரும் இவரை மாணவராக ஏற்றுக் கொண்டனர். படிகாசுப் புலவரும் நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல்களையும், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலான மெய்கண்ட சாத்திரங்களையும் ஐயந் திரிபறக் கற்றுத் தெளிந்தார். அவருக்குச் சந்தக்கவி பாடவேண்டும் என்னும் வேட்கை மீதூர்ந்தமையாற் சந்தக் கவிகளிலே பெரிதும் பயின்று அக்கவிகளை அப்பொழுது தொடங்கியே பாடிப் பழகுவாராயினர். சீட்டுக்

கவி செய்வதிலும் நம்புலவருக்கு விருப்பம் அதிகம்; இவை யெல்லாவற்றினும் முனைத்துத் தலைசிறந்திருந்தது வசை பாடும் கருத்து. காளமேகப் புலவர் வசைபாடல்களைப் பல் காற் பயின்று கற்றதனாலும், அவர் தம் செய்யுட்களை வியந்ததனாலும் இவ்வெண்ணம் இவருக்கு ஊறுவதாயிற்று. இதனை இவர் ஆங்காங்குத் தம் செய்யுட்களில் குறிப்பிட்டும் இருக்கின்றனர். அவற்றுள்,

'காளமேகம் போலவே வசைபாட யாமும்இக்
காசினியில் அவதரித்தோம்.'

என்று கூறியிருத்தலும் ஒன்று. இவ்வாறே பல்காற் பழகிப் பழகிச் சந்தப்பா செய்வதினும், வசைக்கவி இயற்றுதலினும் கைவந்தவராய்ப் பொலிந்தனர்.

'காரிகை கற்றுக் கவிபா டுதலிற்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே.'

என்ற முதுமொழிப்படி இயற்கையிலேயே பாடுந் திரு அமையப் பெறுதார் பாவலர் ஆதல் என்றும் இல்லை. அவர் தம் செய்யுட்களும் நீடு வாழா; காலக்கோட்பட்டுக் கடிதின் ஒழியும். அங்ஙனமின்றிப் படிக்காசுப் புலவர், பாடுந் திறன் கருவிலே வாய்ப்பப் பெற்ற திருவாளர் ஆதலின், அவருக்கு இனிமை மிக்க பாக்கள் இயற்றுதல் எளிதான செயலாயிற்று.

பின்னர்ப் படிக்காசு, ஆசிரியர்பால் விடைபெற்றுத் தமதூரை அடைந்து, தம்மரபிற் கொத்த மங்கை ஒருத்தியை மணந்து இல்லறத்தைக் கைக்கொண்டார். கணவனும் மனைவியும் மனமொத்து வாழும் இல்லறம் நல்லறமாகும் என்பதில் ஐயமுண்டோ? இவ்வாறு உடலும் உயி

ரும் போலவும், மணமும் மலரும் போலவும் காதற்கிழமை யிற் சிறந்து வாழுங்கால் பாவாணர் மனைவி, 'கற்றுத் துறை போய காதலர்க்குத் தலைமகனைப் பெற்றுக் கொடுத்தாள்'. புலவர் அம்மகவைப் பெரும்பேருக எண்ணிச் செல்வமாக வளர்த்து வருவாராயினர்.

அருங்கலை கற்ற பெரும் புலவாணருக்கு வறுமை என் னும் கொடுந்தீப் பற்றுதல் அவர் தம் பெருமையை வெளிப் படுத்துதற்குப் போலும்! நல்குரவு என்னும் நெருப்பிலே யிட்டுப் பொன்போலும் நன்மக்களை ஆராய்ந்து தெரிதல் அருட்பெருஞ் செல்வன் திருவுளப் பான்மையோ? அன்றி யும் புலவர் பெருமக்கள் சதாசருவதா தமிழ்ச்சொல் லரு மையையும், கருத்தருமையையும் ஆய்ந்தாய்ந்து பொருள் வருவாயைச் சிறிதும் நினையாது நிற்றலினால் இன்மையென் னும் இன்னலிற் சிக்கி அல்ல லுழப்பர். அந்தோ! 'முகம் பார்த்தருள் நோக்கி முன்னிரந்து செல்வர் அகம்பார்த்து நிற்றல்' எத்துணைக் காலம் ஆகும்? தாம் தாம் யாதேனும் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர் பலர்போல ஒவ்வோர் தொழிலை மேற்கொண்டு தமது வாழ்க்கையைச் செலுத்தி ஒழிந்த வேளைகளில் உலக மன்பதைகளின் பெரும் பயன் ஒன்றே கருதித் தமது புலமையையும் மதியையும் பயன் படுத்தல் நேரிதன்றோ? இவ்வாறு தமக்கென ஒருதொழிலை மேற்கொள்ளாமையான் புலவர் அவ்வப்போது வறுமை யான் நொந்து மெலிந்தமையே யன்றித் தம் பெருமையை யும், ஒரோவொருகால் இழந்தும் பரிசில் வாழ்க்கையைச் செலுத்துவா ராயினர்.

இங்ஙனமே எந்நாட்டினும் கல்வியாளர் இலம்பாட் டால் இன்னற்பட் டிருக்கின்றனர். ஆங்கிலப் புலவருள்ளும்

கோல்டு ஸ்மித் (Gold Smith) என்பவர் கடன்காரரால் பற்றப்பட்டதும், ஷெரிடன் (Sheridan) என்பவர் கடனில் முழுகி அதனினின்றும்மீட்சியடைய மாட்டாது கடன்காரர்களுக்குப் பயந்து, வீட்டிற்கு நள்ளிரவில் வந்து வெள்ளி முளைக்குமுன் பள்ளி யெழுந்து வெளிச்சென்று கரந்து வாழ்ந்ததும், ஸர் வால்டர் ஸ்காட்டு (Sir Walter Scott) என்பவர் கடன் தீர்க்கும் பொருட்டுத் தமது வாழ்நாள் முழுதும் எழுதுகோலுடன் இருந்ததும் அனைவரும் அறிவர் அன்றோ? நவரசப் புஞ்சமாகிய இராமாயணம் போன்ற பாரகாவியத்தைப் பாடிய கம்பரும் வறுமையாற் பட்ட அல்லலை அறியாதார் யார்? இவருங் கடன்பட்டுக் கடன்காரர்களால் நெருக்கப்பட் டிருந்தமையா னன்றோ அக்கொடுந் துன்பத்தைத் தாம் பாடிய இராமாயணத்தில் இடம் பார்த்துப் பின்வரும் பாட்டால் விளக்குவா ராயினர்!

'விடங்கொண்ட மீனைப் போலும், வெந்தழல் மெழுகு போலு
படங்கொண்ட பாந்தள் வாயிற் பற்றிய தேரை போலும், [ம்,
திடங்கொண்ட ராம பாணஞ் செருக்களத் துற்ற போழ்து
கடங்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை
[வேந்தன்.'

இது மட்டுமோ? வறுமைப்பட்டார் கல்வியும் அன்றோ கவினழிந்து நிற்கின்றது! இதனைத் தெய்வப் புலவரும்,

'எனைத்துணைய வாயினும் இலம்பட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்பாடில வாம்.'

என்றருளிச் செய்தனர் அன்றோ?

இத்தகைய வாழ்வையே நடாத்திவந்த படிக்காசுப் புலவர் மிடியென்னும் பிணியாற் பிணிப்புண்டு பெரிதும் வருந்தினர் என்பது சொல்லவும் வேண்டுமோ? அவர் இல்

லறமாகிய சகடம் அடிக்கடி முட்டுப் பட்டுத் தட்டுத் தட்டு நடக்கும். மைந்தனைக் கருவுயிர்த்த மனைக்கிழத்தி கொழு மையான உணவு இன்மையால் உடல் மெலிந்தாள்; அவ ளுக்குப் பால் சுரப்பும் அற்றது; அருமைக் குழவியும் அன்னை மார்பிலே சுவைத்தொறும் சுவைத்தொறும் பால் காணுமையான் அவள் முகநோக்கி அழுவதாயிற்று. அந் நங்கை யாது செய்வாள் பாவம்! தன் கொழுநன் முகம் நோக்கி வாடுவாள். புலவரும் இதனை அறியாதவரல்லர்; அறிந்திருந்தும் பாற்பசு கொள்ளும் வலியிலராய், எவரை அடுத்திரப்பது என்று எண்ணி,

'இரப்பினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்'

என்றவாறு உருகிச் சோர்வார். புதல்வன் துயர் பொருத மனைவி வாய்விட்டுத் தம் கணவரை வற்புறுத்தியதனல் அவர் ஒருவாறு தேறி வல்லமாநகர் சேர்ந்து, ஆங்குச் செல்வத்தாற் சிறந்து வாழும் காளத்திப்பூபதி என்பவரைக் கண்டு, கல்லு முருகுமாறு தமது துன்பத்தை உள்ளவாறே சித்திரத்தில் எழுதிக் காட்டியதுபோல,

பெற்ருள் ஒருபிள்ளை என்மனை யாட்டிஅப் பிள்ளைக்குப்பால்
பற்ருது கஞ்சி குடிக்குந் தரமல்ல பால்இரக்கச்
சிற்ருளும் இல்லைஇவ் வெல்லா வருத்தமுந் தீரஒரு
கற்ரு தரவல்லையோவல்லல் மாநகர்க் காளத்தியே.

என்னும் பாட்டைப் பாட அப்பெரியார் உள்ள முவந்து பாற்பசுக்களையும், அவற்றைக்காப்பதற்கு வேண்டிய பொரு ளையும் அளிக்கப்பெற்று, 'இரத்தலும் ஈதலே போலும்,' என்னும் பொய்யில் புலவர் பொருளுரையைச் சிந்தித்து அப்பொருளாளர் அன்பு பழுத்த உள்ளத்தைக் கண்டு கழி மகிழ்வெய்தி,

வழிமேல் விழிவைத்து வாடாமல் என்மனை யாளைமற்றோர்
பழியாமற் பிள்ளையும் பால்என் றழாமற் பசிபோனுஞ்சொல்
மொழியாமலே விட்ட பாவை முசித்துச் சதையதனைக்
கழியாமல் ஆஅளித் தாய்வல்ல மாநகர்க் காளத்தியே.

என்னும் பாவால் தமது துயரத்தை யெல்லாம் எடுத்திசைத்து, அவை அனைத்தும் ஒழியுமாறு அவர் கொடுத்த கொடையைச் சிறப்பித்துப் பாடித் தம்மூர் மீண்டு, துன்பின்றிச் சின்னாள் வாழ்ந்து வந்தனர்.

பின்னர்ப் புலவர் **மாவண்டூர்** என்னும் ஊரிலே திருவாளராகத் திகழ்ந்திருந்த கத்தூரி முதலியார் அருமைப் புதல்வராகிய **கறுப்ப முதலியார்** என்பவர் வேண்டுகோளுக்கிணங்கி, '**தொண்டைமண்டல சதகம்**' எனப் பெயரிய அரிய நூலைப் பாடி அரங்கேற்றுவித்தனர். அச்சீமான் புலவருக்குப் பரிசு பல மகிழ்ந்து வழங்கியதே யன்றி, அவர் ஊர்ந்து செல்லுஞ் சிவிகையையுஞ் சுமந்து அவரைப் பெருமைப் படுத்தினன். அப்போது புலவர் பெருமான் உவகைகூர்ந்து,

ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நன்னாட்டில் உசித வேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி மன்னன்அருள் சேயைப் பார்மேல்
ஆர்கறுப்பன்என்றுசொல்லிஅழைத்தாலும் நாம்அவனைஅன்பினாலே
பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன் கீர்த்தியினால் வெளுப்பனெனப்
[பேசு வோமே.

என்றும்,

'செல்வத்தம் பியினுடனே கத்தூரி மகன்கறுப்பன் தெரு வீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தான் அதுநமக்கோர் ஆயிரம்பொன் பரிசு தா
[னே.'

என்றும் முதலியாரின் இனிய பண்பையும், அவர் செல்வத் தம்பிமார், தமையன் கருத்துவழி ஒழுகும் மேன்மையையும் அமைத்துப் பாடினர். தொண்டைமண்டல சதகம், அந்

நாட்டிலே தோன்றிய புலவர், வள்ளல்கள், அரசர் முதலிய அனைவருடைய பெரும்புகழ்களையும் செழும்பிரசம் ஒழுகிய செஞ்சொற்களால் இனிது தெளித்துக் காட்டுதலைக் கண்டு பலரும் பாவலரை வியந்து நனி கொண்டாடினர்.

### தொண்டைமண்டல சதகம்

சீருறும் பாடல்பன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையில் ஏற்றிய வித்தகனூர்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீசி டுந்தொண்டை மண்டலமே.

நன்றாய் விளைந்ததை வேதியர்க் கீந்தந்த நன்மையினாற்
பொன்றான் விளைந்திட நெற்போலவே அதைப் போர் அடித்துக்
குன்றுக்கு வித்ததை நெற்பரி மாற்றங் கொடுத்தளித்தான்
மன்றூர் களந்தைக் குடிதாங்கியுந் தொண்டை மண்டலமே.

இங்ஙனம் சிறிது காலஞ் சென்றபின் கவிஞர்,

கரத்தால் தொழுதிடினுங் கண்டிறைஞ்சி னாலுஞ்
சிரத்தால் வணக்கஞ் செயினும்—உரைத்திடினுந்
தில்லைக்கப் பால்நின்று சேவித்தா லுஞ்சனனம்
எல்லைக்கப் பால்நிற்கு மே.'

என்று புகழ்பெற்ற தில்லையம்பதியை அடைந்து ஆங்கு ஞானப் பெருவெளியிலே ஐந்தொழில் நடனம் புரியும் ஆனந்த வள்ளலையுஞ், சிவகாம வல்லியையுங் கண்குளிரக் கண்டும் அமையாத காதலை யுடையாராய் வாய்மணக்கப் பாடுவாராயினர் :

பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோ? நடு ராத்திரியிற்
சல்லாப் புடவை குளிர்தாங்கு மோ? நடுச் சந்தைதனிற்
செல்லாப் பணஞ்செல்லு மோ? தில்லை வாழும் சிதம்பரனே.

என மூர்க்கர் செய்தி உள்ளத்தே முனைத்திருந்தமையான் அவரைக் குறித்தே பாடுவாராகிப் பின் தேவியின் கருணைலகரியில் ஈடுபட்டு அதனை எடுத்துப் புனைந்து,

வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாய்அன்னை யேஎனக்கேதுங் கொடுத்திலையே.

என்னுங் கவி கூறினர். கூறலும் பரவுவார் பற்றாய்நிற்கும் பரம்பொருள் அருளால் பஞ்சாக்கரப் படியின்மேல் ஐந்து பொற்காசு இலங்குதலைக் கண்டு, அவற்றைக் கைக்கொண்டு இன்புற்றுச் சிறிது காலம் ஆண்டு வதிவாராயினர். அன்று முதல் அவருக்குப் **படிக்காசுப் புலவர்** என்று பெயர் வழங்கலாயது.

அக்காலை, இராமநாதபுரம் தமிழ் நங்கை நடம் புரியும் தாமரை மண்டபமாகத் துலங்கிற்று. இரகுநாதசேதுபதியோ தமிழ்ச்சுவை தெரியுந் தனிவேந்தராக விளங்கினர். ஆங்குப் புலவர் ஒருங்குகூடி நாடோறும் நாட்கவி பாடிவருவர். அவர்க்குக் குடும்பம் என்னும் நெடுந்தேரை இழுக்குந் தொல்லையே இல்லை. அவருக்கு வேண்டும் பொருள்களையெல்லாம் சேதுபதி முட்டின்று அளித்து, அவர் தமக்கு யாதொரு குறையும் வாராவண்ணம் பாதுகாத்து வந்தமையான் தமிழும் ஓங்கி வளர்வதாயிற்று. இத்தகைய சேதுமன்னரைப் போலப் பலரும் தமிழை வளர்க்க முன் வருவாராயின், நந் தமிழ்நங்கை தன் இயற்கை நலத்தாலும், செயற்கை யணியாலும் தமிழ் நாட்டையே யன்றித் தண் கடல் வரைப்பையே தன்னடிப் படுத்துவள் என்பதற்கு ஐயமுண்டோ? மேன்மையினும், இயற்கை நெறிவழா ஓசை யின்பத்

தினும், இயல்வரம்பினும், தனித்து நிற்கும் ஆற்றலினும், கன்னித் தன்மையினும் தமிழைப் பொருவும் மொழியும் உளதோ ?

சேது மன்னர் மரபாகிய பாற்கடலில் திங்களைப்போலத் தோன்றிய **பாஸ்கர** மன்னர் தமிழை வளர்த்த தன்மையினை யாவரே அறியார் ? அவர் தாமே தமிழ்ப் புலமை நிரம்பிய வராய் இருந்தும், நவம்பாடும் நாவலர் பலரையும் தமது சமஸ்தானப் புலவர்களாக அமைத்து ஆதரித்தும், தம்மை அடைந்த புலவாணருக்குப் பொன்னுந்துகிலும் வழங்கியும் வள்ளலாய்த் திகழ்ந்தனர். அம்மட்டோ ? அப்பெருந்தகை யாளர் தமது செல்வத்தை ஒரு பொருட்படுத்தாது வரை யாது அளித்துக் **கோடைமடம்** கொண்டவராயும் குலவின ரன்றே ? அவரானன்றே **விவேகாநந்தர்** அமெரிக்காத் தேசம் சென்று நமது இந்திய சமயத்தின் ஏற்றத்தை விளக் கினர் ? அதனானன்றே மேனாட்டார் நம்மைப் பெருமைப் படுத்துவாராயினர் ? நம்மவரும் கண்விழித்தனர் ? இத் தகைய நகரத்தைச் சேரவேண்டும் என்னும் வேணவாப் பிடர்பிடித் துந்தியதால், படிக்காசுப் புலவர் இராமநாத புரஞ் சென்று அந்நகரை ஆண்டு வந்த இரகுநாத **சேது பதியைக்** கண்டு,

மூவேந் தரும்அற் றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றெட்டுக்
கோவேந் தரும்அற்று மற்றொரு வேந்தன் கொடையும்அற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருஒத் தாய்ரகு நாத செயதுங்கனே.

என்று அவர் தமிழ்ப்புலவரை ஆதரிக்கு மாற்றைப் பாராட் டிப் பாடினர்.

சேதுபதியும் நம் செந்தமிழ்ச் செல்வர் பாட்டின் விஞ்சிய சுவையை நாடோறும் நுகர விரும்பி அவரைத் தம்

சமஸ்தான வித்துவான்களுள் ஒருவராக ஏற்படுத்தி மேன்மைப் படுத்தினர். எனினும், ஓரிடத்தே தங்கித் தரித்து, சமஸ்தான சட்ட திட்டங்களுக்கு அடங்கி ஒழுகும் வாழ்க்கை புலவர் மனத்துக்குப் பொருந்தவில்லை. அதனால் அவர் மெல்லென வேத்தவை விட்டகன்று காயற் பட்டணம் போய்ச் சேர்ந்தனர்.

அங்கே **சீதக்காதி** என்னும் வள்ளல் ஒருவர் பெருஞ் செல்வத்துடன் வாழ்ந்திருந்தனர். அவர் மதத்தால் முகம்மதியரெனினும் தமிழமுதம் பருகுஞ் செவியுடையாராய்த் தமிழ்ப் புலவருக்கெல்லாம் வரையாது வழங்கும் வள்ளலாய் விளங்கினர். அவர் விரிந்த உள்ளச்செவ்வியையும், கொடைத்திறத்தையும், குணநலத்தையும் நாவலர் பலரும் நனிபுகழ்ந்து நற்றமிழ்ச் செய்யுள் இயற்றுவர். படிக்காசுப் புலவர் அவருடைய பொன் போன்ற இன்குணத்தைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்து அவரைக் காணுமாறு சென்றனர். செல்லலும், சீதக்காதிப் பிரபு முகமும் அகமும் மலர்ந்து, அவர் வரவை நல்வரவாகக் கொண்டாடி, முகமனுரைத்து உயரிய ஆதனத்தில் இருத்தினன். அப்போது புலவர் பெருந்தகை,

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப் பலனென்ன கைவிரித்துப்
போய்யா சகம்என் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் ஈபவன் வேள்சீதக் காதி ஒருவனுமே.

என்னும் செம்பாகம் அமைந்த செய்யுட்களால் அவர்

மீக்கூற்றை மேம்படுத் துரைத்தனர். அவ்வள்ளியோர் ஆதரவிணயில் பன்னாள் ஆண்டு நன்றுறைந்தனர்.

சிறிதுகாலஞ் சென்றபின் பாவலர் சிவிகையூர்ந்து, எக்காளம் முழங்க, பலர் விருது கூறிவரப் புவிராயர் போற்றுங் கவிராயரராய்ச் **சிவகங்கை** என்னும் திருநகரைச் சேர்ந்து, **திருமலைத்தேவர்** என்னும் பிரபு சிகாமணியைப் போய்க் கண்டார். அவர் புலவர் பெருமிதத்தைக் கண்டு பொருராய் அவர் செருக்கை அடக்க வெண்ணிக் கிளிக்கூடு போன்ற ஒரு சிறையின்கண் அவரை அடைப்பித்தார்.

செருக்குடையவர்க்குப் பிறர் பெருமிதமும் செருக்காகவே தோன்றுதல் இயல்பு. அவர் பிறர் ஆடை அணிகள் சிறக்கத் தரித்தலையும் காணப் பொருர்; காரணமில்லாமலே எவரையும் குற்றங் கூறுவர்; அவரைக் குறித்தே,

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்ருகுங் கீழ்.'

என்று ஒள்ளிய அறிவின் தெள்ளியருங் கூறினர்.

அச்சிறை மிகக்குறுகிக் புலவர் செவ்வே இருத்தற்கும் இடமின்றி யிருந்தது. அதன்கண் அடைக்கப்பட்ட அருந்தமிழ்வாணர் பண்டை வினையின் பயனை யெண்ணி உள்ளம் உருகினார். இறைவன் அழகிய அருளை உன்னிஉன்னித் தயங்கினார்; ஊழ்வினை உருத்து ஊட்டின் மக்கள் செய்யலாவது யாதெனக் கூர்ந்து நினைந்து, அயர்ந்தார்; சிறையிட்டவர் உண்ணுஞ் சோறும் பருகும் நீருங்கூட அளித்தாரில்லை. அவர் நெஞ்சம் கல்லோ, மரமோ, வல்லிரும்போ யாதோ அறிகிலம். இவ்வாறு சின்னாட்கள் சென்றன.

அச்சிறைக்கருகே ஓர் இளமரக்கா உளது. அங்கே செய்குன்று ஒன்று சிறக்க அமைக்கப்பட் டிருந்தது. அத

லேச் சுற்றி அகழி போன்று நீர் வாய்க்கால்கள் வெட்டப் பட்டிருந்தன. அவற்றின் கரை மருங்கில் பைம்புற்றரை மரகத மணியைப் பதித்து வைத்தாற்போல் இலங்கிற்று. முல்லை, இருவாட்சி, மல்லிகை முதலிய திருமலர்கள் மலர்ந்து நறுமணங் கமழ்ந்தன. செந்தாமரை வாய்குவியப் பகலெல்லாம் குவிந்து கிடந்த செங்குமுதம் தளையவிழ்ந்து இன்பக் கண்ணீரைச் சொரிந்து தனது தலைவனாகிய தண்கதிர்ச் செல்வனை எதிர்நோக்கி நின்றது. அக்காலைத் திருமலைத் தேவரும், பெண்மை கனிந்து விளங்கும் அவர் தம் மனைவியும் பொழுது போக்காக அங்குப் போந்தனர். மனைவியும் கொழுநனும் நிலவுக் குவித்தன்ன வெண்மணற் குன்றின் மீது அமர்ந்து, இனிய மெல்லிய சொற்களைப் பேசிக்கொண்டிருந்தலைச் சிறைக் கோட்டத்திலே யிருந்து நோக்கிய நாவலர் கண்டு அதுதான் பதமென உட்கொண்டு அவ்விருவோரும் கேட்கும் வண்ணம் காலத்துக்குத் தக்கவாறு,

நாட்டிற் சிறந்த திருமலையா, துங்க நாகரிகா,
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னும்ஓர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்துவைத் தாய்இரை தாஎன்று கூப்பிடுதே.

என்னுங் கவியைக் கேட்டோர் இரங்குமாறு தாழ்ந்த குரலில் தெளிவாய்ப் பாடினர். அது செவியில் நுழைந்ததும் திருமலைத்தேவர், மனைவியின் மழலைச் சொல்லையும் நிறுத்திப் பாட்டினை முற்றும் உற்றுக்கேட்டு, அதிலமைந்துள்ள கருத்தை நோக்கி வியந்து, உடனே புலவர் இருப்பிடங் குறுகி அவரைச் சிறைவீடு செய்து, தாம் இழைத்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்று பல்காற் பயின்றுரைத்துக் கோயிற் கழைத்துச் சென்று, பரிசில் தந்து உபசரித் தனுப்பினர்.

பின்பு, படிக்காசுப் புலவர் திருச்சேந்தூர் என்னுந் திப்பிய பதியைத் தரிசிக்க ஆராக்காதலுடன் சென்றார். அங்கு அறுமுகப் பெருமான் ஆழியின் அலையெறி வாயிலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் செவ்வி நோக்கி, நெஞ்சம் குழைந்து, உழுவலன்பு பொங்க, மயிர்முனை நிறுத்தித் தம்மை மறந்து அமுதுண்டவர் போலக் குமுதவாய் திறந்து பின்வருமாறு திராக்ஷாபாகமாகக் கவி பாடுவாராயினர் :

முன்னம்நின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமுங் கிள்ளிய நாள்அல்ல வேஎன்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் தானோசெந் தூரில் இருப்பவனே.

மூற்கரை அப்பரை ஏறவிட் டாட்கொள் முதல்வர்உள்ளக்
கற்கரைக் கும்படி போதித் திடுங்கரு ணைக்கடலைச்
சிற்பரைக் குட்டியை எங்கெங்குந் தித்திக்குஞ் செங்கரும்பின்
சர்க்கரைக் கட்டியைக் கண்டேன்செந் தூர்எனுந் தானத்திலே.

சின்னஞ் சிறுபிள்ளை செங்கோட்டுப் பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன் மணிப்பிள்ளை பூலோகம் எங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ் சுழல்கின்ற சூரனைக் கொன்றசொக் கேசர்பிள்ளை
வன்னக் கிளிப்பிள்ளை செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே.

கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள்
அடிப்பதெனக் கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடு வேனோ ?
வில்லடிக்கும் பிரம்படிக்குங் கல்லடிக்கும்
விரும்பி நின்ற மெய்யன் ஈன்ற
செல்லடிக்குந் தடவரையிற் சேறடிக்க
அலையடிக்குஞ் செந்தி லானே.

இப்பால் கவிஞர் **தண்டலை நீணெறி** என்னுந் திருப்பதியைச் சார்ந்து, அவ்வூர் வாழ்நர் வேண்டியாங்குத் **தண்டலையார் சதகம்** என்னும் பழமொழி விளக்கத்தை ஒவ்வோர் பழமொழியை ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் அமைத்து அதனை விளக்கு முகத்தான், பல சிறந்த பொருட் கூறுகளையுஞ் சரித்திரங்களையும் பெய்துரைத்துப் பாடினர்.

அவற்றுள் இரண்டொரு செய்யுட்கள் வருமாறு :

முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங் கையர்மகிமை
மொழியப் போமோ
ஒக்கும்எரி குளிரவைத்தாள் ஒருத்திவில்வே டனைஎரித்தாள்
ஒருத்தி மூவர்
பக்கமுற அமுதளித்தாள் ஒருத்திஎழு பரிதடுத்தாள்
ஒருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா என்றொருத்தி
கூறி னாளே.

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீள் நெறியாரே
திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத கள்ளர்இனி
யாரோ என்றால்
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர் திருநீறு
குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ளர் ஆசாரக் கள்ளர்இவர்
ஐவர் தாமே.

அப்பதியிலே பன்னாள் தங்கிச் சிவதரிசனஞ் செய்துகொண்டிருந்தனர். பின்னர்ச் சீதக்காதிப் பிரபுவைக் காணவேண்டும் என்னும் அவா மேலீட்டால் அவ்விடம் விட்டகன்று காயற்பட்டணம் அண்மினர். அங்குச் சென்றவளவில்

சீதக்காதி வள்ளல் புகழுடம்பை நிறுத்திப் பூதவுடம்பை நீத்தார் என்னும் பொல்லா மொழியைக் கேட்டுப் பெருந் துன்பங்கொண்டு அப்புண்ணிய சீலரின் கண்ணியத்தையும், செம்மனச் செவ்வியையும், வள்ளன்மையையும் எண்ணி யெண்ணித் தாயை இழந்த சேய்போலப் புலம்பினர்; அவர்தம் உருகி வழியும் அன்பை நினைந்து நினைந்து கதறினர். அப்பால் அவர் திருமேனியை அடக்கஞ் செய்திருக்குஞ் சமாதிக் குழியையேனுங் காணலாம் என்னுங் கருத்துடன் ஆண்டுச் சென்று மனமுருகி வாய்விட் டலறிப் பல இனிய செய்யுட்களைப் பின்வருமாறு பாடுவாராயினர்:

பூமா திருந்தென் புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையுஞ் செத்ததுவே.

தேட்டாளன் காயல் துரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

மறந்தாகி லும்அரைக் காசுங்கொ டாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன இருந்தாவ தென்ன இறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங் காயல் துரைசீதக் காதி திரும்பிவந்து
பிறந்தால் ஒழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே.

இப்பாடல்களைக் கவிவாணர் பாடியவுடன் சமாதிக்குழி திறக்கச் சீதக்காதிவள்ளல் திருவுருவந் தோன்றித் தன் சுண்டு விரலிலே தரித்துள்ள வைரமோதிரத்தை நீட்டிற்று. புலவர் அவ்வடிவங் கண்டு மனமிக மகிழ்ந்து பேசத் தொடங்குகையில், அது கை ஆழியை நீட்டிய வண்ணம் நின்று புன்

னகை தவழும் இன்முகம் கோட்டியது. உடனே புலவர் அத்தெய்வப் படிவத்தின் உள்ளக் குறிப்பை உணர்ந்து பேரொளி இமைக்கும் அச்சீராழியைத் திருவிரலினின்றுங் கழற்றிக் கொண்டனர். கொள்ளலும், அவ்வடிவம் மறைந்தது ; சமாதி மூடிற்று. இவ்வருஞ் செயலைக் கண்டு விம்மித முற்ற பாவலர் சற்று நேரம் அசைவற நின்று, 'இது கனவோ? நனவோ? கனவாயின் நம் கையில் ஆழி வாரா தன்றோ?' என்றுள்ளிப் பலர்க்கும் இதனை எடுத்துரைத்தனர்.

பிறகு கவிவாணர் அப்பிரபுவின் குடும்பத்தினரைக் காணவேண்டும் என்னும் விழைவு தூண்ட ஆண்டுச் சென்று நிகழ்ந்தவற்றை யெல்லாம் திறம்பட மொழிந்தனர். அப்போது அவர்கள் செந்தமிழ்ச் செல்வரை நோக்கி, "அரும் பெரும் புலவீர், எம் சீதக்காதி ஐயர் உயிர் விடுங்கால் தமிழ்ப் புலவரைப் பற்றியே வருந்தி, 'இனி என்னைத் தேடி வரும் புலவர் எங்ஙனம் வாடுவாரோ?' என்று கண்ணீர் சொரிய உருகிக் கூறிப் பின் எம்மை நோக்கி, 'என் சிறுவிரல் மோதிரத்தைக் கழற்றாமல் சமாதியில் அடக்கஞ் செய்ம்மின்,' என்றனர். அவர் உட்கோள் எமக்கு அன்று தெரிந்திலது ; இன்று வெளியாயிற்று," என்றுரைத்துப் படிக்காசுப் புலவரைப் பலவாறு போற்றினர். புலவரும் அங்குச் சின்னாள் வைகி, 'இருந்துங் கொடுத்தான், இறந்துங்கொடுத்தான் சீதக்காதி,' என்னும் பழமொழி எங்கும் வழங்க அவர்தம் மெய்ப்புகழை யாண்டும் பரப்பி அவண் விட்டகன்றனர்.

சிறிது காலஞ்சென்ற பின்னைப் புலவர் தமது இயற்றமிழ்க் குரவருக்குப் புதல்வராகிய சதாசிவ நாவலரைக்

காண்பதற்குச் செம்மற்பட்டிக் காடுவழியே சென்றனர். அப்பொழுது நாவலருடைய மாணவர் தூதுளங்காய் பறித்துக்கொண்டே யாப்பருங்கலக் காரிகையை நெட்டுருச் செய்துகொண் டிருப்பதைப் பார்த்து வியப்புற்றுச் சென்று, நாவலர் இல்லம்புக்கு அவரைக் கண்டு அளவளாவித் தாம் கண்ட காட்சியை அமைத்து,

கூடுஞ் சபையில் கவிவா ரணங்களைக் கோளரிபோல்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேழுன்னுன் தந்தைதன்னால்
பாடும் புலவர்க ளானோம் இன்றிச் செம்மற் பட்டியெங்குங்
காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்பனுவே !

என்று பாடினர். நாவலரும் அவர்தம் குருபத்தியையும், உண்மை யன்பையும் நோக்கி உவகையில் திளைத்தனர். பின் அவரிடம் விடைபெற்றுப் புலவர் சென்றனர். அவ்வப் போது வறுமையால் மெலிந்து செல்வரைச் சென்று குறை நிரப்பிக் கொள்ளுதல் அவர் மனத்தைப் புண்படுத்தியது. கற்றுரினுங் கல்லாதார் இனிது வாழ்தலையும், கற்றவர் எப்பொழுதும் பிறர் கையை எதிர்நோக்கி யிருத்தலையும் எண்ணிக் கல்வியை வெறுத்து,

அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில் லாமல் !
திடமுளமோ கனம்ஆடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகள்ஆடத் தெரிந்தோம் இல்லை ;
தடநிறவே சையாகப் பிறந்தோம் இல்லை ;
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோம் இல்லை ;
என்னசென்மம் எடுத்துலகில் இரக்கின் ருேமே.

என்று பாடித் தம்மைத் தாமே நொந்து கொண்டனர்.

இங்ஙனம் வாழுங்கால் புலவர் ஒருநாள் பின்வருமாறு சிந்திப்பாராயினர்: 'எத்தனை காலம் இத்தகைய அல்லல் வாழ்க்கையைச் செலுத்துவது? இறப்பு இன்று வருமோ? அன்றி நாளையே வருமோ? அறியேன். இனியேனும் எம் பெருமான் திருவுருவை உள்ளக் கிழியில் எழுதி எழுதிப் பாரேனோ? அவர் அரும்பணியையே இயற்றி எனது வாழ் நாளை வீழ்நாளாக்காமல் இருப்பேனோ? இதற்கு யாதுசெய் வேன்?' என்று எண்ணி இறுதியில் யாதாயினும் ஒரு சைவ மடத்தை அடைந்து தொண்டு புரிய வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தார். அதன் பொருட்டுத் தமிழ்வாணர் தரும புரஞ் செல்லுதற்குச் செலவு மேற்கொண்டனர்.

தருமபுரம் சைவமடங்களுள் ஒன்று. பொருள் வருவா யிலும் பெருமையிலும் அதனைத் திருவாவடுதுறைக்கு இரண் டாவது படியில் வைக்கலாம். சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவ ஞானத்தை மெய்கண்ட தேவர் சிவ ஞான போதம் என்னும் திப்பிய நூலை அருளிச் செய்து, தமிழ் மக்கள் அனைவருக்கும் திருஞானவமுதை வழங்கினர். அவரைப் பின்பற்றி அவர் மாணவர் பரம்பரையிற் போந்த பலரும் அரும்பெரு நூல்களை இயற்றியருளினர். அவ்வள வோடு அமையாது மெய்கண்டார், பரம்பரையிலே வந்த நமச்சிவாயக் குருமூர்த்திகள் திருவாவடுதுறை மடத்தை நிலைநிறுத்தினர். அவர் காலந்தொட்டுச்சைவமடங்கள் யாண் டும் நிலைநிறுத்தப்படலாயின. சைவமடங்கள் எல்லாம் தமிழ் மொழியையும்,சைவசமயத்தையும்எங்கும்பரப்புதலிலேயே கண்ணுங்கருத்துமாய் நின்று புலவர் பலரை ஆதரணை செய்து நூல்கள் பலவற்றை வெளிப்படுவித்துத் தம் புகழை நிறுத்தின. மடங்களில் தமிழும், சைவசித்தாந்தமும்

மாணவருக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. அப்பொழுது சைவ மடங்கள் கல்விக் களஞ்சியங்களாய் ஒளிர்ந்தன. மடத்துக்குச் செல்வோர் தமது மடம் அகலப் பெறுவர். எத்தனை நுட்பமான பொருள்களும் எவரும் கொளுத்தப் பெறுவர். ஐயந்தீர்த்துக்கொள்வதற்குச் சைவ மடங்களே புலவர்கட்குப் பற்றுக் கோடாய் இருந்தன.

தருமபுரமடத்திலேதான் மாசிலாமணி தேசிகர் வாழ்ந் திருந்தார். குமரகுருபரரும் இம்மடத்தைச் சார்ந்தவரே. அப்பெரியார் பெருமை, தமிழ் நூல்களில்மட்டு மன்றிக் காசியம் பதியினும் கவினுற்று விளங்குகின்றது. அக்காலத் திலே காசியைச் சேர்ந்து, ஆங்குச் செங்கோல் ஓச்சிய முகம் மதிய மன்னனை அடுத்து அவருக்குத் தமது பெருமையைப் புலப்படுத்தித் தமிழ்மக்கள் நன்மையின் பொருட்டு மடம் கட்டுவித்தன ரென்றால், அவர்தம் பெருமை சொல்லற் பாலதோ? கல்வியுடையார் காரிய நிருவாகிகளாக இருத் தல் சாலவும் அரிது. நம் குமரகுருபரரோ செந்தமிழ்ச் சுவை சொட்டும் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருவாரூர் நான்மணிமாலை முதலிய அழகிய நூல்களை இயற்றியதே யன்றிக் காசிமா நகரிலே கடவுள் மாநதியாகிய கங்கையின் கரையிலே தமிழர் செருக்குறுமாறு பெருமடம் ஒன்று சமைப்பித்தார் என்று எண்ணும்போது எமது உடம்பு புளகம் போர்க்கின்றது.

இத்தகைய பெருமக்களைப் போலப் பலரும் இருந்திருப் பாராயின், நமது செந்தமிழ் இன்றுள்ள நிலைக்கு வருமா? அந்தோ! சைவமடங்கள் எல்லாம் பிற்காலத்தில் தாம் கொண்ட கொள்கையையும், தமது முன்னோர் கருத்துக் களையும் அறவே விடுத்து வெறுஞ் சோற்று மடங்களாகத்

தீர்ந்து விட்டன. தமிழ் வளர்ச்சி எங்கே? சைவப் பிரசாரணம் எங்கே? தமிழ்ப் புலவர் யாண்டுளர்? தமிழ் மாணவர் எங்குளார்? அம்மடங்களிலே வாழ்ந்திருந்த முன்னோர் நூல்களும் வெளிவரவில்லை. சிவஞான போத மாபாடியம் இன்னும் திருவாவடுதுறையி னின்றும் புத்தக வடிவாகத் தலை காட்ட வில்லை. நூல்கள் பேழையிலே அடக்கஞ் செய்யப் பட்டிருத்தலால் எந்தத் தெய்வத்துக்குப் பிரீதியோ தெரியவில்லை. அவற்றை அருளிச் செய்த ஆசிரியர் கருத்தும் நிறைவேறவில்லை. பொதுமக்களால் செய்யமுடியாத அளவிறந்த பெருந்தொழில்களை மடத்தார் முடிக்க வியலும். அவர்கள் இடத்தில் பெருந்திரளான பொருள் உள்ளது. அத்தொகை சைவ நன்மக்கள் கொடுத்தது என்பதையும், அவற்றால் செய்யத் தக்கவை தமிழ்வளர்ச்சி, சைவசித்தாந்த போதனை என்னும் இரண்டுமே என்பதையுங் குறிக்கோளாகக் கொண்டு மடாதிபதிகள் உழைத்து வருவார்களாயின், அவர் புண்ணியமும் புகழும் எய்துதலோடு எம்மனோரான் தொழப்படுங் குருமூர்த்திகளாய் விளங்குவார்க ளன்றோ?

நிற்க; புலவர் சிறிது காலம் சென்றபின் தருமபுர ஆதினத்தை அடைந்து, அங்கே பெரிய பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசாரியருக்கு இனியராகி அவருக்கு அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர். அவர் புலவரைப் பின்பு வைத்தீசுவரர் ஆலயத்துக்குக் கட்டளைத் தம்பிரானாய் நியமிக்க, அவர்தம் ஆணையை மறுத்தற்கஞ்சியும், தம் கருத்து அதனால் நிறைவேறுதலையும் எண்ணி ஆங்குப் புக்குச் சிவதருமம் நடாத்தி அனைவருக்கும் அமுதளித்துப் பெருஞ்சிறப்புடன் 'படிக்காசுத் தம்பிரான்' எனப் போற்றுமாறு நன்குறைவா ராயினர்.

அக்காலைச் சொக்கநாதப் புலவர் அஃந்திருத்தலத்தை யடைந்து, திருக்கோயில் வழிபாடு புரிந்து, தம்பிரானைச் சென்று கண்டு, அவர்தம் பாட்டின் இன்சுவை மிகுதியைப் பாராட்டி,

'மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினறு
நவினந் தானே.'

எனப் பாடினர். தம்பிரானும் அவர் கவிபாடும் அருமையைப் புகழ்ந்து முகமன் மொழிந்து, அவருக்குத் திருமடத்திலே அமுது செய்வித்துப் பீதாம்பரம், பொற்கம்பலம் முதலிய பரிசளித்து உபசரித்து அனுப்பினர். அப்பால் அந்நகர மாந்தர் பலரும் தம்பிரானைக் குறுகி, 'திவ்வியம் பழுத்த சைவசித்தாந்தச் செல்வரே, இத் திருப்பதியைச் சுட்டி ஒரு கலம்பகப் பிரபந்தம் பாடியருளுதல் வேண்டும்,' எனக் குறையிரந்து வேண்டினர். அவர்தம் மெய்ம்மை வேட்கையை உணர்ந்து தம்பிரான், திருவருளைச் சிந்தித்து, **புள்ளிருக்கு வேளூர் கலம்பகம்** என்னும் நூலைச் சொல்லுக்கும், பொருளுக்கும் பொருந்தச் செம்பாகமாகப் பாடி முடித்தனர். அதனுள் இரண்டு செய்யுட்களை ஈண்டெடுத்துக் காட்டுதும் :

தாதுண்டு வண்டறை வேளூர் அரன்உண்டு தையல்என்னும்
மாதுண்டு கொண்ட மருந்துண்டு இதைப்பற்ற மாநிலத்தில்

ஏதுண் டுனக்கு மடநெஞ் சேமேஇசை கேட்கவிரு
காதுண்டு கூப்பக் கரமுண்டு நோக்கவுங் கண்களுண்டே.

தருந்தேனே அனையமொழித் தையல்பங்கர் வேளூரர்
தண்தார் வேட்டுக்
கருந்தேனே தினமுனக்குச் செந்தேனே தந்தேனே
கறிசோ றின்னம்
அருந்தேனே இணைவிழிகள் பொருந்தேனே
கொன்றைஅந்தார் அளித்தால் ஆவி
வருந்தேனே உனைவழிபார்த் திருந்தேனே இருகாத
வழி வந்தேனே.

இந்நூலைத் தம்பிரான்மாரும், பாவலரும், செல்வரும் கூடிய குழுவின் நாப்பண் படிக்காசுத் தம்பிரான் வீற்றிருந்து, தமது ஞானசாரியரது மஹாசந்நிதானத்திலே அவர் கட்டளை யிட்ட வாறு அரங்கேற்றினர். அனைவோரும் புலவருடைய பாவன் மையையும் தெளிவையும் பலபடியாக எடுத்துப் பாராட்டினர். புலவரும் திருவருளை யுன்னிக் கண்ணீர் உகுத்துப் பரவசப்பட்டனர்.

இங்ஙனம் படிக்காசுத் தம்பிரான் சில்லாண்டுகள் செல்லப் புழுத்துச் செத்தாலும், பழுத்துச் செத்தாலும் பிறவா நெறி அருளவல்ல தில்லையம்பதிக்குச் சென்று அவ்விடம் விட்டு அகலாராய் ஙன்கனம் உறைவாராயினர். நாடோறும் வைகறைத் துயிலொழிந்து, சிவகங்கையிலே நீராடி, நாளொழுக்கங்களைச் செவ்வன் செய்து, பொன்னம்பலத்தே இன்னருள் கொழிக்கும் இன்பக்கடலை இருகண்களானும் அள்ளியுண்டு தம் முள்ளத்தே பொங்கி யெழும் உழுவலன்பு கொள்ளைகொள்ள உணர்வழிந்து, உள்ளமும் போய்த் திருவருட் பெருக்கிலே இரண்டறக் கலந்து நிற்பர்; தம்மை

அடைந்த மாணவர் பலர்க்கும் மெய்ப்பொருள் உபதேசஞ் செய்வர்; சைவசித்தாந்த நூற் பொருள்களை விழைவார்க்குச் செவியறிவுறுத்துவர். இவ்வாருகச் செந்தமிழ்ச் செல்வர் சிறிது காலம் திருப்பணிசெய்து, எல்லாம் வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய நடனசிகாமணியின் திருவடிப் பேற்றை அடைந்தனர். அவர் சந்தம் பாடும் வன்மையை வியந்து புலவர் ஒருவர் பாடிய செய்யுள்:

'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் ஜயங்கொண்டான்
 விருத்தம் என்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன் கோவைஉலா அந்தாதிக்
 கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் வசைபாடக்
 காளமேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காசு அலாதொருவர்
 பகரொணதே.'

# 6. புகழேந்திப் புலவர்

நீர்வளம் நிலவளம் நன்கு பொருந்திய தொண்டை நாடு தொன்று தொட்டுப் புகழ்வாய்ந்து திகழ்வது. அது பண்டைக்காலத்தே இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அக்கோட்டங்களுள் களத்தூர்க் கோட்டம் மிகச் சிறந்தது. களத்தூர் பாலாற்றின் பக்கத்தே அமைந்திருத்தலின் யாவரும் அவ்வூரை விழைந்து அங்கே குடியேறுவர். வயல் வளமிகுந்த அதனைப் பொன்விளைந்த களத்தூர் எனவும் வழங்குவார். அது பொற்களந்தையென மருவியும் வழங்கும்.

இத்தகைப் பதியின்கண்ணே வேளாண் குலத்தலைவராகிய ஒருவருக்கு அருமந்த புதல்வராகப் புகழேந்திப் புலவர் பிறந்தார். புகழேந்திப் புலவர் இளம்பருவத்திலே தாம் கற்றற்குரிய நூல்களை யெல்லாம் கற்றுத்தேர்ந்து கவிபாடும் வன்மையும் பெற்றார். அவருக்கு வெண்பாப் பாடுவதிலேயே மிக்க விருப்பம். பெருந்தேவனார் பாரத வெண்பாவை அடிக்கடி படித்து இன்புறுதலோடு அவர் பாட்டுக்களைப்போலத் தாமும் பாடிப் பயிற்சி செய்வர். அவர் பாட்டுக்கள் சிறிது சிறிதாக வெளித்தோன்றுதலும், அவற்றைக் கண்ட அறிஞர் அவற்றின் விஞ்சிய சுவையை மெச்சத் தொடங்கினர். அதனால் அவர் புகழ் எங்கும் பரவலாயிற்று. சில நாட்களில் புலவர் புகழ் தொண்டை நாட்டைக் கவர்ந்து கொள்ள, அந்நாட்டிலே இருந்த தமிழ்ச் சான்றோர் பலர்

அவருக்குப் **புகழேந்திப் புலவர்** என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டினர். அப்பொழுது புகழேந்தியார் '**இரத்தினச் சுருக்கம்**' என்னும் பெயருடைய சிறிய நூல் ஒன்றை இயற்றினர். இரத்தினச் சுருக்கம் பல அரிய நூல்களில் உள்ள சிறந்த பொருள்களைத் தொகுத்துக் கூறுவதில் உயர் பெறுவது. அன்றியும் அது முன்னோர் பலதிறப் பொருட்பற்றி மொழிந்து வைத்த உவமைகளை ஒருங்கு புணர்த்துக் கூறுவதினால் மாணவர்க்குப் பயன்படற்பாலது. இவ்வினிய நூலாலும் அவருக்குப் பெருமை ஓங்குவதாயிற்று.

இங்ஙனம் நம்புலவர் பெருமான் வாழ்ந்து வருங்கால், அவர் நண்பர் சிலர் அவரை அணுகி, 'புலவரேறே, தாம் கற்ற கல்வியோ கடல்போலப் பரந்தது; தமக்குள்ள பாவன்மையோ நனிபெரிது. தமது கல்வி அறிவையும் நுண்ணறிவையும் தமிழ்நாடு முற்றும் பரப்புதலே தகுதி. அங்ஙனமின்றி இங்கே இருப்பீராயின், நும்பெருமை குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும்போல மழுங்குமே யன்றி ஒளிரமாட்டாது,' என்றனர். இதனைச் செவிசாய்த்துப் பொறுமையுடன் கேட்ட புலவருக்கு அவர் செப்பியது முழுதும் உண்மையெனத் தோன்றிற்று. அதனால் அவர், தம் கெழுதகை நண்பர் கருத்துக்கிசைந்து அவர் தம்மை அன்புருக நோக்கி, 'ஐயன்மீர், என் ஆக்கத்தைக் கோரி எனக்கு உறுதிபுகட்ட வந்த உழுவலன்புடையார் நீவிரே. நீவிர் கூறியன யாவும் எனக்குக் களிபேருவகையைத் தருகின்றன. இத்தகைய நண்பரை யுடைய எனக்கு யாது குறையுளது? நீர் விழைந்தவாறே நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்து எனக்கும், உமக்கும், நாம் பிறந்த திசைக்கும் கீர்த்தி நிலைபெறும்படி செய்வேன்,'

என்றுரைத்தனர். அச்சொல்லாகிய அமிழ்தம் வாடிய பயிருக்கு வான்துளியைப்போல அந்நண்பர் உள்ளத்தைக் குளிர்வித்து உடலைத் தளிர்ப்பித்தது.

நண்பர் விடைபெற்றுச் சென்ற பின்னர்ப் புகழேந்திப் புலவர் தமது இல்லத்துக்கு அருகேயுள்ளசோலையிற்சென்று உலாவிக்கொண்டே தாம் பாண்டிய நாட்டை நோக்கிப் புறப்படும் காலத்தைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தனர். பின்னொரு நல்ல நாளைக் குறிப்பிட்டுக்கொண்டு புலவர் வீடு சேர்ந்து, அதற்கு வேண்டியவற்றை முடித்து வருவாராயினர். சிலநாட்கள் சென்றதும், புலவர், தம் நண்பர், உறவினர் முதலியோருடன் விடைபெற்றுப் பாண்டி நாட்டிற்குச் செல்லப் புறப்பட்டனர். சென்றவர் வழியிலே உள்ள நடு நாட்டைப் பார்த்துக் களித்து, ஆங்குள்ள திருக்கோயில்களை வணங்கி மேற்சென்றார். பின் அவர் சோழவளநாட்டை அடைந்தார்; அந்நாட்டிலே காவிரியாற்றின் வளத்தையும், தென்னை, வாழை முதலியன நிறைந்துள்ள சோலைகளையும் பார்த்துப் பார்த்து இன்புற்றார். சிதம்பரம், திரிசிரபுரம், திருவரங்கம் முதலிய பெரும் பதிகளையும் கண்டு வணங்கி, அன்பு பெருகினவராயினர். அதன்மேல் சின்னாட்களில் புகழேந்திப் புலவர் செந்தமிழ் நாட்டைச் சேர்ந்தார். அந்நாட்டை **வரகுணபாண்டியன்** அரசாண்டு வந்தான். அங்கே பாண்டியர் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்து போதரும் முயற்சிகளால் தமிழ் மணம் பரிமளித்தது. எங்கும் கல்லூரிகள் கணக்கின்றிக் காணப்பட்டன. ஏடும் எழுத்தாணியும் தாங்கிக்கொண்டு யாண்டுங் கற்போர் செல்லுதலைக் கவிஞர் கண்ணுற்றார். வைகையாற்றிலே மாணவர் பலர் நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களை நெட்டுருச்

செய்திருத்தலை நோக்கினார். நோக்கின புலவர், 'இவ்வைகையுந் தமிழ்நயம் உணருமன்றோ? ஈதன்றோ செந்தமிழ் நங்கைக்குச் செவிலித்தாய்,' என்று எண்ணினார்.

மதுரை மாநகர் அங்கயற் கண்ணியம்மையின் ஆலயத்தால் அருமை பெற்றது. அந்நகரத்தின் நாப்பண் விளங்கும் கயற்கண்ணி கோயில். அது பெரிய கோபுரங்களையுடையதாய்ச் சிற்ப வேலைத்திறன் சிறக்கப் பெற்றதாய் உள்ளது. அத்திருக்கோயிலின் பெருந்தோற்றத்தையும், அழகையும் புகழேந்தியார் கண்டு மகிழ்ச்சியால் விழுங்கப் பட்டவராய் உட்புகுந்தார். அவ்விடத்தே ஓதுவார்கள் சிவாகமம் விதித்தவாறு திருநீற்றைப் பதினொரு இடங்களிலும் புண்டரமாக அணிந்தும், உருத்திராக்கவடம் பூண்டும் இருந்தனர். அவர் இடுப்பிலே வெண்மடியை முழங்காலுக்கு மேல் உடுத்திருந்தனர்; அதனைச் சுற்றி ஒரு சிறு துணியைச் சுற்றிருந்தனர். அவர் அனைவரும் சமயம், விசேடம், நிர்வாணம், ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கு தீக்ஷைகளும் செய்துகொண்டு தமிழ் மறைகளாகிய தேவார திருவாசகங்களைச் சம்பிரதாயப்படி பாடவல்லவர். அவர் சிவபூசை செய்ததன் அறிகுறியாக அவர்கள் செவியிலே வில்வப்பத்திரம் விளங்கியது. அவர் முண்டித சிரத்தை உருத்திராக்கவடம் அணி செய்தது. இத்தகையார் பலர் சொக்கலிங்கப்பெருமானுக்கும் அங்கயற்கண்ணியாருக்கும் பூசனை நடைபெறுங்கால் தமிழ்மறை ஓதுதலைப் புலவர் கேட்டு நெஞ்சம் குழைந்தார். ஓதுவா மூர்த்திகள் பாடிய திருப்பாடல்களின் அருமை பெருமைகளை உன்னி யுன்னிக் களிதுளும்பினார். ஆலய அமைப்பும், ஆங்கே நடைபெறும் அரிய பூசையும், விழாவும் அடியவர் குழுவின் ஆர்வமும்

தமிழ் வேதபாராயணமும் ஒருங்கே சேரப் புலவர் மனம் ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற்போல அன்பாலே நிறைந்தது.

ஆண்டிருந்து மீண்ட புலவர் ஓர் அன்னசாலையை அடைந்து உணவு கொண்டனர். அவ்வுணவு, பாகம் முதலிய வற்றால் தம் நாட்டு உணவினும் வேறுபட்டிருந்ததால் வயி றார உண்ணுதற்கிலராய் ஓரிடத்தே தங்கி யுறங்கினார். பின் னர் இரண்டொருநாட்கள் ஒரு விடுதியிலேயே தங்கியிருந்து வேந்தன் அவைக்களம் குறுகக் காலம் பார்த்திருந்தார். பின்னர் அவர், ஒரு நாள் பாண்டி மன்னன் வேத்தவையை அடைந்தார். அவனும் புலவரைக் குளிர்ந்த நோக்கமும், அரும்பிய நகையும் உடையனாய் வரவேற்று நெடுநேரம் இன்னுரை வழங்கினான். பிறகு புலவரை மன்னர் பெரு மான் தமது நல் விருந்தினராக ஏற்றுப் பல உபசாரங்களு டன் வைத்திருந்தார். புலவர் காலையில் எழுந்து, பொற்றா மரைத் தீர்த்தத்திலே நீராடுதலும், திருக்கோயில் வழிபாடு புரிதலும் வேத்தவை சேறலும் ஆகிய இவற்றையே நாட் டொழில்களாகக் கொண்டு சிலநாள் இருந்தனர்.

பின் ஒருநாள் அரையன் தனியாகப் புகழேந்தியாரைத் தன்னிடம் வருவித்து அவருக்குள்ள புலமையை அறிய விரும்பிப்பலவினாக்களைத்தொடுத்தான். அவற்றிற்கெல்லாம் புரவலன் உவக்குமாறு புலவர் விடையளித்தனர். அன்றியும் புலவாணர் மன்னவன் செவியும், நெஞ்சும் குளிருமாறு பழந்தமிழ் வாணர் பாட்டுக்களிலே பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களையும்,சொல்நயங்களையும் பலபடஎடுத்துஇனிது விளக்கித் தமது பரந்த புலமையையும், விரிந்த அறிவையும் புலப்படுத்தினர். அவற்றை யெல்லாம் செவிமடுத்த அரசன் புகழேந்தியார் புலமையை வியந்து, அன்று முதல் அவர் தம்

நாட்டிற்றானே அவர் தங்கி யுறைதல் வேண்டுமென்றும், தனது அவைக்களப் புலவருள் ஒருவராக விளங்கித் தமது அவையை அழகு செய்ய வேண்டுமென்றும் விழைந்தான். அதற்குப் புலவரும் இணங்கினார். அதுமுதல் புகழேந்திப் புலவர் வரகுண பாண்டியன் வேத்தவைப் புலவருள் ஒருவராய்த் திகழ்வாராஞர். அவர் பாட்டின் சுவைமிகுதி எல்லார் மனத்தையும் ஈர்த்துக் கொண்டமையின், மற்றைப் புலவரும் அவர்தம் வீறுடைமையை ஒப்புக்கொள்ள அவர் அனைவரினும் முதன்மை பெற்றவராஞர்.

புலவர் இங்ஙனம் இருப்புழி, வரகுண பாண்டியன் தன் அருந்தவச் செல்விக்குத் தமிழ் செவியறிவுறுத்துமாறு அவரை வேண்டினன். புலவரும் அதற் கிசைந்து வேந்தன் திருமகளுக்குச் செந்தமிழ் நூல்களை வரன்முறையாகக் கற்பிக்கத் தொடங்கினர். அம்மாதர்க்கரசியும் சங்கச் செய்யுட்களையும், சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய அரும்பெருங் காப்பியங்களையும் பருகுவனன்ன ஆர்வத்துடன் இனிது கற்றுத் துறைபோயினள். அப்பாவையின் மதி நுட்பமும், பொருளுணர் ஆற்றலும் புலவர் உள்ளத்துக்கு உவகையூட்டின.

மகளிர் ஆடவரினும் நுண்ணறிவுடையர்; ஆடவர் அறிவு திட்ப முடையது ; ஆடவரினும் மகளிர் உணர்ச்சி மிக்கவர். பெண்மக்களுக்குக் கல்வி புகட்டினல் அவர் மிகவும் கருத்தோடு கற்றுத் திறமை அடைவர். பெண்பாலாரும் ஆண்பாலாரைப் போலவே புலமையடையும் காலம் வருமாயின் நமது வாழ்க்கையிலே மாறுதல் பல உண்டாகும். குடும்ப வாழ்க்கையே சீர்திருந்தும். நூல்களிலும் இனிய கருத்துக்கள் பல தோன்றும், அதனல் உலகம் மேன்மையடையும் என்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை. பாண்டியன் அருமை மகள் கல்வி மணம் வீசும் காரிகையாயினமையால் புகழேந்திப் புலவர்

பெருமையை முற்றும் உணர்ந்தாள். அவரைத் தந்தையைப்போல அன்புடன் நேசித்தாள். அவருடனே அவள் பெரிதுங் காலங் கழிப்பாள். இதனால் பாண்டியன் திருப்புதல்வி புலவரை விட்டுப்பிரிய மனமில்லாதவளாக இருந்தாள். இவ்வாறு நாட்பல செல்ல, மன்னவன் புதல்வி பெதும்பைப் பருவங் கடந்து மங்கைப் பருவம் அடைந்தாள். இயற்கையிலேயே பேரழகாற் சிறந்த அந்நங்கை, பருவம் அடைந்ததும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து நிரம்பிய முழுமதி போலத் திகழ்ந்தாள். அவள் முகம் செந்தாமரை மலரையும், கண்கள் குவளையையும், கைகள் செங்காந்தளையும், தோள்கள் பச்சை மூங்கிலையும் இப்பொழுதே முழுவதும் ஒத்தொளிர்ந்தன. பாண்டியன் தன் இனிய மகளுக்கு இசைந்த கணவன் யாவனெனக் கருதியிருந்தான்.

அக்காலைச் சோழவள நாட்டை விக்கிரம சோழன் அரசு புரிந்து வந்தான். அவன் மைந்தன் குமார குலோத்துங்கன். அச்சோழ மன்னன் அவைக்களப் புலவராக ஒட்டக்கூத்தர் என்னும் பெரும்புலவர் ஒருவர் இருந்தனர். அவர் கடல் போலப் பரந்த புலமையுடையவர்; நவம் பாடுவதில் அதிசமர்த்தர்; கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் இயற்றுதலில் மிக்க வன்மை யுடையவர்; அதனால் 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்,' என எவரும் புகழ்வர். அன்றியும், அவர் செய்யுட்களை ஒட்டிப் பாடுவதில் திறல் மிகுந்தவர். சோழன் ஒருகால் அவர் பாடிய உலாவிலே யுள்ள சில கண்ணிகளை இயைத்து ஒரு வெண்பா செய்யக் கூறினன். அவ்வாறே,

'கையும் மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வையம்

அளந்தாய் அகளங்கா ஆலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாள்என் மான்.'

என்று ஒட்டப் பாடினர். அதனால் அவருக்கு ஒட்டக்கூத்தர் எனப் பெயர் வழங்கலாயிற்று. அவரைக் கொண்டே சோழன் தன் அருமைத் திருமகன் குலோத்துங்கனுக்குச் செந்தமிழ் பயிற்றுவித்தான். வேந்தன் ஒட்டக்கூத்தருக்குக் கவிச்சக்கிரவர்த்தி என்னும் பட்டமும், சிவிகை முதலிய சிறப்புக்களும் அளித்து ஆதரித்து வந்தான். குலோத்துங்கனுக்குக் கூத்தர்பால் விருப்பமும், நன்மதிப்பும் அதிகம். ஒருகால் கூத்தர் சோழனைப் புகழ்ந்து,

'ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான் என்று நித்தநவம்'

என்று இரண்டடி பாடி முடிக்கையில், குலோத்துங்கன் இடைமறுத்து,

'பாடுங் கவிப்பெருமான் ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே.'

என மற்றிரண்டடி பாடிப் பாட்டை நிறப்பினன் என்றால் அக்குலோத்துங்கனுக்குக் கூத்தரிடம் இருந்த அன்பும் மதிப்பும் இத்துணை யென்பதும் சொல்ல வேண்டுமோ?

இவ்வாறிருப்பச் சோழன் தன்மகன் குலோத்துங்கனுக்குப் பாண்டியன் மகளை மணம்புரிவிக்க வேண்டுமென விழைந்து, தன் கருத்தைப் பன்முறை கூத்தரிடம் கூறி வந்தான். அக்கருத்து நிறைவேறுமுன் மன்னன் பொன்னுலகு புக்கு வானவர்க்கு விருந்தாயினன். உயிர் போகுமுன் வேந்தன் ஒட்டக்கூத்தரை வருவித்துத் தன் கருத்தை எங்

னமேனும் முற்றுவித்தல் வேண்டுமெனக் கூறி உயிர் மாய்ந்தான். இதனால், குலோத்துங்கனுக்குப் பாண்டியன் மகளை மணம் புரிவித்தல் கூத்தர் கடமையாக முடிந்தது. அவரும் அதற்காக முயற்சிகள் செய்துவந்து, கடையில் முதியோர் சிலருடன் பாண்டிய நாட்டுக்குச் சென்றனர்.

பாண்டியனுக்குத் தமது வருகையை அறிவித்து, அவன் விரும்பிய வண்ணம் அரண்மனையை அனைவரும் அடைந்தனர். தமிழ் நாடன் அவர் தம்மையெல்லாம் அன்புடன் வரவேற்று முகமனுரைத்துத் தக்க உயரிய ஆதனங்களில் தக்கவாறு சிறக்க அமர்த்தி நலம் வினவினன். பின், மன்னன் சோணாட்டின் விளைவு, அரசியல், குடிவளம் முதலியவற்றை வினவினன். அவற்றிற்கெல்லாம் ஒட்டக்கூத்தர் தக்க விடையளித்துக்கொண்டு வந்தனர். அதன்மேல் மாறன் அவர்கள் ஆண்டுப்போந்தமைக்குக் காரணம் இன்னதெனத் தெரிவிக்குமாறு கேட்டான். அப்பொழுது புலவர் பெருமான் எப்படியும் பாண்டியன் பெண் மறுக்கலாகாதென உட்கொண்டு, நீடுநினைந்து, சொற்களை அளவறிந்து கூறி அழகாக உரையாடி வந்தனர். அவர் திறம்பட மொழிந்து வருதலை நோக்கிய அரையன் உள்ளுக்குள் உவகை பூத்து, இன்னும் அவர் சொல்வன்மையை அறிய விரும்பி விளையாட்டுக் குறிப்பாகப் புன்னகை தவழும் முகத்துடன் புலவரை நோக்கி, 'அருந்தமிழ்ப் புலவீர், பாண்டியர் மகளைக்கொள்ளத்தக்க பெருமை சோழர்க்கு உளதோ ?' என்றான். உடனே புலவர், சோழருக்கும் பாண்டியருக்கும் உள்ள வேற்றுமையைப் புலப்படுத்து முகத்தான் அவ்விருவர் பரிமா, ஆறு, கொடி, ஊர் முதலியவற்றை எடுத்துக்கொண்டு,

‘கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானே
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே
ஊருக் குறைந்தநிகர் கொற்கையோ அம்மானே
ஒக்குமோ சோனாட்டைப் பாண்டிநா டம்மானே.’

என்னும் ஒரு பாவைப் பாடினர்.

உடனே பாண்டியன் புகழேந்தியாரைக் கடைக் கணிக்க அவர்,

‘ஒருமுனிவன் நேரியிலோ உரைதெரிந்த தம்மானே
ஒப்பரிய திருவிளையாட் டுறைந்தையிலோ அம்மானே
திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானே
சிவன்முடியில் ஏறுவதுஞ் செங்கதிரோ அம்மானே
கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே
பரவை படிந்ததுஞ் சோழன் பதந்தனையோ அம்மானே
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே.’

என்று பாண்டியன் தனிப்பெருமையைச் சிறப்பித்துப் பாடி முடித்தனர். அதுகேட்ட கூத்தர் மற்றொரு செய்யுளால் சோழன் வீரத்தைப் புகழும் பொருட்டு,

‘வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகிற் கிடான்கவசம்—துன்றும்’

எனக் கூறிச் சற்றுத் தாழ்க்கையில் புகழேந்திப் புலவர்,

‘வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.’

என்று அவ்வெண்பாவையே தொடுத்து முடித்துப் பாண்டியன் வீரத்தை உயர்த்தி மொழிந்தனர்.

கூத்தர் மனம் திடுக்கிட்டது. இதுவரை புகழேந்தியாரைப்போல அவருக்கு எதிர்ப்பாட்டுப் பாடினவர்களே இல்லை. அவர் சோணாடு முழுதும் தமது புலமையைத் தனியரசாகச் செலுத்திவந்தவர். தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலரென எண்ணியிருந்த கூத்தருக்கு இப்பொழுதுதான் 'கல்வி ஒருவர் பங்கன்று,' என்னும் உண்மை புலப்பட்டது. எனினும், புகழேந்திப்புலவர் தன்மை அவருக்குப் பிடிக்கவில்லை. ஒருபாட்டை ஒட்டியும் பாடி, மற்றொரு பாட்டை வெட்டியும் பாடித் தம் புலமையை வெளிப்படுத்தப் புகழேந்தியார் முயன்றதாக எண்ணினார். அதனால், அவருக்குப் புகழேந்தி மீது பகைமை உண்டாயிற்று. பாண்டியன் உள்ளம் மலர்ந்தது. கல்வி வீரர் இருவர் சொற்போர் புரிவது யாவருக்கே இன்ப மூட்ட மாட்டாது? எனினும், கூத்தர் குறிப்பை உணர்ந்த பாண்டியன் உடனே தன் மகளைச் சோழனுக்குக் கொடுக்கும் உடன்பாட்டை வெளியிட்டான். வந்திருந்த அனைவரும் களிநிரம்பினார். கூத்தரும் பெருமகிழ்ச்சி எய்தினர். பின்னர், மணநாள் கணிகனைக் கொண்டு குறிப்பிட்டுத் திருமுகம் எழுதி முடிந்தது. கூத்தருக்கும் பிறர்க்கும் பாண்டியன் நல்விருந் தளித்துப் பல பரிசில்களை வழங்கிக் களியாட்டு அயர்வித்தான். இச்செய்தி கேட்டார் யாவரும் இன்பக்கடலுள் மூழ்கினர்.

பின்னர்ச் சோழன் குலோத்துங்கன் தன்மணத்தின் பொருட்டு வேண்டிய பொருள்களை அமைக்கத் தொடங்கினன். சோணாடர் யாவரும் மணவினையைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பர். சோணாடு முழுவதும் இச்செய்தி பரவ,

ஆங்காங்குள்ள செல்வர்களும், புலவர்களும், வேளாளரும், வணிகரும், புரோகிதரும் மணநாளை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். அப்போது வேந்தர் பெருமானுன சோழன் தன் நாட்டிலுள்ள குடிகள் தாம் இறுக்கவேண்டிய இறையை ஈராண்டு வரையில் செலுத்தவேண்டுவ தின்றெனை எங்கும் பறையறைவித்தான்; 'இன்றுதொட்டு, மணவினை நடைபெறுவதாக,' எனத் தன் அமைச்சருக்குக் கட்டளை யிட்டான். அரசன் திருமாளிகையிலே நடைபெறும் எக்கொண்டாட்டமும் அவன் நாட்டிலே வாழும் குடிமக்களிடத்தும் கொண்டாட்டமாக நிகழும். ஏனெனில், மன்னவன் குடிகளுக்குத் தனது கோயிலில் சிறப்புக்கள் நடைபெறும் காலங்களில் எல்லாம் குடிகள் எல்லாரும் உண்டு களித்து உவகை பூப்பப் பலவகையாகப் பொன்னும் பொருளும் வழங்கி உதவி புரிவான்.

இவ்வாறு சோணுட்டிலே நிகழா நிற்பப் பாண்டி நாட்டிலே நடந்த ஏற்பாடுகளுக்கு ஓரளவே யில்லை. பாண்டிய நாடே மணம் நிகழிடமாக இருந்தமையால், அங்கே சோணுட்டினும் அதிக சிறப்பு நடைபெறும் என்பது சொல்லவேண்டுமோ? குமார குலோத்துங்கனும், அவன் ஐம்பெருங் குழுவும், எண்பேராயமுந் தங்குதற்குத் தக்கவாறு இடங்கள் வகுக்கப்பட்டன. 'எட்டி', 'காவிதி' முதலிய பட்டம் பெற்றவர்களும், மேழிச் செல்வரும், வணிகர் பெரு மக்களும் உறைதற்கு வேண்டியவாறு ஆண்டாண்டு இடங்கள் வரையறுக்கப்பட்டன. குறுநில மன்னர் வைகுதற்கு ஏற்ற இடங்கள் குறிக்கப்பட்டன.

வாழை, தென்னை, கமுகு முதலிய மரங்களடர்ந்த சோலைகளிலே வெயில் வெப்பத்தை ஆற்றிக் கொள்ளுதற்

காக மணற் குன்றுகளின்மேல் சிறு குடில்கள் வெட்டி வேரால் அமைக்கப்பட்டன. அக்குடில்களுக்குச் சந்தன மரங்கள் கால்களாக நிறுத்தப்பட்டன. அகநகரிலும், புற நகரிலும், வழிகளிலும் காவணங்களை அமைத்து, வெண் மணல் பரப்பி வைத்தார்கள். நிறைகுடங்களிலே தண்ணீர், குங்குமப்பூ, வெட்டிவேர் முதலியவற்றுடன் நறுமணத் தோடு தண்ணென் றிருந்தது. ஆங்காங்குப் பசுங்கொடி களைப் பந்தரின்மே லேற்றி வைத்தனர். அக்கொடிகளிலே சண்பகம் முதலிய மலர்கள் பூத்து மணங் கமழ்ந்தன. ஆங் காங்குத் தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன. அங் கெல்லாம் சோழன் சிறப்பையும், பாண்டியன் பெருமையை யும் விளக்குஞ் சித்திரவெழுத்துக்கள் இருந்தன. பரிசிலர் கூட்டம் வெள்ளம் போலப் பொங்கியது.

சோழன், உறையூரிலே தங்கி அரசுரிமையைச் செலுத் துதற்கு யாவரும் இன்மையின் தனது ஆத்தானப் புலவரா கிய ஒட்டக்கூத்தரை வருவித்து, அவரிடம் தான் மதுரைக் குச் சென்று மணம் புரிந்து உறையூருக்குத் திரும்பும் வரை அரசு புரியுமாறு விரும்பினான். அவரும் தம் மாண வன் திருமணத்தைப் பார்த்துக் களிக்க வேண்டுமென்னும் வேணவா உடையவரேனும், அதிகாரத்தில் விருப்புடைய ராக இருந்தமையானும், தக்கார் வேறு யாருமிலர் என்பத னாலும் அவன் விருப்பத்துக்கு இசைந்தார். பின்னர்க் குலோத்துங்கன் சேனைத்திரள் முன்னே செல்லப் பெரு மக்கள் புடைசூழ, மகளிர் பல்லாண்டு பாடப் பெருஞ் சிறப்புடன் மதுரையம்பதியை அடைந்தான்.

அவனை எதிர்கொண்டு பாண்டியன் வரவேற்று அவன் தகுதிக் கேற்றவாறு நன்மதிப்புடன் சிறப்புக்கள் செய்தான்.

பிறகு குலோத்துங்கனுக்கும், பாண்டியன் பாவைக்கும் திரு மணம் நிகழ்ந்தது. மணமகனையும் மணமகளை யும் பார்த்தார் அனைவரும் அவர் இருவரும் குலத்தாலும், மரபாலும், அறிவாலும், திருவாலும், அழகாலும், அன்பா லும் ஒத்திருத்தல் நோக்கிப் பெருமகிழ்வடைந்தனர். அவர் கள் இருவரும் ஒருவருக் கொருவர் உண்மையன்பு பூண் டார்கள். பாண்டி மாது சோழனையும், சோழன், பாண்டி யன் மகளையும் பார்த்தவுடன் ஓராவிற்கு இருகோடு தோன் றினாற்போல இருவருக்கும் உழுவலன்பு இருவாகத்தும் தோன்றுவதாயிற்று. அதனால் அவர்கள் பேரின்பம் உடையவராய் விளங்கினர். மணம்முடிந்த சின்னாட்களில் எல்லாரும் பாண்டியன், சோழன் ஆகிய இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர். பின்னர்க் குலோத்துங்கன் சோழநாட்டைச் சேரவேண்டிய நாளைப் பாண்டியற் குணர்ந்த அவனும் அதற்கிணங்கினன். 'நாளை, பாண்டியன் பாவை சோணாடு சேருவாள்,' என்ற செய்தி எட்டியதும், அவளிடம் விடைபெற்றுச் செல்ல மங்கையர் பல்லோர் புறப்பட்டனர். அவர்கள் எல்லோ ரும் அம்மாதரசியினிடம் சென்று அவள் அருமையையும், கல்வியையும், அறிவையும் வியந்து அவள் பிரிவுக்கு வருந் திப் புன்கணீர் சொரிந்தனர். பாண்டிமாதேவியும் கண்ணீர் உகுத்தாள்.

பிறகு, அச்செல்வியோடு சோணாட்டுக்குச் செல்வோர் இன்னின்னாரெனத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அச்செல் வியிற் பாண்டியன் புதல்வி, தன்னைப் பெற்ற நற்றாயை அடைந்து அவளிடம் தன்னோடு தன் தந்தைக்கு நிகரான புகழேந்திப் புலவரையும் அனுப்புமாறு வேண்டினள். அவ

ளும் தன் அருமைத் திருமகளின் உள்ளக் கருத்தைத் தன் கொழுநனுக்குக் குறிப்பிட்டாள். அது கேட்ட வரகுணன் புகழேந்தியாரைத் தருவித்து அவரை அன்பொழுகும் இன் முகத்துடன் பார்த்து, "ஐயனே, நம் நங்கை சோணாட்டுக்கு நாளைச் செல்வது தமக்குத் தெரியுமன்றோ?" என்றான். அதற்குப் புகழேந்தியார், அவ்வரசியின் பிரிவுக் காற்றாத நிலையிலிருந்தமையால், சிறிது வருத்தத்துடன், "ஆம்; தெரியும்," என்று பாண்டியனுக்கு விடையளித்தார். அப்பொழுது வழுதி, அவர் வருத்தத்தை உணர்ந்து "பெரும் புலவீர், நம் செல்வி தம்மைவிட்டுப் பிரிய வருந்துகின்றாள்; அவளுக்குத் தாங்கள் உசாத்துணையாக விருப்பின் அவள் கவலையின்றி இனிதாகக் காலங் கழிப்பாள். அன்றியும் தாய் தந்தையராகிய எங்கள் இருவருடைய பிரிவையும் தம்மால் மறந்தும் இருப்பாள் என்று எண்ணுகிறேன். ஆதலின், தாங்கள் அவளுடன் சென்று சிறிது காலம் சோணாட்டிலே உறைதல் வேண்டுமென்பது எனது விழைவு," என்றனன். அதுகேட்ட புலவர் மிகவும் மகிழ்ச்சியுடன், "அவ்வாறே ஆகுக. மன்னரேறே, நான் விரும்பிய ஒன்றையே தாங்கள் எடுத்து மொழிந்தீர்கள். ஆதலால், யாதொரு தடையுமின்றி நான் நம் பெண்ணரசியுடன் சென்று ஆங்குச் சிறிது காலம் தங்கி இந்நாட்டை அடைவேன்," என்றுரைத்தார். இதனைப் பாண்டியன் மகளுணர்ந்து கழிபேருவகை பூத்தாள். மறுநாள், பாண்டி அரசி குலோத்துங்கனுடன் சோழ நாட்டுக்குச் செல்வாளாயினள். புகழேந்தியாரும் உடன் சென்றார்.

சோழநாட்டைப் புகழேந்திப் புலவர் அடைந்ததைக் கண்ட ஒட்டக்கூத்தர் மனங் கலங்கினார். இனிப் புகழேந்தி

யால் தமக்குச் சிறிது குறைவு வரும் என்று அவர் எண்ணி ஞர். தாம் முன்போலவே தனிப்புலமை செலுத்த முடியா தென அவருக்குத் தெரிந்தது. தமக்கு ஒட்டிப் பாடுதல் ஒன்றிலேயே அதிக வன்மை இருக்கப் புகழேந்திப் புலவ ருக்கு ஒட்டிப்பாடுதல், வெட்டிப்பாடுதல் ஆகிய இருதிறத் திலும் பேராற்றல் இருப்பதை அவர் உணர்ந்தார். அத ஞல், எவ்வாறேனும் புகழேந்தியாரை ஒடுக்க வேண்டு மெனத் துணிந்தார். அவருக்குக் குலோத்துங்கனிடம் உள்ள செல்வாக்குக்கோ அளவில்லை. அதுகொண்டே தமது கருத்தை முடிக்க வேண்டுமென ஒட்டக்கூத்தர் உன்னி மெல்லெனச் சோழனுக்குப் புகழேந்திப் புலவர் செருக் குடையரென்றும், பாண்டியனையே சிறப்பிப்பவ ரென்றும், சோழரைப்பற்றி ஒன்றுமே அறியாதவரென்றும், அதனல் சோழமன்னர்பால் அவமதிப்புக் கொண்டிருப்பவர் என் றும், பாண்டியன் முன்னர்ச் சோழ வேந்தரை அவர் இழித் துரைத்தவை இன்றும் தமதுள்ளத்தை அன்று சொன்னற் போலச் சுடுகின்றன என்றும், குலோத்துங்கனுக்கு நஞ்சை இடுமாறு வெறுப்பை ஊட்டி வந்தார். பின்னர்ச் சின்னட் கள் சென்றதும், புகழேந்திப் புலவரைச் சிறைக்களத்தே உய்ப்பித்தார்.

சிறைப்பட்ட புகழேந்தியார் தமது தீவினையின் விளைவை எண்ணி வாளாவிருந்தனர். அவருக்குச் சிறைக் கோட்டம் காப்போரால் தரப்படும் உணவு பொருந்த வில்லை. தமிழில் இன்சுவை பெருக்கும் பாவலர், நாவின் அறு சுவையிலும் சிறிது பழகியவர். அதனல் அவருக்குத் துன் பம் மிக்கது. அத்துன்பத்தைத் துடைப்பது எவ்வாறென நினைந்து பார்த்தார். அவருக்குத் துண்ணென ஒரு நினைவு

உதித்தது. உடனே அதுதான் தக்கதெனக் கொண்டார். சிறைக்களம் குளத்துக்குச் செல்லும் வழிக்கரையில் இருந்தது. அங்கிருந்து குளத்துக்குச் செல்வோர் அனைவரையும் பார்த்தற்கு இயலும். ஆதலால், புலவர் பெருமான் பல கணி வழியாக நீர் திரட்டச் செல்லும் பாவையருள் கல்வி அறிவுடையராகக் காணப்பட்ட இரண்டொருவரை விளித்து அவருக்குப் பாட்டு எழுதிக் கொடுப்பதாகக் கூறினார். அவர்களும் அதுகேட்டு உவகை கூர்ந்து, அங்ஙனமே புலவரைச் செய்யும்படி வேண்டிக் கொண்டனர். அதனால், தமது கருத்து நிறைவேறும் என்றறிந்த புலவர் பாரதம் போல இனிய கதை யில்லையெனத் தெரிந்து, அதிலுள்ள சில கதைப் பகுதிகளை மாதர் மனோபாவனைக்கு இசைந்த வாறு வெண்செந்துறையில் எளிதாகப் பவளக்கொடிமாலை, அல்லியரசிமாலை, புரந்தரன்களவு முதலிய நூல்களாகப் பாடினார்.

அந்நூல்களைப் படித்துப் படித்து இன்புற்ற அரிவையர் அவருக்கு அருமையாகப் பலவகைப்பட்ட சிற்றுண்டிகளைச் சமைத்துக் கொணர்ந்து கொடுத்தனர். அன்றியும், அவருக்கு வேண்டியபடி முனைமுரியாத தூய அரிசியும், தீம் பருப்பும், புத்துருக்கு நெய்யும், வாழை, கத்தரி, முருங்கை, வெண்டை முதலிய காய் கறிகளும், பாறைத் தயிரும், ஆவின்பாலும் கொடுத்து வந்தனர். இவற்றை யெல்லாம் வயிறார உண்டு தேக்கெறிந்து நின்றார் செழுங்கவி வாணர். சிறைக்கோட்டத்துள்ள காவலாளிகள் பலரும் மிகுந்தவற்றை உண்டு வந்தமையான் புலவருக்குக் காவலராக இருத்தலின்றி அவர்தம் ஏவலராக இருந்தனர்.

இவ்வாறிருப்புழி, ஒருநாள் சோழன் உலாப்போந்தான்.

போந்தவன் சிறைக்கூடத்தேயிருந்து தனது உலாவைப் பார்த்துக் கொண்டிருந்த புகழேந்திப் புலவரைக் கண்ணுற்றுத் தன்னுடனே போதருங் கூத்தருக்கு அவரைச் சுட்டிக் காட்டி, ‘இவர் பெரும்புலவர் அல்லரோ?’ என்று வினவினன். அவன் வினவியவுடனே கூத்த முதலியார் சோழனை நோக்கி,

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன், வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன், கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன், வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோன் உதயத்திற் றார்மன்னனே.

என்னுஞ் செய்யுளைக் கூறித் தம்மை மேம்படுத்தி அவரை இழித்தனர். அது செவியிலே நுழையப்பெற்ற புகழேந்தியார் சோழனை உற்று நோக்கி, ‘மன்னர்மன்ன, இதனை நான் ஒட்டிப் பாடவோ? அன்றி வெட்டிப் பாடவோ? விடைதருக,’ என்றனர். குலோத்துங்கன் அவரைப் பார்த்துக் கூத்தர் பாலுள்ள அன்பின் மிகுதியாலும், புலவருக்கு விடையிறுக்கும் உரிமை தரல் வேண்டுவது அரச முறையாதலாலும், ‘ஒட்டியே பாடுக,’ என்றுரைத்தான். உடனே புகழேந்தியார்,

மான்அவன் நான்அந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கான்அவன் நான்அந்த எரியுந் தழன்முன் கனைகடலின்
மீன்அவன் நான்அந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தான்அவன் நான்அக் கதிரோன் உதயம்நற் றார்மன்னனே.

என்னுங் கவியைக் கூறிக் கூத்தர் முகம் கூம்பச் செய்தனர்.

ஒட்டக்கூத்தர் புகழேந்தியாரைச் சிறையிட்டிருந்த நிலைச் சோழன் குலோத்துங்கன் தெரிந்துவைத்தும், அவரைச் சிறைவீடு செய்யக் காலந்தாழ்த்து வந்தனன். அவன்

அங்ஙனம் இருந்ததற்குக் காரணம் புகழேந்திப் புலவரிடம் அவனுக்கு இருந்த வெறுப்பேயாம். அவ்வெறுப்பு ஒட்டக்கூத்தரால் முளைத்து அவன் மனைவியாகிய உலோகமா தேவியின் புகழுரையால் கிளைப்பதாயிற்று.

ஒட்டக்கூத்தர், சோழன் அவைகளத்தைப் பரிசு கருதிப் போதரும் புலவர் பலரையும் ஆராய்தல் வழக்கம். அவர்தம் புலமையைத் தேரும் பொருட்டுக் கடுமையான கேள்விகளைக் கேட்டு, அவர் விடையிறுத்திலராயின் அவரையெல்லாம் சிறை செய்வர். பின்னர், நாமகள் நவராத்திரி விழாவில் சிறையிட்ட புலவரை வருவித்து, மீண்டும் சில வினாக்களை விடுவிப்பர்; விடைபகர இயலாதாரை இவ்விருவராகக் குடுமியோடு குடுமி முடிந்து, கலைமகள் திருமுன்னர் அவர்தங் குடுமிகளை மயிர் வினைஞனாற் களைவித்து, அவரை அவமானப் படுத்துவர். இத்தகைய கல்விச் செருக்கு கூத்தருக்கு உண்டாயது சோழநாட்டிலே அவருக்கிருந்த செல்வாக்கினாலேயாம். இவ்வழக்கப்படி கூத்தரால் சிறைபட்டவர் பலரும் புகழேந்தியார் உடனுறைந்தனர். அவரையெல்லாம் ஒருநாள் அன்பு கனிந்த நெஞ்சினராகிய புகழேந்திப் புலவர் பார்த்து, இரக்கங்கொண்டு, 'அந்தோ! ஏதோ வயிற்றின் கொடுமையால் பாட்டிசைத்துப் பரிசு பெற வந்த இவர்களை அம்மாபாவியாகிய கூத்தன், பேய்க் கூத்தாட்டுக் காண்கின்றானே! இவர்கள் பெருங் கல்வியிலராயின் சிறைப்படற் குரியரோ? சிறிது கற்றதனால் சிறையிடப் பெறுவரேல் ஒன்றுங் கல்லாதார் உயிரிழக்க வேண்டும்போலும்! கூத்தன் களிக்கூத்துங் குலோத்துங்கன் செங்கோலும் அழகு! அழகு!! இனி இத்தகைய தீமை வாராவண்ணம் தடுக்க நம்மால் இயன்றவரை முயல

வேண்டும். கூத்தன் கொட்டம் அடங்கவேண்டும்,' என்று நினைத்து, ஆங்குள்ள புலவர் தம்முள் நுண்ணறிவுடையா ராகவுந் தெள்ளியராகவும் இருந்த அறுவரை வகுப்புவாரி யாகத் தேர்ந்தெடுத்து அவருக்கு அல்லும்பகலும் இலக்கிய இலக்கண நுட்பதிட்பங்களை உணர்த்திவந்தார். அவர்க ளும் சில திங்களில் சிறந்த புலவர் பெருமக்களாகத் திகழ்ந் தனர்.

சிலர், ஒட்டக் கூத்தர் செய்கையை ஆதரித்தலும் உண்டு. அவர் உண்மை அறியாதவரே யாவர். பெருங்கவி களோடு என்றும் புன்கவிகளும் இருப்பர். அவரை உலகம் அறிந்து கொள்ளவேண்டுமே யன்றி அவரை ஒறுத்தல் அறனன்று. மொழிவளர்ச்சியும் அதனால் மட்டுப்படும். தக்க புலவரை ஆதரிக்கவேண்டுவது அரசனுக்கும், பொது மக்களுக்கும் உரிய கடமையாம். அரசன் பெருமைப்படுத் தினால் அனைவரும் புலவர் பெருமையை அறிந்து மதிப்பர். ஆதலின், என்றுஞ் சிறிது கல்வியுடையாரை இகழ்ந்து அவரை அடக்குதல் நன்றன்று. எனவே, கூத்தர், பிள்ளைப் பாண்டியன், வில்லி முதலியோர் செய்தனவாக வழங்கும் செய்கைகள் கொள்ளப்படுவன வல்ல.

ஐப்பசி பிறந்தது. கூத்தர் கலைமகள் நவராத்திரி விழா வைச் சிறக்கச் செய்வதிலே முனைந்து நின்றார். பொருள் கள் எல்லாம் தொகுக்கப்பட்டன. காரணம் இடப்பட்டது. இறைவிக்கு விழாமண்டபம் சமைக்கப்பட்டது. பந்தரின் அழகும், மண்டபத்தின் கோலமும் பார்ப்பவர் கண்களைப் பறித்தன. இறைவி திருக்கோலம் எல்லாவற்றிலுஞ் சிறந்து இலங்கிற்று. விழாத்தொடங்கி இனிது நடைபெற்று வந் தது. அப்பொழுது கூத்தமுதலியார் சிறையிடுவித்த புல

வருள் புகழேந்தியார் நீங்கலாக ஏனையோரைத் தருவித்தனர். அவருள் முதன் முதல் புகழேந்தியாரால் புலமை நிரம்பப் பெற்ற குயவன், அம்பட்டன், கருமான், தச்சன், வண்ணான், வேளாளன் ஆகிய இவரையே சிறைக் கோட்டக் காவலர் புகழேந்தியார் விழைந்த வண்ணம் அனுப்பினார். அப்போது கூத்தர் புலமைக்கோலம் நிரம்பி நின்று, முன்னே கொண்டு வந்து நிறுத்தப்பட்ட குயவனை ஏறிட்டுப் பார்க்க, அவன் கும்பிடின்றிச் செருக்கி நிற்றலை நோக்கி, பெருமிதம் மிக்க குரலுடன்,

‘மோனை முத்தமிழ் மும்மத மும்மொழி
யானை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?’

என்று இடியிடித்தாற் போலக் கூறினார்.

அதற்கு அவன் சிறிதும் அஞ்சாது அவரை நேரே நோக்கி,

‘கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையுஞ் செய்யும் அங்குசப் பையல்யான்.’

என்று விடை யிறுத்தான். அதில் யானையின் மதத்தை அடக்கும் அங்குசம் போன்றவன் யான் என்றும், அழகிய குசப்பையல் யான் என்றும் இருபொருள் அமைந்திருத்தலைக் கண்டு கூத்தர் வெட்கி, அவனை ஒரு புறம் நிற்குமாறு பணித்தார். உடனே கண் பொட்டையான அம்பட்டன் அவர் முன்னேவந்து கையெடுக்காது நின்றான். அது நோக்கிய கூத்தர் வெகுண்டு,

‘விண்பட்ட கொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்?’
என்றனர்.

என்றதும், அந்நாவிதன் நாவிதம் பட,

'கண்பொட்டை யாயினும் அம்பட்டன் நான்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவேனே.'

என்று பாடினன். அவனையும் அப்புறம் செல்ல விடுத்துக் கூத்தர் மூன்றாவதாக வந்த இருப்புக்கொல்லனை நோக்கி, 'நீ யார்?' என வினவினர்.

அவனும் கூத்தரை மதியாது, அவர் கேட்ட கேள்விக்கு விடையாக,

'செல்வன் புதல்வன் திருவேங் கடவன் சகத்குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே.'

என்றான். கூத்தருக்குச் சினமூண்டது; தீயெழ விழித்தார்; உடம்பெலாம் வியர்த்தார். அவனையும் போக விடுத்து மற்றவனை அழைக்கத் தச்சன் வந்து எதிரே நின்றான். அவனையும் யாரெனக் கூத்தர் வினவ அவன்,

'சொன்னசந் தக்கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யாதென்ற போதில் எதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த வாய்ச்சியினால்
கன்னசந் தங்களி லேகவி யாப்பைக் கடாவுவனே.'

என்றொரு செய்யுள் பாடினான்.

இதைக் கேட்ட கூத்தர், 'இஃதென்ன! வியப்பாய் இருக்கின்றது! பயல்கள் எல்லாரும் அச்சம் சிறிதுமின்றிச் செய்யுள் கூறத் தொடங்கிவிட்டனர்,' என்றுள்ளம் வியர்த்துப் பிறிதொருவனைத் தருவிக்க, வண்ணான் வந்து இறுமாந்து நின்றான். அவனைக் கவிஞர், 'நீயாரடா? ஆணவப் பேயே,' என்று வினவினர். அதற்கு அவன்,

'சேலேய் விழிமடவா ரிற்செங் கால்அன்னஞ் சேர்பழனப்
பாலேய் பணவயிற் கூத்தநின் போலியார் பார்புனைந்த
நூலேய் துகளகலத் தூய்தாக்கு நோன்மை நுவல்வதல்லால்
மேலேய் தமிழ்ப்புல வோர்என்னை யென்ன விளம்புவதே?'

என்னும் பாட்டைப் பாடினான். அதன்கண் கூத்தர் செங்குந்தர் குலமாதலையுந் தான் வண்ணான் ஆதலையும், நூல் நெய்வோர் செங்குந்தரும், அதிலுள்ள மாசை ஒழித்துத் தூய்மை செய்வோர் வண்ணாரும் ஆதலின் கூத்தரது பாட்டிலுள்ள மாசை நீக்கித் தூய்மை செய்யவல்லன் தானே என்பதும் குறிக்கப் பட்டிருத்தலைக் கண்ட புலவர், 'அப்பா, இவன் மாதுட்டன்,' என்றெண்ணி அவனை விடுத்தொழிந்தனர். பின்னர், எதிர் நின்ற வேளாளனை நோக்கி, 'மகாவித்துவானாகிய நம்முன்னர் நீ புலவனென வருதல் அழகோ?' என்று கேட்டனர். அதுகேட்ட வேளாளன் அவரை நோக்கி,

'கோக்கண்ட மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்ட கொட்டியும் பூவா தொழிந்தில பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோகவி பாடிய பாவலரே.'

என்னும் பாட்டால், 'தாமரை பூத்தலைக் கண்டு அதனிற் றாழ்ந்த கொட்டி பூவாது நிற்றல் இல்லை; மூவேந்தரைப் பார்த்துக் குறுநில மன்னர் கடல்புகுந் தொளித்திலர்; பெரும்புலவராகிய நுங்கவியைக் கண்டு பாவலர் யாரும் பதுங்கமாட்டார்; இஃது உலகவியற்கை,' என்னும் உண்மையை விளக்கினர். அன்றியும் வேளாளன், கூத்தரை இம்மட்டோடு விடலாகாதெனநினைந்து அவரைப் பார்த்து, "ஐயா, கவிச்சக்ரவர்த்தியே, நீவிர் சோழமன்னன்மேற் பாடிய 'அண்டத்துப் பரணி' என்னும் நூலில்,

இவ்வண்டத்தை நகராகவும், சக்கரவாளகிரியை மதிலாகவும், அதற்குட்புறத்தே யுள்ள கடலை அகழாகவும், பூமியின் நடுவணுள்ள மேருமலையைக் கோட்டைக் கொடிக்கம்பமாக வும் உருவகப்படுத்தி, மதிலின் புறத்திலே இருப்பதாகிய அகழை அதனகத்தே இருப்பதாகக் கூறியது குற்ற மன்றோ? இதனை ஆராய்ந்து கூற இயலாத நீர் எம்போன்ற புலவரை அடக்கக் கருதித் தகாதன செய்தல் தக்கதன்று," என இடித்துரைத்தனன்.

அதைக் கூத்தர் கேட்டலும் அவரைப்பற்றி யிருந்த அகங்காரப்பேய் கால்விட்டு ஓடியது. அவர் மனம் தாழ்ந் தது; அவன் சொன்னவை யாவும் உண்மையேயெனத் தெளிந்தார்; பிறகு அவனுக்கு மிக்க பரிசில் வழங்கி விடுத்து, மற்றவரையும் வருவித்து மிக்க பரிசளித்து அனுப்பினர்; அன்றுமுதல் இக்கொடிய வழக்கத்தையும் அறவே விடுத்தார். ஆனாலும், புகழேந்தியாரை மட்டும் சிறைவீடு செய்திலர்; இவை யனைத்தும் புகழேந்தியாரால் நிகழ்ந்தனவென்று நினைந்து அவர்மீது மேலும் பகை கொண்டிருந்தார்.

நாட்டிலே நடப்பது ஒன்றும் அந்தப்புரத்துக்கு எட் டுவதில்லை. அரசியற் செய்திகள் அந்தப் புரத்தே இருக்கும் அரசிக்குத் தெரிவது அருமை. மணமுடிந்த இரண்டு மூன்று திங்கள் வரையில் சோழன் தேவி, வேட்டகத்து ஒழுக்கங்களையே நோக்கிக்கொண் டிருந்தனள்; நாடோறும் வரும் விருந்தினருடன் உரையாடுவதிலும் ஆள், அடிமை முதலியவற்றைச் சீர்திருத்தலிலும், குலோத்துங்கனுடன் மகிழ்வோடு குலாவிச் சோலைகளிலும், வாவிகளிலும் விளை யாடுதலிலும் பொழுது போக்குவள். புத்தகத்தைத் தொடு

வதற்கும் அரசிக்கு நேரமில்லை. அதனால், அவள் சோணாடு சேர்ந்த பின்னர் இரண்டொரு முறை புகழேந்தியாரைப் பார்த்ததன்றிப் பின்னர்ப் பார்க்கவேயில்லை. ஆனால், புலவர் நன்குமதிப்புடன் எல்லாத் துப்புரவுடனும் இனிதுறைகின்றாரென அவள் எண்ணியிருந்தாள். புலவர் சிறைக்களத்தே வைக்கப்பட்ட செய்தி மாதேவிக்குத் தெரிந்திலது. இவ்வாறிருப்பச் சிறையினின்றும் விடுபட்ட புலவர் ஒருவர் எவ்வாறேனும் புகழேந்தியார் சிறைப்பட்டிருத்தலைத் தேவிக்கு உணர்த்த வேண்டுமெனத் துணிந்து, செவ்வியறிந்து செப்பி விட்டனர். இதனை யறிந்த அரசி பெரிதும் வெகுண்டாள். அவள் கண்கள் சிவந்தன; புருவம் நெரிந்தது. 'இத்தகைய கொடுமையைப் புலமைக் காய்ச்சலால் ஒட்டக் கூத்தர் இழைக்க மன்னவன் இடந் தந்தனனே,' என்று வேந்தன் மேல் சீற்றங் கொண்டாள். அவளுக்கு உள்ளம் வெதும்பியது; 'புகழேந்தியார் யாது நினைப்பாரென,' வாடினாள்; 'அவர் என்னென்ன இன்னலை அடைந்தனரோ,' வென எண்ணி இரங்கினாள்; மனம் அழுங்கினாள்; உடனே தன் தோழியை அழைத்து, 'அடி வயந்தமாலை, நமது அந்தப்புரத்தின் பொற்கதவைத் தாழிடுக; மன்னவன் நமது உவளகம் புகாதவாறு தடை செய்க,' என்று கட்டளையிட்டுத் தனியாக மஞ்சத்தின்மீது சாய்ந்து பாவைபோல் செயலற்றுக் கிடந்தாள்.

சிறிது நேரஞ் சென்றதும், குலோத்துங்கன், தேவியின் அந்தப்புரத்தை அடைந்தான்; அப்போது உவளகம் அடைக்கப்பட்டிருத்தலைக் கண்டு பல முறை கைம்மலர் சிவக்கத் தட்டினான்; எவரும் கதவந் திறப்பாரில்லை; ஏதேதோ செப்பினான்; ஒன்றும் தேவி செவியில் நுழையவில்லை

பின்னர் வேந்தன் அந்தப்புரம் விட்டுத் தன் அரண்மனையைச் சேர்ந்து தேவியின் ஊடலுக்குக் காரணம் யாதெனை ஆராயலுற்றான். அரசர் தேவியர்க்கு யாதேனும் குறை நேர்ந்தால் அவர்கள் கதவடைத்தல் அக்காலத்து வழக்கம். அவ்வூடலைத் தீர்ப்பதற்குப் புலவர், பாணர் முதலியோர் செல்லுவர்.

ஆதலால், மறுநாள் சோழன் தன் அருமை ஆசிரியராகிய ஒட்டக்கூத்தரை வருவித்து, தன் தேவியின் பிணக்கினை எடுத்து மொழிந்து, அவள் கோபத்தைத் தணிப்பிக்குமாறு அவரை அவளிடம் செலவிடுத்தான். அவரும் உடனே அந்தப்புரஞ் சேர்ந்து, அடைக்கப்பட் டிருக்குங் கபாடம் அருகே நின்று,

'காத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன்வந்தான்
இரத்துங் கபாடம் இனித்திறப் பாய்பண்டு இவன்அணங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடந் திறந்திட் டுண்டுஇலங்கா
புரத்துங் கபாட புரத்துங் கல்யாண புரத்தினுமே.'

'நானே இனியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்துவி டாய்செம்பொன் மாரிபொழி
வானே றனைய இரவி குலாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்கும்நின் கையித ழாகிய தாமரையே.'

என்னும் இனிய செய்யுளால் தேவியின் அழகையும், அவருக்கு வேந்தன்பால் இருக்கும் காதன்மையையும், குலோத்துங்கன் சிறப்பையும் அமைத்துப் பாடினர். இது கேட்ட அரசி தோழியை விளித்து, ஆங்குப் பாட்டிசைப்பார் யாரெனக் கேட்க, அவள் ஒட்டக்கூத்தரென உரைத்தனள். அதைக் கேட்டவுடனே கொதித்து, 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் இடுக,' என்றனள்.

அவ்வாறே தோழியும் இரட்டைத் தாழிட்டு நன்றாக இறுக்கினாள். ஒட்டக்கூத்தர், அரசிக்குத் தன் மாட்டுள்ள வெறுப்பை அறிந்து நாணி, வேத்தவை குறுக்கிக் கோமகனுக்கு நிகழ்ந்தவற்றை விளம்பினர்.

சோழன், 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்,' என்று கூறிய தன் கருத்து, புகழேந்தியார் சிறைவீடேயாகும் எனத் தெளிந்து, அவரை உடனே சிறைவீடு செய்து தன் முன் அழைத்து வரும்படி ஆணையிட்டான். ஏவலாளரும் அங்ஙனமே செய்யப் புகழேந்திப் புலவரும் புரவலன் முன்னர்ப் போந்தனர். அரையன் அவரை ஓர் உயரிய இருக்கையிலே அமர்வித்துத் தான் தெரிந்தும் தெரியாதும் இழைத்த குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருளுமாறு குறையிரந்து வேண்டினன். புலவர், அவனை நோக்கி, "சோழர் பெருமானே, இதுபற்றிக் கவலை வேண்டா; இறைவன் செயலே யாகும். எஃது எக்காலத்து நிகழுமோ அஃது அக்காலத்து நிகழ்ந்தே தீரும். 'ஊழிற் பெருவலி யாவுள?' ஆருயிர் 'நீர் வழிப்பட்ட புணை' போல ஊழ்வழிப் பட்டதே. இது நிற்க, இப்பொழுது என்னைத் தாம் அழைத்த காரணத்தை அறிவிக்க வேண்டுகின்றேன்," என்றார். சோழன் அவர்தம் அடக்கத்தையும், இனிய குணத்தையுங் கண்டு, அவரைப் பார்த்து, "புலவர் பெருமானே, இப்பொழுதுதான் தமது பெருந்தகைமையை அறிந்தேன்; அரசி கூறியவை அனைத்தும் மெய்யெனத் தெளிந்தேன். இதுகாறும் நான் தம்மைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணம் மிகவுந் தவறுடைத்து," என்று மதுரமாகப் பேசினான். பின்னர் மன்னன், புலவருக்குத் தேவியின் ஊடலைக் கூறி, அவரை அவளிடம் செல்லுமாறு வேண்டினன்.

அவரும் அதற் கிசைந்து, உடனே அந்தப்புரம் குறுகி வாயி லிலே நின்று,

இழையொன் றிரண்டு வகிர்செய் தவற்றொன் றிணையுமிடை
குழையொன் றிரண்டுகட் கொம்பனை யாய்கொண்ட கோபந்தவிர்
மழையொன் றிரண்டுகை மானப ரன்கண்டன் வாயில் வந்தால்
பிழையொன் றிரண்டு பொறுப்பதன் றோகடன் பேதையர்க்கே.

தீபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றான்நின் திருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாத்துநின்ற
கோபந் தணிஅன்ன மெளளி தோகங் குடிப்பிறப்பே.

என்னும் வண்டமிழ்ப் பாடல்களால் பாண்டியன் மகளின் அருங்குணத்தைப் பாராட்டிக் கதவைத் திறக்கும்படி அரசியை வேண்டினார். அவற்றைச் செவிமடுத்த அரசி வயந்தமாலையால் வந்தவர் புகழேந்தியார் எனத்தெரிந்து உடனே கபாடந் திறப்பித்து, புலவர் எதிர்வந்து அவரைக் கட்டித் தழுவிப் புலம்பினாள். புலவர், சிறு குழவிபோல வருந்திய அரசிக்கு ஆறுதல் கூறித் தாம் சிறைக்கோட்டம் புக்கதும், நங்கைப் பாட்டுப் பாடியதும், புலவரைப் பயிற்று வித்ததும், கூத்தர் செருக்கைக் குலைத்ததும் முறைமை யாக எடுத்திசைக்கப் பாண்டியன் மகள் பேருவகை பூத் தாள். அதுமுதல் புகழேந்தியார் சோழ மன்னன் அவைக் களப் புலவராய் அமர்ந்ததோடு கூத்தரினும் நன்மதிப் புடையவராய் விளங்கினார். குலோத்துங்கனும் தன் தேவி யின் ஊடலைத் தவிர்த்து, தான் அறியாது புரிந்த குற்றங் களைப் பொறுக்குமாறு தேவியை வேண்டினான்.

ஒரு நாள் அரசனும் தேவியுஞ் சொற்கேட்டான் ஆடி னார். அப்பொழுது புலவர் அங்கே இருந்தனர். குலோத்

துங்கன் ஆட்டத்தில் தோற்றான்; தேவியே வென்றாள். அஃ தறிந்த புகழேந்தியார் தேவியை வியந்து,

பழியும் புகழு மெவர்க்குமுண் டாம்இந்தப் பாரிலுனக்கு
அழியுஞ் சிலையுங் கயலுமென் றோஅக ளங்கதுங்க
மொழியும்பொழு தெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திரண்டு
விழியும் புருவமு மாகிஇப் போதுன்னை வெல்கின்றவே.

என்று பாடினார்.

இங்ஙனம் சிறிது காலஞ் சென்றதும், புகழேந்திப் புலவரும் சோணாட்டை விட்டுப் பாண்டி நாட்டுக்குப் போக எண்ணினார். அவருக்குச் சோழநாடு அத்துணை இன்பமாகத் தோன்றவில்லை. செல்வழி மள்ளுவநாட்டை ஆளும் சந்திரன் சுவர்க்கியைக் கண்டார். அவனிடம் செல்ல அவ் வேந்தல் அவரைப் பெரிதும் போற்றி, ஆதரித்துத் தன் நகரிலேயே தங்கியிருக்கும்படி மிகவும் வேண்டினன். அவன் வேண்டுகோளுக் கிசைந்து, புலவர் அந்நாட்டிலே சிறிது காலம் கழிக்க எண்ணி, அங்கே அமர்ந்து இனிது உறைவாராயினர்.

சந்திரன் சுவர்க்கி ஒருநாள் புலவரை அண்மி, 'பாவலர் வேந்தே, பாரதத்திலேயுள்ள நளன் கதையைச் சுருக்கமாகப் பாடிமுடித்தால் எல்லாரும் தமது நாப்புலமையை உணர்வர்,' என்று கூறினன். புலவர் பெருந்தகையும் அம்மன்னவன் செவ்விய உள்ளத்தைப் பாராட்டி அவன் பெருமையும் உலகுள்ளளவும் நிலைபெறவேண்டுமென நினைந்து, நளன் கதையை நானூற்றுச் சில்லறை வெண்பாக்களால் சொற்சுவை, பொருட்சுவை சொட்டி வழியப் பாடி முடித்தார். அவ்வினிய அரிய நூலிலே அமைந்துள்ள கருத்தழகும், ஓசையினிமையும் கேட்போர் மனத்தைப் பிணிக்கத்

தக்கன. அதிலே மள்ளுவநாட்டு மன்னனும் சந்திரன் சுவர்க்கியின் நன்றியையும் பாராட்டி ஆண்டாண்டுச் செய்யுட் புனைந்தனர். அதிலுள்ள அரும்பெரும் பாடல்கள் சிலவற்றைத் தாலிபுலாக நியாயமாக ஈண்டுத் தருவோம். இவற்றைக் கொண்டு பிறவற்றின் சுவையையும் படித்துணர்க.

## சந்திரன் சுவர்க்கியைப் பற்றியது

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி.

## அவையடக்கம்

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினூற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

## திருமாலைக் குறித்தது

நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

## தமயந்தியின் அழகு

அழகு சுமந்திளைத்த ஆகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்தீபம் மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு.

## செஞ்சுடர் மறைவு

வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய் அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

## நளன் தமயந்தியைப் பிரிதல்

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தங் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்.

இச்சிறந்த காப்பியத்தைச் சந்திரன் சுவர்க்கி அவைக் களத்தே புகழேந்திப் புலவர் அரங்கேற்றினர். அவர் அந் நனம் அரங்கேற்றிப் பொருளுரைத்து வருகையில், ஒவ் வொருவரும் பாட்டுக்களின் அருமை பெருமைகளை வியந்து புலவரைக் கொண்டாடினர். சந்திரன் சுவர்க்கியும் பேரின் பம் அடைந்து, புலவர் பெருமானுக்குத் தக்க பரிசில்களை அவர் வெறுக்குமாறு வழங்கினன். இதனால் பெரும்புகழ்ச் சியிலே தலைதூக்கி நின்றனர் புகழேந்திப் புலவர். சிறிது காலஞ் சென்றதும் புகழேந்திப் புலவர் பாடிய நளவெண் பாவின் விஞ்சிய சுவை எங்கும் பரவிற்று. சோணாட்டிலும் பலர் அதன் அருமை பெருமைகளை வியந்து கொண்டாடு வாராயினர். அதனால் குமார குலோத்துங்கனும் அவன் கற்பிற் சிறந்த மாதேவியும் புகழேந்திப் புலவர் நளவெண் பாப் பாடிய செய்தியை அறிந்து அக மகிழ்ந்தனர். அவ ரைத் தம் நாட்டுக்குத் தருவித்து அவரால் அந்நூலை அரங் கேற்றுவிக்கக் கருதிச் சோழன் அவருக்குப் பன்முறை

திருமுகம் விடுத்தனன். அவன் தேவியும் அவர் வருகையைத் தான் நாடி நிற்றலை அறிவித்தாள். புலவருக்குக் கூத்தர் குணம் தமக்குப் பொருந்தாமையால் அங்குச் செல்ல ஒருப்பாடு இல்லையெனினும் அரசன் அரசியாகிய இருவருடைய வேண்டுகோளையும் பன்முறையும் மறுத்தற் கியலவில்லை. அதனால், மள்ளுவநாடனிடம் விடைபெற்றுக் கொண்டு உறையூரை அடைந்தனர்.

சோழன் அவர் வருகையைப் பெரிதும் போற்றச் சிறப்புக்கள் செய்தான். அரசியும் அவரை விரும்பி ஏற்று விருந்தளித்தாள். பின்னர்த் தாம் பாடிய நளவெண்பாவி லுள்ள சில பாடல்களைப் புலவர் சொல்லக் கேட்ட அரசி, சாலவும் இன்புற்று, அந்நூலைச் சோழன் அவையில் அரங் கேற்றுவித்தல் வேண்டுமென்னுங் கருத்தைக் குமார குலோத்துங்கற்கு நினைவுறுத்தினள். அவ்வண்ணலும் அதற்கிசைந்து நன்னாள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அரங் கேற்றத்துக்கு வேண்டும் சிறப்புக்களை யெல்லாங் குறைவற முடிப்பித்தனன்.

பின்னர்க் குறித்த நாளில் நளவெண்பா அரங்கேற்றம் செய்யப் பெறுவதாயிற்று. அப்போது அவைக்களத்திலே புலவர் பல்லோர் நிரம்பி யிருந்தனர். ஒட்டக்கூத்தரும் வீறு டன் அமர்ந்திருந்தனர். புகழேந்தியார் நூற்பொருள்களை எடுத்து மொழிந்து வருங்காலத்து, அனைவரும் நவரசம் ஒழுகும் வெண்பாக்களைக் கேட்டுக் கேட்டுக் களிப்பு மிகு தலைக் கண்ட ஒட்டக்கூத்தருக்குச் சிறிது அழுக்காறு உண்டாயிற்று. தம்மினும் புகழேந்தியார் உயர்ந்து விடு வரோவென எண்ணி உள்ளம் ஒடுங்கினர். அதனால், அவர்

நளவெண்பாவிலே குற்றமென்று சிலவற்றை ஆங்காங்குக் கூறத் தொடங்கினர். புகழேந்தியார்,

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.

என்னுஞ் செய்யுளைக் கூறிப் பொருள் விரிப்புழி, கூத்தர் புகழேந்தியாரை நோக்கி, 'ஐயா, புலவரே, மல்லிகையை வெண்சங்காகவும், வண்டை ஊதுவோனாகவும் நீர் உருவகஞ் செய்தது பொருந்தாது. ஏனெனில், உலகத்துச் சங்கநாதஞ்செய்வோர் அதன் கீழ்ப்புறத்தே வாய் வைத்தூதுவர்; வண்டோ மலரின் மேலிருந்தே ஒலி செய்யுமாதலின் என்பது. ஆகவே, இவ்வருணனை முற்றும் தவறு,' என்றனர். அதனைப் பொறுமையுடன் கேட்ட புலவர், கூத்தரை நோக்கி, "புலவரே, : நீர் 'எல்லியம்போ திருஞ்சிறைவண்டெம்பெருமான் குணம்பாடி மல்லிகைவெண் சங்கூதும் மதிலரங்க மென்பதுவே,' என ஆழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரத்தை அறிந்திலீர் போலும். 'நாம் சைவராதலின் புறச் சமயத்தார் நூல்களைக் கையாலுந் தொடோம்' என்பீராயின், 'மல்லிகைப் போதில் வெண்சங்கம் வண்டூத' என்னுந் திருச்சிற்றம்பலக் கோவையாரை யேனுங் கண்டிருப்பீரன்றோ! அப்பெரியார் திருவாக்குக்களுக்கும் இங்ஙனமேகுற்றங் கூற முன் வருவீரோ?" என்று கூறக் கூத்தர் அடங்கினர். பின் 'திங்கட் சுடர் பட்டுக் கொப்புளங் கொண்ட குளிர்வானை' என்ற அடிகளைக் கூறுகின்றபோது, கூத்தர், 'கொப்புளமாயின் சீ வடியவேண்டுமே!' என்றனர். என்னலும் புகழேந்தியார், 'ஆம், பனிநீர் வடிகின்

றதே!' என்றனர். இவ்வாறெல்லாம் சில குற்றங்களைக் கூத்தர் எடுத்துக் காட்டப் புலவர் அவற்றுக்கெல்லாம் தக்க விடையிறுத்துத் தம்புகழ் நிறுவினர். அனைவரும் இன்பக் கடலில் ஆடினர். குலோத்துங்கன் புலவருக்கு அரும் பெரும் பரிசில்கள் பலவற்றை வழங்கினான். சோழன் தேவியும் அரங்கேற்றத்துக்குப் போந்திருந்து செவிகுளிரக் கேட்டு மன முவந்தாள்.

ஒட்டக் கூத்தர் வாடிய முகத்துடன் தமது மனைக்குச் சென்று ஒருவருடனும் உரையாடாமல், மஞ்சத்தின்மீது சாய்ந்து கிடந்தார்; இரவு பத்து நாழிகை யாகியும் உணவு கொள்ளப் போந்திலர். அதனால் அவர்தம் இல்லக்கிழத்தி அவர் இருப்பிடம் சென்று அவரை உண்ணுமாறு வேண்டினள். அவர், தமக்கு ஊண் விருப்பமில்லையென்றும், அதனால் அன்று பட்டினி கிடத்தலே தகுதியென்றும் உரைத்தனர். அது கேட்ட தலைவி, சிறிது பாலேனும் பருக வேண்டுமென வற்புறுத்தலும், கூத்தர், புகழேந்தி பாடிய நளவெண்பாவின் இரசத்தைப் பிழிந்து கொடுத்தாலும் எனக்கு இப்போது வேண்டாம்,' என்றனர். அச்சொற்களைக் கேட்ட துணைவி தம் கொழுநருக்கு நளவெண்பாவிலுள்ள விருப்பத்தை உணர்ந்து, அந்நூலைப்பற்றிப் பலவற்றையும் அவரிடம் கேட்டு மகிழ்ந்தாள். வெளிப்படையாக நளவெண்பாவிற்குக் குற்றங்குறை கூறினரேனும் அதன் உண்மை இயல்பைக் கூத்தரைப் போலத் தெரிந்து நுகர்ந்த கல்வியறிவும் நுண்ணறிவுமுடையார் வேறு எவரும் இலர்.

'புலமிக் கவரைப் புலமை அறிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்'

என்பது பழமொழி யன்றோ?

இந்நிகழ்ச்சியைக் கூத்தர் மனைவி அரசிக்கு உணர்த்த, அரசியால் புகழேந்திப் புலவரும் அரசனும் அறிந்தார். அன்று முதல் புகழேந்தியாருக்குக் கூத்தர் மாட்டு இருந்தவெறுப்பு நீங்கிற்று. கூத்தரும் புகழேந்திப் புலவரை விரும்பத் தலைப்பட்டனர். இச்செவ்வியில் குலோத்துங்கன் இவ்விருவருக்கும் நேசப் பான்மையை உண்டாக்கும் பொருட்டுப் பலவாறு முயன்று வந்தான். அவன் செய்கையால் இருவரும் கெழுதகை நண்பராயினர். 'கல்லாதார் இணக்கத்தினும் கற்றூர் பகை' சிறந்ததென்பது பொருளுரையே யாகும்.

இவ்விரு பெரும் புலவரும் தம்முள் மனமொத்து வாழ்ந்தமையான் சோழன் அவை மிகச்சிறந்து விளங்கியது. அவர்கள் பாடும் நாட்செய்யுட்கள் சொற்சுவை, பொருட்சுவை முதலியவற்றால் நனியோங்கிச் சோழனையே யன்றி அவைக்களத்தினர் யாவரையும் மகிழ்வித்தன. இவ்வாறு இவர் வாழ்ந்து வருங்கால் ஒருகால் சோழன், **திருநெய்த்தானம்** என்னுஞ் சிவதலத்துக்குச் சென்று வழிபாடு புரிந்தபோது அவனுடன் சென்ற புகழேந்திப் புலவர்,

தற்கோ லிப்பூ சற்பா சத்தே தப்பா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றூ நெட்டோ டைப்பா ரைச்சேன் மைப்பூ கத்தே றித்தா
விப்போய்
நெற்றூ ஞற்றூ லைப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.

என்றொரு யாப்பிசைத்து ஐயனைப் பரவி மெய்ம்மயிர் நிறுத்தினர்.

மற்றொருகால் **திருக்குறுங்குடிக்குச்** சென்று ஆங்கெழுந்தருளியிருக்கும் பெருமான் மீது,

எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித தம்பாவுஞ்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

என்னும் இனிய கவி இசைத்து மனங் கசிந்தனர்.

பின் ஒருகால் அரசன் இரவில் பவனி வரும்போது புலவரை நோக்கி, 'குடை நிழலில் இரவில் பவனிவருதல் தவறன்றோ?' எனக் கேட்கப் புலவர் அவனை நோக்கி, அது தவறன்றெனக் காரணங் கற்பித்து,

அண்ட மீதுலவி வாழும் அருந்ததிக் கற்பா ளுன்னைக்
கண்டதா லுவகை யெய்திக் கற்பழிந் திடுவ ளென்றே
எண்டிசை புரக்கும் வேந்தாய் இரவினிற் கவிகை நீழல்
கொண்டுமா நடாத்து மாறு குலோத் துங்கா நீதி தானே.

என்று பாடினர்.

அரசன் துலாபுருட தானஞ் செய்தபோது புலவர் பாடிய செய்யுள் :

பொருந்த ஒருதட்டு மேருப் புகினும்
இருந்த திருத்தட் டெழாதால்—திருந்து
மறைபுக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைபுக்க தெவ்வாறு நீ.

இங்ஙனம் புகழேந்திப் புலவர் பன்னெடு நாட்கள் சோழ நாட்டிலே உறையூரிலே இனிது வாழ்ந்திருந்து, பின் பாண்டிய நாட்டை அடைந்து, அங்கே சில திங்கள் வைகினர். அப்போது ஒருநாள், பாண்டியன் கல்வித்திறத்தைக் கண்டு வியந்து,

எண்ணீர்மை நூலுக் ககத்திய ஞமிவன் என்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றி விரகல்ல வேயிவ் வியனுலகின்
பண்ணீர்மை தேரும் பராக்கிரம மாறன் பதங்கழுவுந்
தண்ணீர் குடித்தல்ல வோபோதி யோனும் தமிழ்கற்றதே.

என்றொரு பாட்டியம்பி அவனை இன்புறுத்தினர்.

பிறகு, புகழேந்தியார் தமது பிறந்தகமாகிய பொற்களந்தைப்பதி புகுந்து, தம் வாழ்நாட்களின் இறுதிக் காலத்தை, 'மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாக' 'நாராயணாயநம வென்று' நவின்று நவின்று நித்தியானந்தப் பெருவாழ்வை அடைந்தனர்.

இவர் கொற்றந்தைப் பதிக்குத் தலைவன்மீது பாடிய கவி:

நையும் படியென் கொற்றந்தை நங்கோன் செஞ்சி வரைமீதே
ஐயம் பெருநுண் ணிடைமடவாய் அகிலின் தூபம் முகிலன்று
பெய்யுந் துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே.

The Royal Printing Works, Madras, August 1931—D—I.